# மடு மாதா காவியம்



-அமுது-

JPL
C7183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21-7-91

வெலிங்டன்
நூலகம் -

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத மடு மாதா

## காவிய மல்லிகை

சிறப்பு நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



7183 CC
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
156901

சொல்லின் செல்வன் புலவர்மணி
- அமுது -
அன்பரங்கம்
இளவாலை

KOHA
JPL

வெளியீடு: தமிழ் அரங்கம்
இலண்டன்

156901 CC.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MADHU MATHA KAAVIYAM**

(LYRICS TO OUR LADY OF MADHU)

Author: Poet Amuthasakaran Adaikalamuthu -Amuthu-

Copy Rights: Author

Publishers: Tamil Arankam.(U.K)

Type Setting & Artwork: Anpu Graphics and Systems Ltd. (London)
44 (0) 181 404 0044

Printers: Lanka Publishing House. (Colombo - 13)
Tel: 075 343098

Contact: Amuthu
87 Hazelmere Walk
Northolt Middlesex
UB5 6UR U.K
Tel: 0181 845 0887

**மடுமாதா காவியம்**

ஆக்கம்: கவிஞர் - அமுது - (அமுதசாகரன் அடைக்கலமுத்து)

பதிப்புரிமை: ஆசிரியர்

வெளியீடு: தமிழ் அரங்கம். லண்டன்

வரையும் வடிவமைப்பும்: அன்பு வரையம். லண்டன்

அச்சுப்பதிவு: லங்கா பப்ளிஸிங் ஹவுஸ்.
கொழும்பு - 13, தொ.பேசி 075 - 343098

தொடர்புகள்: அமுது அன்பரங்கம் இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருதமடு மரியமலர்

மருதமடுச் செபமாலைத் தாயே! என்றால்
வாய் இனிக்கும்! மனம் இனிக்கும்! வசந்தம் பூக்கும்
திருமகளே! உன் மண்ணைத் தொட்டால், எங்கள்
சிந்தனையில் தூய்மைஎனும் தென்றல் வீசும்;
கருணைபொழி உன்முகத்தைக் கண்டால், கோடி
கவலையெல்லாம் பறந்தோடும்! கண்ணீர் தேங்கும்!
உருகியுனை நாம்பிரிந்தால் ஓடி வந்து
உள்ளத்தே உறைந்திருந்து அணைப்பாய் அன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலடியில் காவியம்

விண்ணவரும் தலை குனியும் மருதமடுத் திருவே!

வெண்ணிலவின் முகங்காணச் சுகமளிக்கும் வடிவே!

எண்ணிடவே தித்திக்கும் இனிய பெயர் அமுதே!

ஏழிசையில் காணாத பண்கடந்த சுவையே!

பெண்களிலே அரசியெனப் பேறுபெற்ற சுடரே!

பிரியமகன் எமக்களித்த பேரிரக்க மெழுகே!

நண்ணிவந்தேன் காலடியில் காவியத்தை அணிந்தேன்!

நறுமணத்தின் முல்லைமலர்க் கொடியாக்கு நதியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

என்னருந் தாயே! இலக்கியக் கடலில்
இரண்டொரு அடிகள் யான் வைத்துத்
துன்னியே இறங்க இளமையில் எனக்குச்
சொலற்கரும் உதவிகள் செய்தாய்
உன்னிலே மடுத்தாய் ஊற்றிய அன்பில்
ஒருதுளி பேனையால் தொட்டு
அன்னையே சேதுப் பிள்ளையுன் அடியில்
அன்புடன் காணிக்கை வைத்தேன்.

* * *

என்னருமை உடன்பிறவி அன்பின் தென்றல்
இலக்கியத்தில் குளிப்பதற்குத் தொட்டில் கட்டிப்
பொன்னுளத்தின் பூத்தூவித் தம்பி என்று
பூங்குரலில் எனைஅழைத்துக் கவிதை என்ற
விண்ணுலகை முற்றத்தில் விரித்து வைத்து
வெள்ளிகளை மலராக்கி விளங்க வைத்தோன்
சின்னப்பு நாயகமாம் சிந்தைச் செல்வன்
திருவடியை நினைந்திட்டேன் மலரை நீட்டி.

– ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவணக்கம்

ஆடிவரும் நதிகளெல்லாம் நீ அணைக்கும்
கைகள்
அவை தொடங்கும் மலைகளெல்லாம் உன்மோன
நிலைகள்
கோடியெனும் விண்மீன்கள் நீ பார்க்கும்
கண்கள்
குளிர்காற்றும் மழைபனியும் உன் அருளின்
துளிகள்
காடுவயல் பாலை வெளி கால்பதிந்த
தடங்கள்
கனிமதுரப் பூஞ்சுனைகள் உன் இனிய
மொழிகள்
தேடிவரும் என்கைகள் நீ இறங்கும்
படிகள்
சிந்தையென்ற குடிலினிலே வந்தருள்வாய்
திருவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆயர்மணி இரா. யோசேப்பு அவர்களுக்கு அஞ்சலி



கண்டவுடன் புன்னகைப்பூச் செண்டை நீட்டிக்
கருணையுடன் எமை அணைப்பார்; கனிந்த சொற்கள்
தொண்டர்களின் தொண்டனென வாழும் நெஞ்சம்
துயர் துடைக்கும் கை விரல்கள்; தூய கங்கை!
எண்டிசையும் பிறரன்பின் நீரைப் பாய்ச்சி
இயேசுவின் பயிர் வளர்க்கும் சேவைச் சீமான்;
அண்டி வந்தோர் குடை நிழலாம் மடுத்தாய் கால்கள்
அகலாத ஆயர்மணி அடிகள் தொட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பிலும் இனிய கவிதை

## சிறப்புப் பாயிரம்

***நேரிசை ஆசிரியப்பா***

சந்தனப் பொதிகைத் தமிழ்ப்பூந் தென்றல்
இந்து கொழிக்கும் எழின் முத்தம் –தேவர்
ஏற்றி எடுக்கும் காமதேன் பசுக்கள்
போற்றும் சுகபெல பொற்சீந்தில் பொலிந்து
நீற்றிய தங்கம் நிகர் நெடுந் தீவின்
கோதகல் குணதிசைக் கோத்திரக் குரிசில்
ஆதவன் போன்று அருந்தமிழ் மலரை
நீதமும் அலர்த்தும் நிறைமனச் செல்வன்
வித்தியா தான விழுப்பொருள் வள்ளலாய்
சக்திபல் நிறைந்த சதுரனாய் விதுரனாய்க்
கலையுயர் வித்துவான் கவினார் குற்றால
மலைவீழ் அருவி **சொல்லின் செல்வன்**
சங்கம் வளர்த்த **தமிழின் கங்கை**
திங்களைத் தடவும் **செந்தமிழ்த் தென்றல்**
கலைநிலம் போற்றும் **புலவர்மணி** எனப்
பலகலை விருதுகள் பாங்குடன் பெற்றோன்
**மாதா அஞ்சலி நெஞ்சே நினைவாய்**
**அன்பின் கங்கை அன்னை திரேசா**
**அமுதுவின் கவிதைகள் காக்கும் கைகள்**
ஆக்கிய மேதையோன் ஆயிரம் பாமலர்
பாக்கிய மான பைந்தமிழ்த் தாய்க்கு
பாதகமலம் சூட்டிப் பணிந்தோன்
அவன்தான்
பாற்கடல் அமுதின் பசுந்தமிழ் அமுதின்
பேரினைப் பூண்ட சீரறி வாளன்
மருத மடுவினில் வளஞ்சொரி யன்னை
கருதிடப் பக்தர் கற்றவர் போற்ற
மடுமாதா காவிய மலரைப் புனைந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்தெழு மாதா பக்தியே தூண்ட
வடித்தெடு தேனாய் வனப்புறு சொற் பொருள்
சுவையணி நயங்கள் சுரக்கும் ஊற்றாய்
நவநவ மான ஞானக் கருத்துகள்
பாவடி தோறும் தேன்வடி வகையில்
பாடி யளித்துப் பாசத்தின் மாதா
சேவடி வைத்தான்; திசைகள் தொறுமிப்
பாவலன் நாமம் பல்லாண்டு
வாழ்க வாழ்க வளர்மதி யெனவே

நெடுந்தீவு கிழக்கு
கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்
19.03.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவரின் பொன்னுரை

தெய்வத் தமிழின் தொன்மை யுணர்ந்து
தேனாய்க் கவிதை பொழியும் புலவன்
மெய்யுய்த் துணர்ந்த முன்னோர் பெருமை
மேலாய்ப் பரவித் தொழுநல் **அமுது**
வையத் தொளியாய் விரிந்த இறையின்
வாழ்வைப் புரிந்து அதனுள் நனைந்து
மைவற்றாத பேனா கொண்டு
மனப்பற்றோடு வரைந்த ஓவியம்
பொய் பற்றாத புகழ்சேர் மடுவிற்
புதுமை செய்யும் மாதா காவியம்
கைப்பெற்றோர்கள் கண்பெற்றோராய்க்
கன்னித் தமிழின் கவினிற் குளிப்பர்
நெய்பற்றாத தீயாம் நீதி
நிகழ்த்தும் தர்ம நெறி காண்பாரே!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

அன்புடன்
புலவர்
நல்லதம்பி சிவநாதன்
இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கூடை

மடு மாதாவை நினைக்கும் போதே நெஞ்சில் இனிக்கிறது.

மடுவுக்குச் சென்று அந்த மண்ணை முத்தமிட்டால்......... உடனே ஒரு தெய்வீக நாதம் உடலில் பரவிவிடுகிறது.

கண்ணாடிக் கூட்டுக்குள் கருணைமுகம் காட்டும் அந்த அன்னையை முன்னால் காணும்போது சுவர்க்கத்தின் ஒருமூலையில் இருப்பதுபோல் உணர்கின்றோம்.

ஈழ மண்ணில் பிறந்தவர்களுக்கு மடு மாதா என்றால் போதும். ஓர் இரத்தபாசம் சுரந்துவிடுகிறது. இது பரம்பரைவியாதி.

''கடவுளைக் காண வேண்டுமென்றால் தாயின் காலடிகளில்தான் காணலாம்'' என்றார் ஒரு பெரியார்.

அவர் பெற்ற தாயைத்தான் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனால் மடுமாதாவின் அன்பு, ஆதரவு, கருணை, அருள், கொடைகள்...... எல்லாம் இமயமலை அடிவாரத்தில் உற்பத்தியாகி ஓடித்திரியும் நீர்த்தாரைகளை நினைவூட்டும்.

காது கொடுத்துக் கேட்டால் நயாக்கரா நீர்வீழ்ச்சியின் இரைச்சல் கேட்கும்.

அந்த தயாநிதியின் அருட் பெருக்கில் முழுகாதவர்கள் இல்லை. அந்த அற்புதமான அன்னை யின் காலடிகளில் சூட்ட ஒரு காவியம் எழுதினேன்.

சிறந்த கவிஞர்கள் தமிழ் நாட்டில் மரபு வழிக் கவிதைகளையே கைவிட்ட காலம் இது.

இலக்கணத் தேர்ச்சி பெற்ற கவிஞர் வைரமுத்து, வாலி, அப்துல் ரகுமான் என்போர் கூட புதுக்கவிதைகளிலே தான் கைவரிசை காட்டு கின்றனர்.

ஆனால் ஈழநாடு, மரபை கைவிடாதபடியால்தான் அதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேச்சுத்தமிழே பிரமிக்க வைக்கிறது.
எனவே அடியேன் மரபுக் கவிதைகளிலே இக்காவியத்தை எழுதினேன்.
அன்னையின் காலடிகளில் கொட்டிக் குவித்திருக்கும் இந்தப் புத்தம்புதிய மலர்கள் ஒவ்வொன்றையும் கையால் எடுத்து கண்ணால் மணந்து பாருங்கள்!
அழகான வாசனை மலராயிருந்தால் அதனை அன்னைக்கே சாத்துங்கள்.
இந்தக் காவியத்தை ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன். THE REAL MARY BY Fr Malachy Cullen O. S. A. Ireland. என்ற நூலே என் காவியத்துக்கு மூல நூல். மூதறிஞரும் ஆயருமான தியோகுப்பிள்ளை அவர்களுக்குச் சில செய்யுள்களை நேரில் வாசித்துக் காட்டினேன். அவருடைய ஆனந்தம் முகத்திலும் கண்களிலும் வழிந்தது.
ஒருசில பகுதிகளை வாசித்த என் பிரிய குருமகனார் பேராசிரியர் கலாநிதி சந்திர காந்தன் கூறிய குறிப்புகளை நான் பொருத்தமானவையெனக் கண்டுகொண்டேன்.
மடுமாதா யாழ்ப்பாணக் கிராமங்களுக்கு வந்தபோது மடுமாதாபேரில் நான் பாடிய பாடலுக்கு முதலாம் பரிசு கிடைத்தது.

*மருத மடுப்பதியில் கருணை மழை பொழியும்*
*திருமகள் வருவீரே*

என்று அப்பாடல் தொடங்கிற்று.
அது கிடக்க,
சென்ற ஆண்டு லண்டன் பட்டின மண்டபத்தில் அரங்கேறிய 'அன்பின் கங்கை அன்னை திரேசா' என்ற நூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைத்தவர், என்றும் என் அன்புக்குரிய **சிவகுமாரன்** என்பவர். அவரே இந்நூலையும் வடிவமைத்தார். கைகளும், கண்ணும், கணனிப் பொறியில் ஊரும் போதெல்லாம் காவியம் காவியம் என்று உதடுகள் பூச்சொரிந்துகொண்டேயிருக்கும். தடித்த சைவப் பெருமகனாயினும் மாதாவிலும் காவியத்திலும் பற்றும் பாசமும் கொண்டவர். அவர் அன்பு பாகைமானியால் அளவிடத்தக்கதன்று.

**ஆயர்மணி இரா. யோசேப்பு** அவர்கள் முல்லைக்குத் தேரைக் கொடுத்த பாரியைப்போல் எனக்கு உதவிபுரிந்தார்கள். அச்சுப் பணிகளுக்கு அவரே பொறுப்பேற்றார். கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம் அவர்கள் ஈழத்தின் சிறந்த கவியரசர், மூதறிஞர். எனது வழிகாட்டி. அவருடைய சிறப்புப் பாயிரம் என் காவியத்துக்குப் பொட்டுவைத்திருக்கிறது.

இலண்டனில் வாழும் புலவர் சிவநாதன், ஈழத்து முதுதமிழ்ப் புலவர்மணி நல்லதம்பி அவர்களின் மைந்தன். எனது காவியத்தைப் படித்துவிட்டுப் பாராட்டி எழுதிய கவிதை என் உள்ளத்தில் பூத்தூவியது. புலவனின் பொன்நெஞ்சம் கவிதை வரிகளில் பூங்குழல் ஊதுகின்றது.

மருதமடுக் காவியமல்லிகை மலர்ந்த வரலாறு இதுதான்.

இதோ அந்தப் பூக்கூடை......

அன்பு நெஞ்சத்துடன்
புலவன் -அமுது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவை அடக்கம்

இலக்கணம் என்பார் எழுத்தொடு சொல்லும்
பொருளுடன் யாப்பணி அறியேன்
இலக்கியக் கடலின் கரையிலே தத்தி
இரண்டொரு அடிகளே வைத்தேன்
தலைக்கனம் உடைய தமிழறிவாளர் என்
தமிழிலே குறைகளைக் கண்டு
விலக்கிட வேண்டாம் தமிழ்மொழி தொட்ட –
விரலினைச் சூப்பினேன் காப்பீர்.

பாற்கடல் நக்கும் பூனையாய் நினைந்து
பார்புகழ் காவியம் புனைந்தான்
நூற்கடல் கடந்த கம்பனே முன்னாள்
நோக்கிடில் யானெந்த மூலை?
வேர்க் கடல் ஆடும் பாற்கடல் விளிம்பில்
மிதக்குமோர் சிப்பியின் துளிநீர்
நோக்கியே வந்த அடைக்கலம் குருவி
நொந்திட எறிந்திடல் நன்றோ?

அணையினைக் கட்டும் அண்ணலின் சேனைபல்
ஆயிரம் *கவிகளினோடு
மணிவிழி அணிலும் மணலிலே புரண்டு
மயிரினைச் சிலிர்த்து அதைத்தூவிப்
பணியினைப் புரிந்த செயலினை அறிவீர்
பைந்தமிழ்ப் புலவர்க ளோடு
துணிவுடன் அணில்போல் வந்ததொரு கொந்தல்
சுவைத்திடில் துரத்துதல் அழகோ?

---

*கவிகள்: வானரவீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

பண்டித மணியாம் கணபதிப் பிள்ளை
பசுந்தமிழ்ச் சோலையில் திரிந்த
வண்டினில் ஒன்றாய் வளர்ந்தனன் அவர்தம்
வாக்கினில் மகரந்தம் உண்டேன்;
கண்டிடச் சிரித்துக் கையினால் அணைத்துக்
காவிய வயல்களைக் காட்டிப்
பண்டைய தமிழின் சுவைபிழிந் தளித்தான்
பாவலன், குரு, இள முருகன்

கங்கையாம் ஆறு கால்களைக் கழுவும்
கலைமணிப் பீடத்தில் இருந்து
திங்களாய் வாழ்ந்த *கணபதிப்பிள்ளை
செந்தமிழ் ஆய்வினிற் சிறந்த
தங்கமாம் செல்வ நாயகம், 'வித்தி'
தவத்தினால் நான் பெற்ற செல்வம்
பொங்கிடும் கவிதைக் கவிமணி 'ஞானி'
போற்றினேன் மனம்எனும் பூவால்

பேதுருப் பிள்ளை ஆதுலர்க் குதவும்
பேரருள் துறவியை மறவேன்
ஓதிடும் எழுத்துஞ் சொல்லையும் சொன்னார்
ஒளியிலே இலக்கியம் கண்டேன்
சீதள மதியாய்ச் செஞ்சொல்லிற் கவிதை
சிரித்திடும் என் அரும் *'ஞானம்'
பூதலத் தெந்தன் ஆற்றலாம் பொறியைப்
பொன்னென ஊதினன் போற்றி.

---

* பேராசிரியர் கலாநிதி கணபதிப்பிள்ளை. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பகுதித் தலைவர்

* ஞானம் கவியரசர் பி. மூ. ஞானப்பிரகாசம். மிருசுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# காப்பு

இருந்தாலும் எழுந்தாலும் நடந்தாலும் கிடந்தாலும்
பருந்தாகப் பறந்தாலும் பாயினிலே படுத்தாலும்
அருந்தாயே! உன்நினைவை ஒருகாலும் மறவாத
பெருந்தயவு தந்திடுவாய்! பிறிதெதையும் யான்வேண்டேன்.

### *சிறியேனைத் தொடு அம்மா!*

எங்கேநான் சென்றாலும் எத்தொழிலைச் செய்தாலும்
அங்கேநான் அழுதாலும் அயர்ந்தாலும் சிரித்தாலும்
கங்காகச் சுழன்றாலும் கண்மூடி விழித்தாலும்
செங்காந்தள் விரலாலே சிறியேனைத் தொட்டிடம்மா.

### *கவிதைக்கு இடுக்கண் வந்தால் தடுப்பாய்*

அடுக்கும் மொழிகள் செவி
        மடுக்கும் மணி முடிக்குத்
தொடுக்கும் மலர்கள் சில
        பிடிக்கும் படி எடுத்தேன்
துடிக்கும் எனது நெஞ்சில்
        வடிக்கும் கவிதைத் துளி
அடிக்குள் இடுக்கண் வந்தால்
        தடுக்கும் படிக்கு வந்தேன்.

### *கவிதைஆடை நெய்ய சொல்லாகிய நூல்கேட்டல்*

கனிக்கும் சுவையை ஊட்டி
        இனிக்கும் படிக்குச் செய்யும்
பனிக்குள் குளிர்ந்த சொற்கள்
        உனக்குள் உறைந்த மாதே!
நினைக்கச் சிறந்த சேலை
        நெய்யும் தொழிலைச் செய்யும்
மனைக்குச் சிறந்த மங்கை!
        வனப்புக் கவிதை நெய்யும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசுரம்

**கண்ணீர் துடைக்கும் கைகள்**

நித்திலமே! அமைதிக்கோர்
நீரூற்றே! கனிவுள்ள
நெஞ்சே! ஞானப்
புத்தகமே! நம்பிவந்தோர்
புகலிடமே! வல்லமையின்
புயலே! பொறுமைத்
தத்துவமே! நம்பிக்கைத்
தாரகையே இடர்வந்தால்
தாங்கும் கையே!
சித்தத்தில் வெண்புறாத்
திருமகளே! மருதமடு
செழிக்கும் தாயே!

தேசத்தின் விடுதலைக்காய்
தேய்கின்ற மக்களுக்குத்
தீரத் தாயே!
நாசத்தால் வீடிழந்தோர்
நாடிழந்தோர் ஒளிகாணும்
ஞான பானு
பேசுகின்ற வல்லமைக்குப்
பிழிந்த கனற்பொறியே!
பிள்ளைப் பாசம்
வீசுகின்ற வெண்ணிலவே!
மெய்யோனின் மையமே
விண்ணின் மணியே

---

மெய்யோனின் மையம்: இறைவனை நடுவில் வைத்து வாழ்ந்தவள்.
(Woman centred in God.)

இப்பாடல்கள் Litany of Mary - A shortened version of the litany for the Marian year by Pax Christi U. S. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிவிழும் கண்ணீரைத்
துடைப்பதற்கோ துணியில்லைச்
சோக மானோம்
நள்ளிரவில் வழிநடந்தோம்
நடுக்காட்டில் உன்கருணை
நாமம் கேட்டோம்
பிள்ளைகளை அணைத்திடவே
பேரிரக்கம் சொரிந்தருளும்
பிரிய தாயே!
உள்ளமெலாம் பூரித்தோம்
உன்னடியில் கண்ணயர்ந்தோம்
உலக மாதா!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

வேறு

விண்ணதிரும் வெடிகளினால் குண்டால் துன்ப
விளைவுகளால் பகைமையினால் அடக்கும் போக்கால்
கண்மணியே அமைதிக்கோர் அரசி என்று
கால்நடையில் காடெல்லாம் கடந்து வந்தோம்
பொன்நாட்டில் நீதிசமா தானம் என்ற
புத்தகத்தை விரித்துவைத்துப் பாடம் சொல்லும்
எண்ணுகின்ற அமைதியின்வேர் ஈழ நாட்டில்
இறங்கட்டும் வசந்தத்தின் மலர்கள் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலின் குரல்

கன்னியர் மணியே போற்றி
    கருணையின் கடலே போற்றி
இந்நிலம் கண்ட பெண்கள்
    எவரிலும் சிறந்தாய் போற்றி
அன்னையே என்ற வாய்க்கு
    அமுதினைச் சொரிவாய் போற்றி
என்னிரு கண்ணே! கண்ணுள்
    இருக்கும் மாமணியே போற்றி.

சோலையின் கிளியே போற்றி
    சுகந்தரும் மலரே போற்றி
மாலையின் மதியே போற்றி
    வள்ளலைச் சுமந்தாய் போற்றி
ஆலையின் கருப்பஞ் சாறே
    அடைந்தவர் புதிய வாழ்வே
*பாலையின் தண்ணீர் ஊற்றே
    பண்ணினில் யாழே போற்றி.

சொல்லினில் நல்லாய் போற்றி
    சுகந்தரும் இசையே போற்றி
இல்லறத் தூய்மை என்றோர்
    இலக்கணம் வகுத்தாய் போற்றி
கல்லையும் தண்ணீர் ஆக்கும்
    கருணையின் இதயம் போற்றி
முல்லைக்கு வாசம் ஊட்டும்
    முத்தியின் கற்பே போற்றி.

---

*முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல் பழிந்து நடுங்கு துயர் உறுத்தும் பாலை என்பதோர் படிவம் கொள்ளும் – பட்டினப்பாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மடுமாதா

ஆவியொன் றில்லை என்னும்
அற்புதச் சிலையைச் செய்தோன்
பூவினில் கமலம் ஏங்கும்
பொன்முகம் புனைந்தான்; ஆங்கு
காவியங் கண்ணை வைத்தான்
கடிமலர்க் குமுதம் வைத்தான்
தேவிநீ கருணை வைத்தாய்
சிலையது நிலவின் தங்கை.

ஓவியம் வரைந்தார் இந்த
உலகத்தின் அந்த மெல்லாம்
காவியம் எழுதிப் பார்த்தார்
கற்பனை இமயம் சென்றார்
தேவியுன் சாந்தம், அன்பு
சிந்திடும் விழிகள், கற்பு
பாவியில் பாசம் முற்றும்
பார்த்தெவர் எழுத வல்லார்?

### மாதாவே! என்று சொல்ல

சிந்தையில் தாயெனும் தேன் சுரக்குமே
மைந்தனின் திருவடி மனதில் தோன்றுமே
அந்தமில் நன்மையும் அருளும் கூடுமே
எந்தனின் மாதாவே என்று சொல்லவே.

### செப மாலை

மந்திர மணியினை வாயில் ஓதிடச்
சிந்தனை மாடத்தில் செல்வி வாழுவாள்
எந்தையின் ஆசியில் இல்லம் பூக்களைச்
சிந்திடும் சோலையாய்ச் சிறக்கும் சாந்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு
### மாமரி என்ற பெயர்

மாமரி என்று சொன்னால்
வாயிலே பூவின் வாசம்
தூமணி வெள்ளி என்றும்
துறையினை இரவில் காட்டும்
சேமத்தின் வெளிச்சம் என்றும்
சிறந்திடு தலைவி என்றும்
நாமத்தில் கருத்துக் கொள்ள
நாவிலே இனிக்க வைத்தார்.

தூமணி: தூய மணிபோன்ற

மிரியம் என்ற எபிரேய மொழிச்சொல்லே மேரி என்றாயிற்று. இதனைத் தமிழில் மரியாள் என்பர். மாமரி என்பதும் அதே! இப்பெயருக்கு வெள்ளி (நட்சத்திரம்) என்றும், தலைவி என்றும், கலங்கரை விளக்கம் என்றும் பூர்வ கருத்துக்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. கன்னிமரி வாழ்ந்த புண்ணியபூமி ........ 1
2. மங்கையின் இளமை ........ 5
3. கிணற்றடியில் கேட்டவை ........ 11
4. துயரம் சுமக்கும் தோள் ........ 14
5. சக்கரியாசின் சந்தேகக் கோடு? ........ 18
6. வளன் என்னும் மாதவன் ........ 20
7. கன்னியைக் கண்டார்! காதல் கொண்டார்! ........ 22
8. பூமியை முத்தமிட்டது வானம் ........ 25
9. இரண்டாம் ஏவாள் ........ 28
10. மங்கையின் சங்கநாதம் ........ 30
11. புயலும் அமைதியும் ........ 32
12. மங்கல விழா ........ 35
13. கண்டனள் காந்தாரியை! ........ 37
14. நெஞ்சிலே அஞ்சலி ........ 41
15. மகிழ்ந்தது மண் ........ 44
16. பிள்ளை நிலாவும் வெள்ளை நிலாவும் ........ 46
17. தென்றல் கேட்ட திருப்பாடல் ........ 48
18. நீலவானில் காலக்குரல் ........ 51
19. முடிவேந்தர் மூவர் ........ 53
20. நூல் வணங்கினோர் கால் வணங்கினர் ........ 58
21. எகிப்து நாட்டில் இளங்குருத்து ........ 61
22. புன்னகை மன்னன் ........ 63
23. காணவில்லைக் கண்மணியை ........ 67
24. பதினாறு வயதில் ........ 71
25. மாதவன் மறைவு ........ 72
26. நதிக்கரையில் ஞானநிலா ........ 74
27. காலடியில் கண்ணீர் ........ 77
28. பரிவும் பிரிவும் ........ 79
29. சிந்தனை அலைகள் ........ 80
30. ஆற்றில் திருமுழுக்கு ........ 81
31. தண்ணீரில் தங்கச்சாறு ........ 82


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. அன்றும் அன்னை இன்றும் அன்னை ........................ 85
33. அன்னையே அறிவாள் ........................................ 86
34. திருவாசகம் .................................................... 88
35. என்தாயும் என் சகோதரரும் .............................. 91
36. எருசலேம் ஆலயம் இறைவன் இல்லம் ................ 95
37. துயரம் தொடங்கிற்று ...................................... 98
38. பிரிந்தார் ....................................................... 105
39. மாமரி மடியில் பூமகன் ................................... 106
40. கண்ணீரில் மிதந்த கல்வாரி ............................ 113
41. பாசமும் பந்தமும் ......................................... 114
42. அன்னையின் கடைசிப்படிகள் ............................ 116
43. ஈழநாடு ........................................................ 121
44. மலைநாடு ..................................................... 124
45. திருமலை மட்டுநகர் ........................................ 125
46. வன்னி நாடு .................................................. 127
47. மன்னார் ....................................................... 133
48. மருதமடு ...................................................... 141
49. அன்னை நிலா ................................................ 145
50. திருக்கோயில் தேன்விளக்கு ............................... 148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பாகம்
# தங்கத் தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கன்னிமரி வாழ்ந்த புண்ணியபூமி

ஞானத்தின் வரம்போ வானத்தின் மதியோ
மானிலத்தாய் என்பவள் முகமோ
கானத்தின் அமுதோ கலைகளின் தவிசோ
காவியக் கற்பனைக் கடலோ
தானமும் தவமும் தழைத்திடும் கோயில்
சரித்திரம் ஆடிய தொட்டில்
மானிட வாழ்வின் விவிலியம் நூலை
வடித்திட்ட வளந்தரு நாடே.

தவிசு: மெத்தை ஆசனம்  விவிலியம்: வேதாகம நூல்கள் (Bible)

தேனொடு பாலும் திசையெலாம் பாயும்;
செழிப்பினால் தீங்கனி உருளும்
வானுறு மதியம் நாட்டினைப் பார்த்து
மகிழவே முகத்திரை ஒதுக்கும்,
கானமும் தெய்வ ஞானமும் சொரியும்:
கலைதவழ் எருசேலம் கோவில்
தானமும் செபங்கள் தபங்களும் நிறைந்து
தவத்திரு முடியென விளங்கும்.

கோதுமை செய்வார், பழக்குலை கொய்வார்,
குன்றினில் ஆடுகள் மேய்ப்பார்
தீதிலா நெய்யுந் தொழிலிலே தங்கள்
திறமையைக் காட்டுவர் பெண்கள்
ஆதுலர்க் குதவி அன்பிலே விளைந்து
அன்றிலாய் நல்லறம் காண்பர்
தாதொடு நதிகள் வலம் வரும், அவற்றில்
தாளமும் பாடலும் கேட்கும்.

கன்னிமரியாய் வாழ்ந்த நாடு யூதேயா நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகளில் இருந்து வளங்களை அள்ளி
வடிந்திடும் ஆறுகள், பெருகும்
நிலைகளில் மதுரக் கனிதரும் மரங்கள்,
நெஞ்சிலே மணந்தரும் மலர்கள்,
கலைகளில் மிதக்கும் கோயிலின் அரங்கம்
காணக்கண் ஆயிரம் வேண்டும்
தலைகளில் சுமக்கும் கூடையில் கனிகாய்
தழைத்திடு வளத்தினைச் சொல்லும்.

## அன்றைய நாடு

### *சிறப்புக்கள் அழிந்தன*

அழிந்தது பண்பு, அயர்ந்தது வழமை,
அணைந்தது உண்மையாம் விளக்கு,
ஒழிந்தது நீதி, உறைந்தது கருணை,
உடைகள்தாம் உயர்ந்தன மேலே
வழிந்தது உதிரம், மண்ணினைப் பிடிக்க
வல்லமை வாளொடு மோதி
இழிந்தன மாந்தர் சிறப்புக்கள் அனைத்தும்
எங்கெங்கு பார்க்கினும் கொடுமை.

### *கொடுமைகள் கூடின*

மண்ணினைப் பிடிப்பார்; வளங்களைப் பறிப்பார்;
மக்களை அடிமையாய் மிதிப்பார்;
பெண்ணினை அணைப்பார்; பொன்பொருள் எடுப்பார்;
பெற்றவள் ஆயினும் மதியார்;
எண்ணிலாக் கொடுமை செய்குவார்; நீதி
ஈழமண் போலவே மாய
கண்ணினை இழந்த கபோதியாய் உலகில்
கயமைகள் விஞ்சிய காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## ஒளியிழந்த நாடு

அரசிடம் சென்று முறையிட என்றால்
அவனுக்கும் மதுவொடு மங்கை
கருதரும் வேத போதகர் நெஞ்சம்
கல்லறை திறந்தவா றிருக்கும்
ஒருவரும் நாட்டில் ஒளியினைக் காணார்
உலகமே இருள்மயம்; ஆனால்
திருவருள் வந்து தோன்றிடும் என்று
சிந்தையில் எண்ணினார் சான்றோர்.

## குறைகள் பெருகின

நீதியின் பீடம் கையினை நீட்ட
நெளிந்தது; அதனுடை முதுகு
வேதியர் கவனம் ஞானத்தின் வரம்பை
மிதித்தது; ஒழுக்கமுந் தவற
நாதியே அற்ற குடிகளின் வாழ்வை
நசித்தனர் நிலக்கிழார்; உண்மை
ஓதிடும் சமயப் பேரினால் நடந்த
ஓட்டைகள் ஒருதொகை யாமே!

நிலக்கிழார்: நிலச்சொந்தக்காரர்

## எரிகிற வீட்டில் பிடுங்கினதறுதி

அரசியல் குதிரை ஏறினோர், மக்கள்
அலறிட உரிமைகள் பறித்தார்
மரபியல் வழுவிச் சதிகளால் சமூக
மாண்பினைச் சிதைத்தனர் அந்தோ!
வரிசையில் பெரியோர் பணம் பொருள் கவர
வதைத்தனர் சிறியரை உழக்கி
எரிகிற வீட்டில் பிடுங்கின தறுதி
என்பதே அவர்களின் உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் தோன்றுவார்

பொன்னென முன்னோர் வழிவழி போற்றும்
புத்தகம் ஆகமம் ஆய்ந்தோர்
இந்நிலம் தன்னில் இறைவனார் தோன்றும்
காலமும் இதுவெனப் புகன்றார்
கன்னியின் வயிற்றில் தோன்றுவார் என்று
கசடற நிமித்திகன் சொன்னான்
என்னவே அந்த நாளினைப் பார்த்தே
இருந்தனர் விழிப்பொடு சிலபேர்.

நிமித்திகன்: வருவது செல்வோன்

## பண்ணையில் காந்தள்

தண்ணீரில் அன்றோ தாமரை தோன்றும்
சங்கிலே முத்துக்கள் பிறக்கும்
மண்ணிலே மைந்தன் பிறந்திடு முன்னே
வல்லபன் மங்கையைத் தெரிந்தான்
பெண்ணிலே முத்தாய், பிறப்பிலே தூய்மை
பெயரிலே மாமரி அரும்பை
எண்ணத்தில் வளர்த்தான் இயேசுவாம் சுடரை
ஏந்திடக் காந்தளும் மலர்ந்தாள்.

காந்தள்: காந்தள்மலர்　　கசடற: குற்றமில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. மங்கையின் இளமை

**தோற்றம்**



மெல்லிய நடையாள் அன்பு
விழியினாள் மதுரப் பேச்சாள்
அல்லொடு பகலும் ஈசன்
அன்புக்கே அடிமையானாள்
முல்லையின் சிரிப்பால் வீட்டின்
மோனத்தைக் குலைப்பாள், தாயார்
சொல்லிடும் வேலை எல்லாம்
துரிதமாய் முடிப்பாள் ஆங்கே.

**நாளாந்தப் பணிகள்**

காலையில் எழுந்து தெய்வக்
கானங்கள் பாடி, வீட்டைச்
சாலவே பெருக்கிக் கூட்டித்
தண்ணீரும் சுமந்து வந்து
நூலினை முறுக்கி ஆடை
நுண்ணிய தறியில் நெய்து
மாலையில் கோயில் சென்று
வணக்கமும் செய்வாள் மாதே.

**அவள் ஒரு முல்லை**

குணத்தினால் சிறந்தாள் உள்ளக்
கோயிலைக் கட்டி வாழ்ந்தாள்
பணத்தினால் உயர்ந்தாள் அல்லள்
பருவத்தின் அழகி என்பார்
கணத்திலும் பிறர்க்குத் தீமை
கருதிடாள், அன்பு செய்வாள்
மணத்தினில் வாச முல்லை
மலருக்கே ஒப்பாய் வாழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னியின் முந்திரிகைத் தோட்டக் காவல்

மலைகளின் பள்ளத் தாக்கில்
வைரங்கள் உருட்டிக் கோத்து
இலைகளின் நடுவில் தூக்கி
இளங்கொடி காதில் ஆடும்
குலைகளாம் திராட்சை, கொத்தக்
கூட்டமாய்க் கிளிகள் கூடும்
கலைத்திடும் குரலைக் கேட்டால்
களிப்புடன் கிளிகள் கூவும்

## தாயின் வலக்கரம்

சந்தைக்குப் போவாள் கூடை
சரித்திரம் சொல்லும், விற்று
வந்ததைக் கொடுத்துத் தாயின்
வலக்கரம் போல வாழ்ந்தாள்
தந்தைதாய் போற்றச் சுற்றம்
சார்ந்தவர் புகழக்கன்னி
சுந்தரத் தோற்றம் கொண்டு
தூய்மையின் லீலி யானாள்.

## அன்பு, தூய்மை, மகிழ்ச்சி

கண்ணாடி எங்கள் சாயல்
காண்பதற்(கு) எடுத்துக் காட்டும்
மண்ணில் இம் மாசில் லாத
மங்கையோர் ஆட்டுக் குட்டி
கண்ணெனச் சக்தி தேவன்
கடைந்த ஓர் கன்னி மாடம்
எண்ணிடும் அன்பு தூய்மை
மகிழ்ச்சியின் தொட்டில் அம்மா!

சக்திதேவன்: தூய ஆவியானவர். அன்பு, தூய்மை, மகிழ்ச்சி Love, Purity, Joy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உவமைக்கு ஒப்பில்லாள்

புண்ணிய மலர்கள் பூத்த
பூங்கொம்போ? அருளும் அன்பும்
எண்ணிடும் தூய்மை தோய்ந்த
எழில்தவழ் சிற்பம் ஒன்றோ?
கண்ணினில் ஆடும் பாவை
கன்னியாய் வந்தாள் கொல்லோ?
உண்மையின் வடிவம் ஈதோ
ஒப்பிலாள் உவமைக்கு ஐயோ!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

### தெய்வத்தின் பளிங்குவீடு

மீன்களோர் கோடி சூழ
மேகத்தில் இருந்து வீழ்ந்த
மான்களாம் மாதர் ஏங்கும்
மாமதி இவளோ? ஞான-
வான்களே அன்றே சொன்ன
வலம்புரி முத்தோ? மாசில்
தேன்துளி சிந்தும் கூடோ?
தெய்வத்தின் பளிங்கு வீடோ?

### இறைவனின் அற்புத அமைப்பு

மலைகளை உயர்த்தும் கைகள்
வளநதி வார்க்கும் கைகள்
இலைகளில் மொட்டில் பூவில்
எண்ணத்தைக் காட்டும் கைகள்
அலைகளை நெளிக்கும் கைகள்
அவனியை உருட்டும் கைகள்
கலைமகள் மேரி என்னும்
கன்னியைக் கடைந்த கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அவளுக்கு அவளே உவமை

திங்களை உவமை சொன்னால்
தேய்வுறும் வளரும் மங்கும்
மங்கலக் கமலம் என்றால்
வாடிடும் மணமும் குன்றும்
பொங்கிடும் கதிரோன் மாலைப்
பொழுதினில் மறைவான்; தெய்வ
மங்கைக்கு உவமை இந்த
மண்டலம் கண்ட துண்டோ?

### சந்திரன் தேய்வதும் வளர்வதும் ஏன்?

ஒளிதரும் மதியை இந்த
ஒப்பில்லா மரிபோல் ஆக்க
அழித்தழித் தெழுதி அந்த
அயனுமே களைத்தான் ஐயோ
பழியினைச் சுமந்தான் பாவம்
பாலொடு தேனைப் பெய்யும்
மொழியினுக் கெங்கே போவான்
மூவுல கத்தும் உண்டோ?

### இரண்டாம் ஏவாள்

ஏவையாம் ஆதித் தாயால்
எங்குலம் அடைந்த தீட்டுச்
சாபத்தைப் போக்க வந்த
சஞ்சீவி இவளென் பாரே
பூவினில் பெண்கள் இந்தப்
பொற்சுரங் கத்தில் தோண்டி
ஆவியில் பூசித் தம்மை
அணங்கென ஆக்கு வாரே.

---

மதியிலும் சிறந்த மாமரியின் வதனத்தைப் போலச் சந்திரனை ஆக்க நினைந்த படைத்தல் தொழில் புரியும் அயன், அழித்து அழித்து எழுதிக் களைத்தான். இது தற்குறிப்பேற்றவணி. அப்படி அமைத்தாலும் மாமரியின் இனிய மொழிக்கு என்ன செய்வான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *விடிவெள்ளி*

பத்தரை மாற்றுத் தங்கம்;
பசுந்தளிர் மலர்களாலே
சித்தர்கள் அமைத்த கூட்டு;
தேன் மொழி சிந்தும் மேகம்
உத்தமர் நினைக்க வந்து
உள்ளத்தே உறையும் கன்னி
நித்தியம் பெண்கள் போற்ற
நீள்கடல் தோன்றும் மீனே.

### *வான் மதி*

செம்மைசேர் ஆம்பல் ஒன்றில்
தெரிந்திடு தரளம் கோத்து
இம்மையில் கயல்கள் இரண்டும்
இசைந்திட வளைந்த வில்லும்
பொய்மையில் காள மேகம்
பொருந்திய மதியம் உண்டேல்
அம்மையின் திருமு கத்தை
அதுவெனச் சொல்லல் சாலும்.

### *முகம்*

அழகினுக் கழகு செய்யும்
அன்புசால் முகத்தைக் கண்டோர்
முழுமதி இவளே என்றார்
முறுக்(கு) அவிழ்ந் திப்போ பூத்த
எழில்பொழி கமலம் என்றார்
இன்னும் என்னென்னோ சொன்னார்
பழுதிலா உவமை எல்லாம்
பகிர்ந்திட இனிக்குந்தானோ.

---

சிவந்த ஆம்பல்மலர் வாய்க்கும், தாளம் எனும் முத்துக்கள் பற்களுக்கும், கயல்கள் கண்களுக்கும்,காளமேகம் (கரிய மேகம்) கூந்தலுக்கும் உவமையாம் என்க. ஒரு சந்திரன் அவை அனைத்தும் பொருந்திவந்தால் அது மாமரிக்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்கள்

கரும்பென்பர் கற்கண்டென்பர்
காய்ச்சிய பாலே என்பர்
நரம்பென்பர் நறவம் என்பர்
நளிர்மணி இளனீர் என்பர்
விரும்பிடும் அமுதம் என்பர்
விண்ணவர் கீதம் என்று
வரம்பினை வகுப்பார் ஆனால்
வாய்மைக்கும் உவமை உண்டோ.

## அயலுக்கு அணையாத் தீபம்

கூந்தலாம் மேகம் தூக்கும்
குளிர்மதி முகத்தைக் கொண்டாள்
நீந்திடும் கயற்கண் கண்டார்
நெஞ்சையும் உருக்கும் என்பார்
சாந்தமே பூத்த சாயல்
தர்மத்தின் புதிய வேடம்
ஆய்ந்து சொல் உரைக்கும் போக்கு
அயலுக்கோர் அணையாத் தீபம்.

---

நரம்பு: அவற்றை உடைய யாழுக்குச் சினையாகுபெயர். நறவம்: தேன், நளிர்: குளிர்ச்சி பொருந்திய, கரும்பு: அதன் இரசத்துக்கு இலக்கணை, வாய்மை: வாய்மொழி (உண்மை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கிணற்றடியில் கேட்டவை

வெண்ணிலவின் தங்கையர்கள் விரும்பி அங்கு வந்திடுவார்
நன்னீர்க் கிணற்றடியே நசரேத்தின் பத்திரிகை.

கருங்கல்லுக் கிணற்றோரம் கட்டிலென உட்கார்ந்தார்
வருங்காலத் தத்துவத்தில் மனதைப் பதித்தார்கள்.

தீட்டியவோர் சிலைபோன்றாள் தீபா பெயருடையாள்
பூட்டியதோர் புதுக்கருத்தைப் புகன்றிட்டாள் பூவையர்க்கு.

"பெண்ணின் வயிற்றினிலே பிறந்திடுவார் மனுமகனார்
மண்ணிலே இப்பேறுஎம் மங்கைக்கு வாய்த்திடுமோ?

ஆவணியில் திருமணமும் ஆகிவிடும் எந்தனுக்கு
தேவுலகோன் என்வயிற்றில் திருமகனாய் வருவாரோ?"

என்று சொல்லக் கேட்டவுடன் எதிர்நின்ற இரபெக்காள்
"நன்று சொன்னாய் உன்வீட்டில் நாதன் பிறப்பானோ?

உன்வீட்டில் இரண்டறைகள் மேற்கூரை வேயவில்லை
என்வீட்டில் நாலறைகள் இடவசதி மிகஅதிகம்"

சாராள் இதைக் கேட்டுச் சட்டென்று வாய்மடுத்து
"ஆராய்ந்து பேசிவிடு அறியாமல் வாய்திறந்தால்

தாகம் பிறந்தார்க்குத் தண்ணீர்கொண்டு போகுமுன்னர்
சோகமலை நீ சுமந்து சுடுகாடு தேடிடுவாய்.

பெரியகுரு என்மாமன் பிரியமகன் காதலி யான்
அரிய இடம் காத்திருக்க ஆண்டவனார் தள்ளுவரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்குலம் காக்கவரும் மகராசன் இவ்வூரில்
தக்கவரைத் தள்ளிவிட்டுத் ததிங்கணதோம் போடுவரோ?"

புன்னகையும் பொன்னுடலும் பூரித்த கன்னியர்கள்
பின்னிவரும் கருத்தனைத்தும் பேசிவரும் வேளையிலே.

வில்லினிலே அம்புகளாய் வெளிப்பட்ட வார்த்தைகளால்
மெல்லச் சிரித்து நின்றாள் மேரி என்ற பூவிளக்கு.

திருவாழ்வில் ஈடுபட்டுச் செகமீட்பர் வந்துதிக்க
ஒரு தாயாய் மாறுதற்கு உனக்கேனோ எண்ணமில்லை?

சொல்லிடுவாய் மேரிஎன்று சொற்சுவையாய்க் கேட்டதற்கு
புல்லினிலே நெருஞ்சி பூத்ததெனப் புன்னகைத்து.

தண்ணீர்க் குடத்தைத் தலையிலே தூக்கிவைத்தாள்
"எண்ணத்தைச் சொல்லுகிறேன் என்னருமைச் சாராள்கேள்.

பனிக்கட்டி போலே பரிசுத்தர் தேவமகன்
மனிதனாய்த் தோன்றவென்றால் மங்கையரில் யார்தகுதி?

பெண்களுக்குள் அப்பெரிய பேரருளைப் பெற்றவளோ
மண்ணிலே மாதரசி மலையில் விளக்கன்றோ?"

என்று குடம்தழுவி எட்டி நடந்து வந்தாள்
நின்றங்கே சாராள் நெஞ்சில் பலநினைத்தாள்.

குன்றுகளைத் தாண்டியந்தக் குவளைமலர் செல்கையிலே
பொன்றாத ஓர் எண்ணம் புகுந்ததவள் நெஞ்சினிலே.

வாழை அடிபோல வழிவந்த தந்தையர்கள்
நாளும் பொழுதும் கைதொழுத மெய் இறைவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கோ மணவாழ்க்கை என்றும் விருப்பமில்லை
உனக்கே நான் சொந்தம் உலகனைத்தும் சொந்தமில்லை.

உரிமைப்பொருளாக உம்மிடமே ஒப்படைத்தேன்
அருமை இறைவா! அடியாள்உன் காணிக்கை.

156901



T183CC
KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. துயரம் சுமக்கும் தோள்

*மாலைக்காலம்*

மாலையில் மலர்ந்த முல்லையின் மலர்கள்
வானமாம் குளமெலாம் சிதற
நீலவா னத்தில் அன்னமாய் மிதப்பாள்
நெஞ்சிலே தண்ணொளி நிரப்பச்
சாலவே அந்திப் பொழுதினில் பூத்த
சந்திரன் மேரியாம் நல்லாள்
சீலமார் தந்தை அருகிலே சென்று
திருவடி தொட்டபின் சொல்வாள்.

**மரம் பழுக்கும் காலம்**

*மகள்:*

உலகிலே தோன்றும் மீட்பரைப் பற்றி
உரைத்தனர் இளம்பெண்கள் இன்று
அலகிலா இந்தச் சேதிகள் அறிய
அவாவினேன் அப்பனே ஈண்டு
பலதலை முறையாய்ப் பரவிய நூல்கள்
பார்த்தவர் கேட்டவர் சொல்லும்
நிலையிலே பார்த்தால் மரம்பழுக் கின்ற
நேரமும் காலமும் இதுவோ?

**ஆதியில் நடந்த சேதிகள்**

*தந்தை:*

"ஆதியில் நடந்த சேதிகள் அறிவீர்
ஆதமும் ஏவையும் என்று
ஓதிடும் எங்கள் ஆணிவேர் ஆன
ஒப்பரும் தந்தைதாய் தம்மை
தீதுசால் பாம்பு செந்நெறி மாற்றித்
திருப்பிய வேளையில் இறைவன்
காதலாய் மக்கள் குலத்தினைக் காக்கக்
கருதியே சொன்னதைச் சொல்லும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் சொன்னார்

*மகள்:*

"பாம்பினைப் பார்த்து வஞ்சகப் பேயே
பகைத்தனை உன்குலம் என்றார்
தேம்பிடும் பெண்ணின் குலத்தினர் உனக்குத்
தீர்ந்திடாப் பகைவர்கள் ஆவார்
கூம்பிடும் மலரின் மெல்லிய பாதக்
குதிகளே உன்தலை நசுக்கும்
தீம்பழம் என்று மனிதரை மயக்கும்
சிந்தையால் நொந்தனை அந்தோ"

## எங்கே பிறப்பார்

*தந்தை:*

"கருத்திலே இறைவன் உரைத்திடும் தூய
கன்னியின் மைந்தனாய்ப் பிறப்பார்
நிருத்தமே அறிந்தோர் மோசெசும் பிறரும்
நீண்டகாள் முன்னரே சொன்னார்
பொருத்தமாய்ப் பெரிய குருவென்பார் மகளோ
பொன்பெறும் குலப்பெண்கள் தானோ
அருத்தமே அறியேன் நாய்க்குமேன் தேங்காய்
அம்மையே அறிந்திடு" என்றார்

நிருத்தம் - சோதிடம் மோசேஸ் - இறைவாக்கினர், அருத்தம் - கருத்து

## எப்படிப் பெண் அமைவாள்?

*மகள்:*

"மண்ணினில் சிறந்த அரசியே அவர்க்கு
வாய்த்தவள் என்றுதான் மனதின்
கண்ணிலே நினைப்பு அரும்பியது அப்பா
கருத்தொடு ஆய்ந்துநாம் நோக்கில்
அண்ணலாம் இறைவன் குணத்தொடு செல்வம்
அழகெலாம் அரிதினில் நிறுத்துப்
பெண்ணினைத் தேர்வான் உலகிலே பெரியோன்
பிழைவிடான் என்னநீர் நினைத்தீர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீரப்புலி என்பர்

*தந்தை:*

"எழுத்திலே கண்ட வாசகம் படித்தால்
ஈடேற்றம் ஈந்திட வருவோன்
வழுத்திடும் எல்லா மன்னர்க்கும் மன்னன்
வரிசையில் தாவீது போன்று
களித்திடும் வீரப் புலியெனச் சான்றோர்
கருதினர், உரோமரைச் சுருட்டி
ஒழித்திடு வாரே உண்மையில் நம்பும்
உயர்ந்திடும் இசறவேல் உலகில்"

வழுத்திடும் - சொல்லப்பெறும் இசறவேல் - இஸ்றாயேல் நாடு

### அவர் துன்பத்தின் தோற்றம்

*மகள்:*

"அப்பனே ஒன்றை அறிவினில் மறந்தீர்
அரியநம் நூல்களில் கண்ட
ஒப்பிலா உண்மை உரையிலே மீட்பர்
உலகிலே துன்பத்தின் வடிவம்
இப்புவி மக்கள் எவருமே அவரை
ஏற்றிட மறுப்பார் என்றிருக்கே
இப்பொழுது என்ன நினைக்கிறீர் என்று
இயம்பிடும்" என்றனள் மங்கை.

### துயரம் சுமக்கும் தூண்

*தந்தை:*

"சொல்வது சரிதான் துயரத்தைச் சுமக்கும்
தூணெனத் தோன்றுவார் உண்மை
வல்லவர் அரசர் நல்லவர் என்றும்
வாக்கினர் சொல்லிவைத் துள்ளார்
அல்லல்கள் அதிகம் அநீதியே செங்கோல்
ஆசையே இதற்கெலாம் மூலம்
நல்லவர் குறைந்தார் சமய போதகர்கள்
நாடினர் பணம்ஒன்றே தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கிய சென்ற வாக்கினர் சொல்லை
மனதிலே தூக்கிநாம் ஆய்ந்தால்
நோக்கிடும் மீட்பர் அப்பத்தின் ஊரில்
நூதன ஒளியென வருவார்
தாக்கிய மரமாய்ப் பூவொடு இலைகாய்
சரிந்திடும் உலகினை நிறுத்தி
ஆக்கமுந் தருவார் அரசனாய் இருப்பார்
அற்புத மனிதனாய்க் காண்பார்"

இடியாற் தாக்குண்ட மரம், பூ இலை காய் உதிர்ந்து சரிந்து வீழ்தல்போல உலகம் அக்கிரமங்கள் என்ற பாவ இடியால் தன் நிலையில் இருந்து தளர்ந்தது என்பது கருத்து.
மாக்கியசு: இறைவாக்கினர். அப்பத்தின் ஊர்: பெத்தலகேம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சக்கரியாசின் சந்தேகக் கோடு?

### குருப்பணியில் சக்கரியாசு தூபம் காட்டுதல்

விண்ணினை நினைந்தபடி வேதமொழிப் போதன்
தண்ணெனும் நறும்புகையைச் சன்னிதியில் பெருக்க
கண்ணெதிரில் வந்துநின்றான் கடவுளின் ஓர் தூதன்
எண்ணத்தில் கலங்கிநின்றான் இறைபணியின் அடியான்.

### அருளப்பு என்றொரு மைந்தன்

"உருகுமுந்தன் குரலொலியை ஒப்பிலான் கேட்டான்
பெருகிவரும் அன்பினொடு பிள்ளையொன்று காண்பீர்
அரியநிதி போலவர்க்கு அருளப்பர் என்று
திருவுடைய நாமத்தைத் தீட்டிடுவீர்" என்றார்.

### இயேசுவின் முன்னோடி

"ஐந்தடக்கும் முனிவனென அவனியிலே வாழ்வான்
சிந்தையிலே செதுக்கின்ற நல்லுரைகள் சொல்வான்
வந்தவர்கள் வாழ்வுயர வசந்தத்தை வீசி
மந்தைகளை மேய்ப்பவரின் வழியில் முன் செல்வான்"

### சந்தேகக் கோடு

"எப்படியான் இவ்வுரையை ஏற்பதென அறியேன்
சொற்படியே கேட்பதற்கோ சோர்வடைந்த முதியோன்
கற்புடைய மனையாளும் காலத்தால் முதிர்ந்தாள்
செப்படிவித் தைகளாகத் தேறிடுமோ" என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஊமையாய் இருப்பாய்***

“விண்ணகத்தில் என்தலைவன் விளம்பியதைச் சொன்னேன்
உன்னிறைவன் உரைத்திலே உறுதிகொண்டா யில்லை
உண்மைநிலை காணும்வரை ஊமையென வாழ்வாய்
திண்ணமிது தேவுலகின் தூதன்நான்” என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. வளன் என்னும் மாதவன்

**நீதிமான்**

மாசிலா மனத்தின் சேக்கை.
மன்னவன் தாவீ(து) என்று
பேசிடும் குலத்தில் பூத்த
பெருமகன்; நீதி மானாய்த்
தேசத்தில் புகழும் பெற்றோன்;
சிந்தையில் சொல்லில் தூயோன்;
ஈசனார் தெரிந்த செல்வன்
எளிமையில் இனிமை கண்டோன்.

**சான்றோன்**

அறக்கடல் வளர்க்க என்று
ஐயனார் தெரிந்த சீலன்
குறைக்குடம் போன்றோர்க் கெல்லாம்
குளிர்ந்தநீர் ஓடை, ஞான
நிறைக்கொரு எடுத்துக் காட்டு
நெஞ்சத்தில் துறவு பூண்டோன்
உறக்கமே இன்றி மற்றோர்க்
குதவிடும் பண்பில் சான்றோன்.

**விரும்பும் நன்னூல்**

கண்டவர் போற்றும் செம்மல்
கருணையின் தோழன்; கேண்மை
கொண்டவர் விரும்பும் நன்னூல்;
கோயிலாய் நாட்டைப் பார்ப்போன்;
அண்டையில் இருந்து வந்த
ஆதிக்க வெறியர் நீங்கிப்
பண்டைய வாழ்வு தோன்றப்
பயன்தரும் மணிகள் நட்டோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தன்

இருட்டினில் வெளிச்சம் போன்றோன்
இல்லையே என்றோ சொல்லான்
அருட்குணம் காய்த்த பண்ணை
ஆசையை அழித்த சித்தன்
உருப்படி நீதி வாழ
ஊரினில் குரல் கொடுத்தோன்
சிரிப்பொடு துன்பம் காண்போன்
செஞ்சொலின் கவிதை போன்றான்.

### அறநெறி வாழ்வோன்

உள்ளத்தில் உறுதி பெற்றோன்
ஒணானாய்க் கருத்தை மாற்றான்
அள்ளிடும் நிதிதந் தாலும்
அறநெறி திறம்பாச் செம்மல்
கள்ளமும் கரவும் பொய்யும்
காணவே நாணும்; மக்கள்
உள்ளத்தில் அவன்பேர் வாழும்
ஊரிலே சான்றோன் என்பார்.

---

இடுக்கண் வந்தால் சிரிக்க.... திருக்குறள். சான்றோன்: சால்பு என்ற பண்பு உள்ளவன். அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை ஐந்து சால்பு ஊன்றிய தூண். தி. குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கன்னியைக் கண்டார்! காதல் கொண்டார்!

***சூசை நாதன், மரியமலரில் காதல்***

ஆற்றலும் வனப்பும் நல்ல
அமைதியும் அறிவும் பெற்றோன்
போற்றிடும் குணத்தைக் கண்டோர்
பொன்பெறும் என்பார் பொய்யோ?
மாற்றிலாத் தங்கம் போன்ற
மரியிலே பாசம் கொண்டு
தோற்றினான் அவளின் இல்லம்
சுகந்தநன் மலரும் கொண்டே.

***மகளின் மனக்கருத்தைக் கேட்டல்***

"அரும் பெறல் ஐய! கேளும்
அடியன்யான் உங்கள் பெண்ணை
விரும்பியே இங்கே வந்தேன்
விருப்பத்தை அறியக் கூறும்
பெரும்புகழ் ஆசி கேட்டேன்
பிரியமாய் மகளை இங்கு
வரும்படி அழைத்துக் கேளும்
மனக்கருத்து அறிவோம்" என்றார்.

***மகளைக் கேட்டு, பின்னர் மறுமொழி***

பங்கமில் எண்ணத் தோடு அப்
பதியினில் வந்தோன் மீது
இங்கிதம் கொண்ட பெற்றோர்
இளவலை இனிது வாழ்த்திப்
பொங்கிய உவகை யோடு
பூரித்துப் பின்னோர் நாளில்
மங்கல மரியைக் கேட்டு
மறுமொழி சொல்வோம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இதயத்தில் இடம் இல்லை

கன்னியும் ஆங்கு வந்தாள்
கடைக்கண்ணால் வளனைப் பார்த்தாள்
பன்னிடும் உடலின் வார்ப்பும்
பயன்தரும் சொல்லும் பண்பும்
நன்னய அருளைக் காட்டும்
நயனமும் கணத்தில் கண்டாள்
என்னதான் இருந்தும் என்ன
இதயத்தில் இடமோ இல்லை.

வளன் - சூசைநாதன் நயனம் - விழி பன்னிடும் - சொல்லப்பெறும்

### வளன் தன் கருத்தைக் கூறுகிறார்

"எனதுயிர் செல்வம் வாழ்வு
என்பன யாவுந் தந்தேன்
நினதுசொல் ஒன்றே கேட்டேன்
நிலத்தினைப் பார்த்து நிற்கும்
வனிதையே! கருத்தைக் கூறும்
மலரினம் பூக்குங் காலம்
புனிதமாய் வாழ்க்கைத் தேரைப்
பூட்டுவோம் நாட்டில்" என்றான்.

### பின்னர் முடிவு கூறுவேன்

நெஞ்சினில் ஒருவன் வாழ
நேசத்தின் கோயில் கட்டி
அஞ்சலி அவர்க்குச் செய்து
அரங்கையும் தத்தம் செய்தாள்
எஞ்சிய(து) எதுவும் இல்லை
என்னதான் செய்வாள் பாவம்!
"கொஞ்சநாள் சிந்தை செய்து
கூறுவேன் முடிவை" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெற்றோர் கூறுகிறார்கள்

"மாசறு மகளே! நீரும்
வாழ்விலோர் துணையைத் தேடும்
தேசுறு மனையின் மாட்சித்
திருமணம் நீத்தார் இல்லை
பாசமாய் வந்தார் ஈண்டு
பசும்பொனாம் சூசை நாதர்
ஆசையாய்ப் பெற்றோர் சொல்லை
ஆய்ந்துநீர் பார்த்தல் நன்றே.

பெண்ணருங் கலமே என்று
பேசிடும் மகளே கேளாய்!
உண்மைக்கு இவனே! போற்றும்
ஒழுக்கத்துக் கிவனே! உள்ளத்
திண்மைக்கும் இவனே! நல்ல
தேசுக்கும் இவனே! நட்பின்
வண்மைக்கும் உரைக்கும் உந்தன்
வாழ்வுக்கும் இவனே! வாய்த்தோன்."

### சம்மதம்

தந்தைதாய் சொல்லைக் கேட்டாள்
சம்மதம் என்று சொன்னாள்
எந்தையே உனக்கே எல்லாப்
பொறுப்பையும் ஈந்தேன் என்றாள்
முந்தையோர் கோவில் சென்று
மோதிரம் மாற்றித் தேசச்
சந்ததி வழக்கம் போலத்
தனித்தனி வாழ்ந்தார் கண்டீர்.

---

எந்தையே: எனது தந்தையாகிய இறைவா. முந்தையோர்: முன்னோர்

சிறந்த பெண்ணை, ஸ்திரி ரத்தினம், பெண்மணி என்றல் போல பெண்ணருங்கலம் என்றலும் மரபு. மகளிர்க்கெல்லாம் ஓர் அணிகலமாய் இயற்கையழகு மிக்கவளாதலின், பெண் அருங்கலம் என்றார். பெண்ணருங்கலத்தொடு பிணைந்த பேரருள்– சிந்தாமணி பெண்ணருங்கலமிது பெறுவல் – சூளாமணி.

# 8. பூமியை முத்தமிட்டது வானம்

### உலகம் மகிழ்கிறது

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஆயிரமாய் பலநூறு வருடம் ஓடி
ஆதித்தன் ஒளியொன்றே அறிந்த பூமி
நேயமொடு புத்தொளியைக் காண வென்று
நீண்டநாள் தவமிருந்து, தனக்கு வந்த
காயமெல்லாம் மருந்திட்டு நோய்கள் தீர்ந்து
கவலையெலாம் போக்கிடலாம், இன்ப ஊற்றில்
தோய ஒரு காலம் உண்டு என்றே வாழ்ந்து
சுடரொன்றைக் கண்டதினம் சொல்லக் கேளும்.

### ஆண்டவன் தெரிந்த முல்லைமலர்

மாலைமதி போன்றிருந்தாள் மரியாள் அங்கே
வாடையொன்று மலர்மணத்தை வாரிவீசச்
சோலைமயில் வாசலிலே வந்தாற் போலத்
தோன்றி ஒரு வான்தூதன் அவளைப் பார்த்துச்
"சீலமுடன் அருள்நிறைந்த மரியே வாழ்க!
செந்திருவே பெண்களிலே சிறப்புப் பெற்றீர்
ஞாலமதில் ஆண்டவனார் வாசம் செய்ய
நலமுடைய முல்லைமலர் நீரே" என்றார்.

### திருமகளே நீர் கலங்க வேண்டாம்

மரியாளோ இளவயது மங்கை இந்த
வாழ்த்துரையின் கருத்தறியாள் மயங்க லானாள்
"திருமகளே! நீர் கலங்க வேண்டாம் உம்மைத்
தெரிந்தெடுத்தார் அருட்கடலார்; வயிற்றில் நீரே
கருத்தரித்து ஒருமகனைப் பெறுவீர் இயேசு
கருத்தாகப் பெயரிடுவீர் சான்றோர் ஏத்தும்
ஒருகடவுள் மகனாக உலகம் போற்றும்
ஒப்பற்ற அவர்ஆட்சி உறங்கா தம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண அறையில் கால்வையா மடந்தை**

"கணவனையே தொட்டறியாக் கன்னி யானேன்
கருத்துகளோ எப்படித்தான் பொருத்தம் ஆகும்
மணஅறையில் கால்வையா மடந்தை சொல்லும்
வாசகத்தின் பொருள் உமக்கு விளங்கும் "என்றாள்
"தணல் எரியும் வெய்யிலும் யெருச லேமில்
தண்முகிலின் நிழல்படியும் அறிவீர் அன்றோ?
மணமகளாய் இறைசக்தி பளிங்கில் மின்னும்
வல்லமையின் நிழல்படியும், வார்த்தை தோற்றும்"

**மங்கையின் மனவிருப்பத்தைக் கேட்கிறார்**

"தூயவனார் இறைமகனாய்ப் பிறப்பார், ஈசன்
சொல்லொன்றால் நில்லென்றால் உலகம் நிற்கும்
நேயமுள எலிசபேத் தென்னும் மாது
நீரறிவீர் வயதுசென்ற மலடி, ஆனால்
காயமதில் ஆண்மகவைத் தாங்கி ஆறாம்
மாசமிது" காணெனவே மங்கை கேட்டு
வாயடங்கி மனம்அடங்கிக் கண்ணை மூடி
மனதினிலே சிந்தித்தாள் மாலை வேளை.

**ஆம் - என்றுசொல்லும் ( கவிக்கூற்று )**

*அன்னையரே நீர்தயங்க வேண்டாம் இந்த
அவனியொடு மேல்உலகும் நீண்ட காலம்
எண்ணி எதிர் பார்த்திருக்கும் வசனம் ஒன்றை
இப்பொழுதே சொல்லிவிடும் இழுக்க வேண்டாம்
பொன் இதயக் கதவினிலே தட்டு கின்றோம்
பொழுதெல்லாம் போகிறது பொறுக்க மாட்டோம்
என்னபதில் ஆம் என்று சொல்லும் அம்மா
ஏவை பழி தீர எம்மேல் இரக்கம் காட்டும்.

---

* புனித பேர்னாட் என்பவரின் பாடலைத் தழுவி எழுதியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆம் என்றாள் கன்னி

சிந்தனையில் மூழ்கியபின் எழுந்து நின்று
    திருமுன்னே பெருமானார் சொல்லைக் கேட்டுக்
கந்தமலர்க் கைவிரித்து இதயத்தோடு
    கண்காணா ஆன்மாவின் கருத்தும் சேர்த்து
"எந்தையரே யான்உமது அடிமை, தங்கள்
    எண்ணம்போல் ஆகட்டும்" என்றாள் கன்னி
விந்தையொடு வானவனும் மறைந்தான் மேக
    விண்பூக்கள் நெற்பொரிபோல் வீழ்ந்த தம்மா

கந்தமலர் - வாசனைவீசும் மலர்    எந்தையரே - என் தந்தையரே

### வாக்குத் தத்தத்தின் பேழை

முன்னாளில் இறைவன்வா சகத்தைத் தாங்கி
    முறையாக அமைத்தவொரு பெட்டகத்தை
பொன்னாலே சோடித்து ஒழுங்கு பத்துப்
    போதனைகள் அதிலடக்கி வாக்குத் தத்தச்
சின்னமெனப் பேணிவந்தார், தெய்வம் வாழும்
    சீர்பெற்ற கட்டிலென மதித்தார், பின்னர்
கன்னியிவள் அமலன்சொல் ஏற்று இயேசு
    கனியமுதை தந்தனளே கருதில் ஒன்றே.

---

சேதீம் மரத்தால் செய்யப்பெற்றது, உள்ளும் புறமும் தங்கவேலைப்பாடுகள் அமைந்த பெட்டகம், வாக்குத் தத்தத்தின் பேழை எனப் பெயர் பெற்றது. அது மக்களின் மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியதாய் இருந்தது. ஏனெனில் அதில் இறைவனின் வாசகம் அடங்கி இருந்தது. அப்பேழையில் ஈசனிடம் பெற்றுக் கொண்ட பத்துக் கட்டளைகள் இருந்தன. கடவுள் மனிதரோடிருக்கிறார் என்பதற்கு அப்பெட்டகம் சான்றாயிருந்தது. அதை இறைவனின் சிம்மாசனம் என்று போற்றினர். அப்பெட்டகத்துக்கும் மாமரிக்கும் ஒப்புமையுண்டு. கன்னி மாமரி இறைவனால் சாசுவதமான வாசகத்தைத் தன்னோடு சுமந்து உலகத்துக்கு அந்தவாசகத்தால் இயேசுவைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இரண்டாம் ஏவாள்

***உலகில் குளிர்ச்சிமுத்தம்***

தெய்வமணி மாளிகையில் தீபமொன்று
வந்தது
திக்கெல்லாம் மழைபொழிந்து பசுமைநிறம்
தந்தது
வையகத்தில் வசந்தம்வீசி வாசலெல்லாம்
சிரித்தது
மரஞ்செடிகள் பூக்கள் சிந்தி மணத்தை வீசி
விரித்தது.

தீபம் - இயேசு கருவானார்

***ஏவாள் தந்தது சாவு***

ஏவாளென்ற முதலாம்மாது ஏற்றம் பெற்று
வாழ்ந்தனள்
இறப்பில்லாத இன்பசுக வாழ்விழந்து
வீழ்ந்தனள்
பாவையவள் இறையருளை அகந்தைகொண்டு
இழந்தனள்
பணிவில்லாத பெண்எமக்குச் சாவையள்ளி
அளந்தனள்.

***ஆண்டவன் பணிப்பெண்***

நீண்ட நாட்கள் சென்றபின்னர் நித்திலத்தைக்
கண்டனம்
ஆண்டவனின் அடியாளென்று அவள் பணிந்து
கொண்டனள்
தூண்டுகின்ற அன்பினாலே வார்த்தைதேர்ந்து
எடுத்தனள்
சுமந்துவந்து இன்பதுன்பம் கபாலமலை
தொடுத்தனள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**இசையின் இரு அந்தங்கள்**

மாமரியாள் ஆமென்றுஒரு வார்த்தையினை
அளித்தனள்
வல்லபரன் வளர்ந்துவர மகிழ்ச்சிவெள்ளம்
குளித்தனள்
பூமியிங்கு அன்பின்வேந்தன் சிலுவைமீது
தொங்கிடும்
பொழுதை எண்ணப் பிரிவின்சோகம் நெஞ்சில் வந்து
தங்கிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. மங்கையின் சங்கநாதம்

### *மரியாயி, எலிசபேத்து அம்மாளைச் சந்தித்தல்*

நீண்டவழி நடந்துவந்து எலிசபேத்து அம்மாளை
நேரில் கண்டு
தூண்டும் அன்பால் ஓடிவந்து கட்டியணைத் தன்புமுத்தம்
தோய்ந்தபோது
தீண்டும்அவள் கரு, உடலில் அகமகிழ்ந்து துள்ளியது
செந்தேன் வாயால்
"ஆண்டவனின் தாயாரே! பெண்களிலே பேறுபெற்ற
அன்பே வாராய்!"

என்றவளும் அழைத்திடவே எதிர்பாரா வாழ்த்தொலியால்
இதயம் பூத்துத்
தென்றல்வந்து தாலாட்ட திசைஅசையும் தேன்மலராய்ச்
சிந்தையாட
என்றென்றும் தான்தொழுத இறைவனரும் செயல்அனைத்தும்
இனிதாய் எண்ணிக்
குன்றெழுந்த தீபமென முகமலர்ந்து சங்கொலிபோல்
குறித்துச் சொல்வாள்.

### இதயமலரால் இறைவனை ஏத்துகிறேன்

"என் இதயப் பொன்மலரால் இறைவனையே ஏத்துகிறேன்
ஏழைப்பெண்ணைக்
கன்னலென இந்நிலத்தில் தெரிந்தெடுத்தார் கடைக்கண்ணாற்
கருணை காட்டி
மன்னுலகின் தலைமுறைகள் எனைப்பார்த்து வரம்பெற்ற
மாதேஎன்னப்
பன்னரிய வல்லபத்தால் அருஞ்செயல்கள் புரிந்தனனே
பாலில் தூயோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாழ்ந்தவர்களை உயர்த்தினார்

"நெஞ்சினிலே செருக்குற்றோர் அஞ்சிடவே சிதறடித்தார்;
நிகரில்லாமல்
குஞ்சரத்தில் குடைபிடித்தோர், அரியணையால் வீழ்ந்தார்கள்;
குரலுக்கு அஞ்சித்
தஞ்சமென வந்தடைந்தோர்க்கு அஞ்சல் எனக்கைநீட்டித்
தயவுகாட்டி
மஞ்சமதில் தாழ்ந்தவரை உயர்த்திவிட்டார் இறையரசின்
மகிமை என்னே!

### செல்வர் வீழ்ந்தார் வறியோர் வாழ்ந்தார்

"வன்பசியால் வருந்தியவர் இன்பமெல்லாம் நிரம்பிடவே
வாட்டம் தீர்ந்தார்
பொன்தவிசில் வாழ்ந்தவர்கள் வெறுங்கையாய்ப் போனார்கள்
புகழும் குன்றி
முன்னோர்க்குச் சொன்னதுபோல் அந்நாளில் ஆபிரகாம்
முறைமை வந்தோர்
எந்நாளும் பேரிரக்கம் பெற்றார்கள் அடியாளும்
இணைந்தாள் பாரீர்."

### துயர் துடைத்தாள்

மற்றோரின் துயர்துடைக்க இரங்குகின்ற மனிதர்களோ
மனிதப் பண்பு
பெற்றவர்கள் என்றுரைப்பார்; துயர்போக்க உடனிருந்து
பிரியமாக
உற்றதுணை புரிவோர்கள் உண்மையிலே தெய்வம் என்பார்
உலகம் போற்றப்
பற்றோடு பணிபுரிந்து வர்த்தியென உருகிநின்றாள்
பண்பின் பாவை

---

"Men resemble the gods in nothing so much as in doing good to their fellow creatures" Cicero.

"To pity distress is but human; to relieve it is god like- A. mann



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. புயலும் அமைதியும்

### *இல்லறம் நடாத்த ஓர் இல்லம்*

வல்லமைசேர் வளனென்பான் இல்லமொன்றை இனிதமைத்தான்
தெள்ளமுதைக் கொண்டுவந்து திருமணத்தின் பின்இருத்த
அல்லல்உறும் அலர்ஒன்றை அயலினிலே கேட்டறிந்தான்
நல்லிதயப் பூங்குளத்தில் நடுவினிலே கல்லெறியோ?

வளன்: சூசைநாதன், தெள்ளமுது: தெளிந்த அமுது போன்ற கன்னிமேரி, அல்லல்: துன்பம்,
அலர் – கன்னி கருவுற்றாள் என்ற வதந்தி.

### *விசாரணை*

என்றுமில்லாக் கவலையிலே ஈடழிந்த மனத்தூயோன்
கொன்றழிக்கக் கல்லெறியும் குற்றமிதைக் கோதை செய்யாள்
மன்றலிதை மனத்தாய்ந்து மனமிசைந்த மாதொருத்தி
என்றுமிதைச் செய்ததில்லை என்றவளின் இடம்போனான்.

மன்றல் – திருமணம்

### *கன்னியின் உண்மைக்கதை*

கன்னியவள் சந்தேகக் கண்களையே கண்டுகொண்டாள்
தன்இதயக் கதவினையே திறந்துசொன்னாள் தலைவனுக்கு
அன்னவனும் நம்பிஅந்த ஆண்டவனார் ஆவிபெற்ற
பொன்னியினை விலகிமணப் பூட்டினையும் கழற்றநின்றார்.

பொன்னி: அழகு மணப்பூட்டு: திருமண ஒப்பந்தம்

### *இரவில் தோன்றிய வானதூதன்*

மங்குல் வந்து மூடிடவே மாதவனின் நித்திரையில்
செங்கதிர்போல் வந்துநின்ற தேவுலகின் தூதனவன்
பங்கயத்தில் குற்றமில்லை பரமனவன் சித்தமிது
இங்குஇவளைப் பெண்ணாக ஏற்றருள்வீர் என்றுரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வானம் பூமியை முத்தமிடும்

"வானமது பூமியினை வந்தொருநாள் முத்தமிடும்
தேனமுத மானசுதன் திருவயிற்றில் தோன்றிடுவார்
பானுமதி மீனினத்தில் பார்கக்ஒளி வீசிடுவாள்
வானபரன் மீட்பரெனும் இயேசுபெயர் வைத்திடுவீர்."

பானு: சூரியன்

### கண் இரண்டாய் வாழ்வோம்

வேதனையில் கண்துயின்றோன் விடிந்ததுமே ஓடிவந்து
பூதலத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கிடவே "நாமிருவர்"
காதலுடன் காலமெல்லாம் கண்ணிரண்டாய் வாழ்வம் என்றான்
ஓதுகின்ற திருஒளியோ உள்ளமெங்கும் ஓடியதே.

### சத்தியத்தின் கோயில்

சித்திரத்தில் அங்கலர்ந்த செங்கமலம் ஒன்றினையே
ஒத்திருக்கும் உத்தமியாள் உத்தமனைக் கண்ணோக்கி
மெய்த்திருவை என்வயிற்றில் வைத்திருக்கும் இந்தஉடல்
சத்தியத்தின் கோயில்இந்தத் தவநெறியில் வாழ்வமென்றாள்.

### உடல் இறைவனின் ஆலயம்

தூயகன்னி யாயிருந்து தொடர்ந்துஅடியாள் இவ்வுடலை
நேயபரன் ஆலயமாய் நெய்வேத்தியம் செய்வதற்கு
நாயகனே உம்முடைய நல்லாசி ஈந்தருளும்
காயமிது கடவுளுக்கே கையளித்த கட்டிடமே.

### கோடுகளின் பாடம்

மாதவனார் கண்இமையால் மணிமணியாய நீர்உருளச்
சீதமதி போன்றவளின் திருமொழியை வியந்தவராய்
நாதனவர் எழுதுகின்ற நாடகத்தின் பாடமிந்தப்
போதினிலே நானுணர்ந்தேன் புனிதமுடன் வாழ்வமென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகத்தான மானிடர்

எண்ணத்தை உரைத்துவிட்டு எழில்நீல மலர்விழியைக்
கண்இமையாது அங்குநின்று கருத்துடனே கவனித்தான்
பண்ணொலியில் பரமனையே பாடிநின்றாள் பைந்தொடியாள்
மண்ணிதிலே இருவரிலும் மகத்தான மானிடர் யார்?

### கவிக்கூற்று

அவன்மொழி நயந்து கேட்டு
அரிவையும் உவகை கொண்டாள்
தவமுனி போலே வாழத்
தலைப்பட்டான் சூசை நாதன்
உவகையால் வானோர் கேட்டு
ஒளிமழை பொழிந்தார் ஆங்கே
அவனியில் உடலின் தூய்மை
அடைந்தவர் திறலோர் அன்றோ?.

திறலோர் - வீரம்பொருந்தியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. மங்கல விழா

### *மங்கை மாலை சூட்டினாள்*

காயும் வெய்யோன் கடலில் குளித்திட
நேயம் கொண்டவர் வீட்டில் நிரம்பினர்
தூய கன்னி துணைவற்கு மாலையை
ஆயர் பாட அணிந்தனள் வாழ்த்தினார்.

### *வீதி உலா*

சீத நாண்மலர்ச் செல்வியும் செல்வனும்
சோதி வெள்ளிகள் சூழ்ந்திட வந்தனர்
ஓதும் பாடல் நடனங்கள் ஓங்கிசை
வீதி எங்கணும் விழாஎடுத் தார்அரோ.

### *வீதியில் வாழ்த்து*

துள்ளி ஆடினர் சோபனம் கூறினர்
எள்ளில் எண்ணையாய் இன்புற வென்றனர்
தெள்ளு தேன்இசைக் கீதங்கள் பாடினர்
கொள்ளை இன்பமே கூடிக் குதித்ததே.

### *முடிசூட்டல்*

மன்னர் மாமுடி மாதவன் சூடினான்
அன்னம் ஆங்கோர் அரசிஎன் றாயினாள்
பொன்னின் ஆசனம் தன்னில் இருத்தினர்
இன்ன யாவுமே ஆங்கோர் இயற்கையே.

---

மணமகனையும் மணமகளையும் அரசகுடும்ப அணிகள் அணிவித்து அரசுக்கட்டிலில் இருத்திப்பாராட்டல் யூதகுலமரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மன்னன், அரசியை நாடியே
வீட்டில் ஆடை அணிகளும் வேய்ந்தனர்
ஏட்டில் யூதரின் பண்பை இயம்பிடில்
நீட்டி இன்னொரு காவியம் நெய்யலாம்.

### அன்பளிப்புக்கள்

கனிகள் பூக்கள் கவின்பெறு சாடிகள்
மணிகள் கோதுமை மாவிலே வார்ப்புகள்
துணிகள் கீழ்த்திசை வாசனைத் தூபங்கள்
இனைய அன்பளிப் பாகவே ஈந்தனர்.

### உள்ளம் மகிழ்ந்தனர்

தூய உள்ளம் மகிழ்ச்சியில் தோய்ந்தது
தேயம் ஆங்கவர் சிந்தைகள் தேருமோ
மாய வாழ்வின் மயக்கம் எனுந்திரை
போய பின்பு புனிதம் உறையுமே.

### இவள் யார்

வையம் கண்டஓர் மங்கையோ? மாமரி
*செய்ய தாமரை தோன்றிய செல்வியோ
துய்ய வண்கலைச் சொல்லின் மடந்தையோ?
ஐய முற்றனர் ஆர்கொல் இவளென.

கொல்: அசைச் சொல்

---

வையக மடந்தைகொல் வரை மடந்தைகொல் –ஆதிபருவம் வில்லிபாரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. கண்டனள் காந்தாரியை!

**மன்னன் இட்ட சட்டம்**

மன்னர்களின் மன்னனெனும் சீசர் வேந்தன்
மக்கள் தொகை கணக்கெடுக்கும் திட்டம் போட்டான்
முன்னர் அவர் கோத்திரத்தார் வசித்த நாட்டில்
முறையாகச் சென்றுபெயர் பதியச் சொன்னான்
என்னதடை இருந்தாலும் இராச சட்டம்
எனநினைந்து தாவீது வம்சம் வாழ்ந்த
பொன்னகராம் பெத்தலகேம் போக வென்றே
புறப்பட்டார் ஊரோடு பொழுது தோன்ற.

**பயணம்**

வழியினிலே குதிரைகளில் சிலபேர் சென்றார்
வண்டிகளில் சென்றார்கள் வசதி வாய்த்தோர்
கழுதைஒன்றில் மரியாயி ஏறிச் சென்றாள்
கணவனென்பான் கடிதினிலே நடந்துசென்றான்
பொழுதுமெல்ல நாட்கள்சில போன பின்பு
புறநகரைப் போயடைந்தார்; தலைகள் இன்றிப்
பழுதடைந்த மாடங்கள். மலைகள் மந்தைப்
பண்ணைகளும் பார்த்துவந்தார் மாலைநேரம்.

**மாலைப்பொழுது**

குணமகளார் வருந்துயரைக் கண்டார் போலக்
கூட்டமாய் மாடாடு குனிந்து செல்ல
மணமலர்கள் முகம்ஒடுங்க, கிளிகள் பாடும்
வாயொடுங்கப், புள்ளினங்கள் சேக்கை சேர்ந்து
அணைவதற்குச் சிறகொடுங்க மயில்கள் தங்கள்
ஆட்டத்தில் நின்றொடுங்க, குயில்கள் கூவுந்
துணையினையே விட்டொதுங்க, மரங்கள் எல்லாம்
சோர்ந்துஇலைக் கரம்ஒடுங்க மாலை வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *மக்கள் கூட்டம்*

வெண்ணிலவின் சிரிப்பொலியாள் ஆடல் பாடல்
　　வித்தைகளின் விலைமாது நகையால் காய்த்த
கன்னியவள் காந்தாரி பெயரைக் கொண்டாள்
　　கலைராணி என்பார்கள் கயவர் கூட்டம்
பெண்ணைவலை வீசிநிற்பார் காமம் என்ற
　　பெருங்கடலில் வீழ்த்திடுவோர் ஊரின் எல்லை
நண்ணிவந்து நடனத்தில் மிதந்த மானை
　　நாடொன்று கூடியதாய் மக்கள் சூழ்ந்தார்.

காந்தாரியின் நடனத்தைப் பார்க்க நாடுகூடியதுபோல் மக்கள் சூழ்ந்தனர்

### *வஞ்சகி நெஞ்சம்*

நஞ்சுவிழிக் கொஞ்சுமொழி அஞ்சு கத்தை
　　நாண்மலரே எனநினைந்து சுற்றி நின்றார்
நெஞ்சினிலே நஞ்சருந்தும் கண்கள் எல்லாம்
　　நீலவிழி முகமாதில் மொய்த்த வேளை
கொஞ்சுகின்ற பூவழகி இளைஞர் நெஞ்சைக்
　　கொதிப்பாக்கும் காமத்தின் பாடலெல்லாம்
வஞ்சகத்தில் தோய்த்தெடுத்து வலையைப் போட்டாள்
　　மனங்களிக்கப் பணம்படைத்தோர் வரிசைகண்டாள்.

### *காந்தாரி கழுதையில் வந்த மரியாயியைக் கண்டாள்*

கண்ணினையே பார்த்தார்கள் காந்தள் என்றார்
　　கன்னத்தின் அழகினிலே கமலம் என்றார்
பெண்ணவளின் உடலமைப்போ சிற்பம் என்றார்
　　பிரியாத முல்லைமொட்டுப் பற்கள் என்றார்
விண்ணிருந்து விழுந்தமுழு நிலவே என்றார்
　　வேறுபல உவமைகளில் விருந்து வைத்தார்
பொன்னியவள் கழுதைஒன்றில் இருந்து பார்த்த
　　பூவிளக்கைப் பார்த்தவுடன் கருகி னாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காந்தாரி கண்டாள்

வையமெலாம் ஊடுருவும் வஞ்சி பார்த்தாள்
மனத்தினிலே நஞ்சகற்றும் மருந்தை உண்டாள்
தையலவள் கலைகளிலே தோல்வி கண்டு
தாளமொடு வீணைகுழல் சலிக்க லாச்சே
வெய்யபகல் மெய்கண்டு ஓடிச்சென்று
மேற்கடலில் தற்கொலையே செய்ய லாச்சே
செய்யமலர் மாமரியாள் தொலைவில் நின்று
தீயவளை நேயமுடன் கடைக்கண் பார்த்தாள்.

### மனம் மாறிய மாது

கருகிவிட்ட தளிர்போன்றாள் மாலைஎல்லாம்
கையாலே அறுத்தெறிந்தாள் மணிகள்சிந்த
உருகிவிட்ட மெழுகானாள் ஆடல்பாடல்
உலைகொதித்து அணைந்ததங்கே சாந்தும்பூச்சும்
பெருகிவரும் கண்ணீரில் நனைந்துபோகப்
பேதையவள் ஒருதுணியால் உடலைமூடி
திருநிதியைத் தேடியங்கு ஓடிச்சென்று
''திருந்திவிட்டேன் வருந்திடவே வேண்டாம்'' என்றாள்.

### துன்பக்கேணி

பட்டுடலைப் பார்த்திருந்தோர் ஏங்கிப் போனார்
பாசவலை போட்டவர்கள் பதைத்துப் போனார்
கட்டழகில் மூழ்கியவர் கலங்கிப் போனார்
காதுக்குள் இரகசியம் பேசிக் கொண்டார்
பொட்டழகி சிட்டுப்போல் பறந்து போனாள்
''பொற்புநிறை கற்பினிலே மண்ணைப் போட்டேன்
தொட்டேனுன் காலடிகள் புதுமைச் செல்வீ
துயரத்தின் கேணியிலே துடித்தேன்'' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெற்றுடம்பை விற்றது போதும்

சுற்றிநின்ற நாய்நரிகள் அனைத்தும் போக்கித்
துயர்துடைத்து மகளேயென் றவளைக்கட்டி
"உற்றநிலை ஒருகணத்தில் உணர்ந்தாய்! ஈசன்
உயிர்தந்தான் அவனடிகள் மறக்க வேண்டாம்
வெற்றுடம்பை விற்றதினிப் போதும் அம்மா
விண்ணரசன் ஆலயமாய் அதனைப் பேணி
நற்றவங்கள் செய்திடுவாய் மற்றோர் வாழ
நன்மைகளைப் புரிந்திடுவாய் போய்வா" என்றாள்.

---

காந்தாரி வரலாறு வீரமாமுனிவரின் தேம்பாவணி என்ற காப்பியத்தில் காணப்படுகிறது. மகவருள் படலம் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. நெஞ்சிலே அஞ்சலி

***சத்திரத்தில் இடமில்லை***

சத்திரத்தில் சென்றார்கள் இடமே இல்லை
சனவெள்ளம் சரிந்ததம்மா பட்டினத்தில்
அத்தலத்தில் ஒருவிடுதி கண்டார் நீதி-
அரசரெனும் வளன்என்பார் ஆங்குசென்று
உத்தரவைக் கேட்டவுடன் முதல்வன் வந்து
உற்றிருவர் கோலத்தை உரைத்துப் பார்த்தான்
சித்தத்தில் ஒருசிரிப்பு! மகளும் வந்தாள்
தினகரனைக் கண்டறியாக் குருடன் ஆனார்.

***முதல்வன் கூறிய முடிவு***

கண்கவரும் உடையில்லை, பூச்சுமில்லை;
காதுகையில் அணிமணிகள் யாதுமில்லை;
நண்பகலில் காந்தியைப்போல் முகமும்மெல்ல
நகைக்கீறும் மட்டுந்தான் காசுகீசு
என்பதற்கோ கனமில்லை; பெண்ணும் கர்ப்பம்
"இவ்விடத்தில் இடமில்லைப் போய்வா ருங்கள்
முன்புவந்து கூடிவிட்டார் அநேகர்" என்று
மொழிந்தானே முதலாளி திரும்பி விட்டார்.

***முதலாளியின் மகள் முறையீடு***

"பெண்அவளின் கண்ணொளியைப் பார்த்தேன் ஐயா
பேரிரக்கம் அவ்வொளியில் பிறக்குதையா
எண்ணத்தில் அவளுருவம் தெரியுதையா
இதயமெல்லாம் அவள்பேரே இனிக்குதையா
வண்ணநிற நீலத்தில் முக்காடிட்டு
மதிஒன்று நீலவான் வந்ததோற்றம்
மண்ணுலகில் தெய்வமணம் அவளில் வீசும்
வரச்சொல்லி ஆளனுப்பும்" மகளார் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தந்தை "பெண்புத்தி பின்புத்தி" என்கிறார்

"பெண்புத்தி பின்புத்தி என்பார் மெய்யே
பிள்ளைநீ உலகுஅளக்க காலம் செல்லும்
கண்பொத்தி அடிக்கின்ற காலம் ஈது
கட்டாகப் பணம் இழுப்பார் காவல்நிற்க
மண்தத்தி வருகின்ற கழுதை மீது
வந்தஒரு வறியபெண்ணை மனதில் எண்ணி
மின்சக்தி பாய்ந்தவள்போல் தயங்கிப் போனாய்
வேண்டாம்அப் பெண்நினைவு வேலை உண்டே".

### இந்த விடுதியிலே

"குடித்துவிட்டுக் கும்மாளம் போடக் கண்டேன்
குலப்பெருமை கைகோத்து ஆடக் கண்டேன்
நடிக்குமின்ப நங்கையரை இங்கே கண்டேன்
நாகரிகம் என்றுசொல்லி நாயின் வேடம்
படிக்குமிந்த விடுதியிலே பணந்தான் தெய்வம்
பழிபாவம் அத்தனைக்கும் அதுதான் தூபம்
துடிக்கும்எந்தன் இதயத்தைப் போகும் போது
தோகைமயில் போலொருத்தி கடைக்கண் பார்த்தாள்.

### என்னைக் காணமாட்டீர்

நாடியவள் நற்கருத்தை எண்ணிப் பார்த்தேன்
நாணமில்லா நாய்களுக்கு சேவை செய்து
தேடியபொன் என்னசுகந் தருமோ? ஐயா!
சேயிழையாள் அவளுக்குப் பணியே செய்தால்
கோடிபொன்னைப் பெற்றதிலும் மகிழ்ச்சி காண்பேன்
குறைவற்ற மனஅமைதிக் குன்றம் காண்பேன்
பாடுபட்டுஅம் மாதை அழைக்கா விட்டால்
பணிவுள்ள மகளாரை இழப்பீர்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊழியர் பலதிக்கும் தேடல்

நேரமுமோ சாமத்தை நெருங்கும் வேளை!
        நேசமுள்ள ஊழியரை அழைத்தான் "மாது
தூரவழி போயிருக்க நியாயம் இல்லை
        சுற்றி அங்கும் இங்குமாய் ஓடும்" என்றான்
கார்இருட்டில் அவர்களுமே அலைந்து உலைந்தார்
        காணவில்லை! கண்கலங்கி மகளும் கேட்டாள்
பேரிடியால் தாக்குடை மரமே போலப்
        பெருங்கவலைக் கடலில்வீழ்ந்தாள் பெரிதும் பாவம்.

### சுற்றத்தார் கைவிரிப்பு

சுற்றத்தார் வீடுகளில் கதவைத் தட்டிச்
        சோர்ந்துவிட்டார் மாதவனும் "இடமோ இல்லை!"
பற்றுள்ளோர் பலர்சொன்ன விடையும் ஈதே
        பரிதாபம் நல்லபதில் கிடைக்கவில்லை
கற்றவர்கள் திருக்கூட்டம் சேர்ந்து பார்த்தார்
        கனிவான அழைப்பில்லை கடிதில் சென்று
குற்றமற்ற மந்தைகளே கூடிவாழும்
        கொட்டிலொன்றைச் சரணடைந்தார் கொடியவாடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. மகிழ்ந்தது மண்

நல்லோர்கள் நெடுங்காலம் உலகிலெதிர் பார்த்திருந்த
நாதன் இயேசு
தொல்லுலகில் மூங்கில்இலை இருந்துவரும் பனித்துளிபோல்
தோன்றிவிட்டார்
அல்லலுற்று வழியறியா இருள்படர்ந்த கானகத்தே
அருளின்சோதி
மெல்லவந்தாற் போலவந்தார் நடுநிசியில் நிலவுமுகம்
மேலேகண்டார்.

***தாயின் கையில் தாமரை***

நெஞ்சுரத்தில் நிகரறியா நீலமலர் போல்விழியாள்
நேசக்கையில்
கஞ்சமலர் போலவந்த கடவுளையே நெஞ்சினொடு
கட்டிக்கொண்டு
கொஞ்சியவன் கண்பார்த்து முகம்பார்த்துக் கைகால்கள்
கூர்ந்துபார்த்துப்
பஞ்சினிலே நெய்துவந்த அங்கியொன்றை அணிந்திட்டாள்
பாசம்வீச.

மாதவனார் அங்குவந்தார் மாடாடு முழங்காலை
மடித்தெழுந்து
தீதகன்ற திருமுகத்தைப் . பார்த்தங்கே நிற்பதனைச்
செவ்வி கண்டார்
ஓதுகின்ற திருக்குழந்தை பள்ளிகொள்ளப் பஞ்சணைகள்
ஒதுக்கிப்போட்டார்
பாதியிரா வேளையிலே கோழியெல்லாம் கூவினவே
பாரீர் என்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்னையின் அலை ஓசை

என்னபெயர் சொல்லியுனை இங்கழைப்பேன் என்அரசே
ஏங்குகின்றேன்
அன்னையென என்முலைப்பால் தந்திடவே தூபத்தை
அடியாள்காட்டி
பொன்னுலகின் மன்னனெனப் போற்றியுனை ஏற்றிடவோ?
பூவில்நல்லாய்
என்னசெய்வேன் பள்ளிகொள்ளத் தாலாட்டுப் பாடல்களை
இசைப்பன் இன்றே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. பிள்ளை நிலாவும் வெள்ளை நிலாவும்

தாயின் சிந்தனை

***வாழி! என் அப்பனே!***

கோழிகள் கூவிடும் சாமம்
கோமகன் என்கையில் வந்தார்
ஆழியில் செல்வன் எழுந்தால்
அக்கடல் நீர் நிறம் மாறும்
ஏழையின் உள்ளம் இனிக்க
என்னுயிரே உனைத் தூக்கி
வாழிஎன் அப்பனே என்று
மார்பில் அணைத்திட வாராய்.

***தாயா? மகளா?***

எப்படி உம்மை அழைப்பேன்
என்வயிற் றின்கனி அன்றோ?
அப்படிப் பார்க்கில்யான் அம்மா
ஆண்டவன் என்அரும் மைந்தன்
சொற்படி ஈசன்என் தந்தை
சொந்த மகள்நான் அவர்க்கு
இப்படி நான்எண்ணும் போது
என்ன சிரிப்பு உமக்கு?

***நீர் ஒரு ஒளி***

மாலை மதியினைப் போலே
வதனம் அளித்தவள் நானே
தோலும் எலும்பும் குருத்தாய்ச்
சுமந்தேன் ஒன்பது மாசம்
காலொடு கைகள் அடித்து
கண்ணெனும் வண்டு கலங்க
ஞாலத்தைக் கண்ட பிரானே
நல்லொளி நீர்அறி வேனே.

Bar Jonah —Mary in her History of Christmas German 1948.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாயைப் போல் பிள்ளை

தேவனே நான்பெற்ற பிள்ளை!
        தெய்வ உடலும் எனதே!
ஓவியம் ஆக்கினேன் நானே!
        உருவம் அமைத்தவள் நானே!
காவியின் கண்கள் கொடுத்தேன்!
        கனிஇதழ் வாயும் அளித்தேன்!
பூவினில் தாயைப்போல் பிள்ளை
        புன்னகை என்னடா மன்னா!

### பேறு பெற்றவள்

பெண்களில் பேறுகள் பெற்றேன்
        பேருலகின் பயன் உற்றேன்
சின்ன இறைவனைத் தூக்கிச்
        சீராட்டிச் கொஞ்சி அணைக்கப்
புன்னகை பூசிய இரண்டு
        பூவிதழ் நோக்கி மகிழக்
கன்னத்தில் கிள்ளிச் சிரித்துக்
        களிப்புற வைக்க வந்தாயே!

பொய்கை ஆழ்வார் பாடல்கள் போல் எழுதியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. தென்றல் கேட்ட திருப்பாடல்

*தாலாட்டு*



கண்ணே! என்கண்மணியே! காத்திருந்த பொற்சுடரே!
எண்ணும் கனிஅமுதே! இளவரசே! எங்குவந்தீர்!

மன்னர்களின் மாளிகையும் வசந்த மணி மண்டபமும்,
பொன்இசைத்த தொட்டில்களும், பூத்தவிசும் நீத்தனையோ?

வானவர்கள் கோடிவந்து மல்லிகைப்பூந் தொட்டிலிலே
தேனிசையில் தாலாட்டித் தீந்தமிழில் பாடாரோ?

வேந்தர்களின் வீடுகளில் வெறுப்பென்றால், வைக்கோலால்
வேய்ந்தகொட்டில் விண்ணரசர் வீற்றிருக்கும் வீடாமோ?

ஊரார் பழியாரோ உலகோர் நகையாரோ?
சீரார்ந்த சீமானே! சிறுகுடிலை ஏன்தெரிந்தாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளவந்தான் இவ்வுலகை அமைதியினைக் காக்கவந்தான்
ஏழை ஒரு பெண்ணிடத்தில் ஏன்பிறந்தான் என்னாரோ

சூரியனும் சந்திரனும் சுட்டுவிரல் நீ அசைத்தால்
கூரையிலே ஓடிவந்து குளிர்ஒளியை வீசாவோ?

செங்கையை நீ அசைத்துச் சின்னிவிரல் காட்டிவிட்டால்
பொங்கு கடலால், மலையால், நதிவழியாய்
இங்கு வந்து வானவர்கள், தம்பிதம்பி என்றுசொல்லி
தங்கமணித் தொட்டிலிலே தாலாட்டுப் பாடாரோ?

*மாசிப் பிறையோ? வைகாசி மாங்கனியோ?
தேசப் பிறையோ? திருட்சுடரோ? தேன்மதியோ?
எங்கள்குல மக்களுக்கு இறையருளைக் கொண்டுவந்த
தங்கமணிப் பெட்டகமோ? சஞ்சலத்தின் வைத்தியனோ?

ஆடுகண்ணீர் ஊற்றுவதேன் அயலில்அந்தப் பாற்பசுவும்
மூடித்தன் கண்இமையை முத்துநீர் சிந்துவதேன்?
தேடுகின்ற தெய்வமகன் தேவுலகில் நின்றுவந்து
பாடுபடப் போவதனைப் பரிந்துணர்ந்து கொண்டனவோ?

"ஈடில்லா மன்னன் இந்நிலத்தில் தோன்றிடுவார்
நாடறியத் துன்பத்தின் எல்லையையும் கண்டிடுவார்"
ஏடெழுதி வைத்திருந்த இசையாசின் செய்தியினால்
பாடின்றிப் பட்டமில்லை என்றுமனம் எண்ணுவனோ?

மாமி மடியுமில்லை! மாமன்மார் தோளுமில்லை!
பூமி மடியுனக்கு மாமணியே கண்வளராய்!

கண்ணிலே ஆயிரமாய்க் கதைகள்பல சொல்லுகிறீர்
எண்ணங்கள் கோடி எழுதுகிறீர் கைவிரலால்!

* முதல்வரி நாட்டுப்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவீது அரசர்குலச் சந்ததியிலே வந்திருந்தும்
ஆவியினைக் காணார் அறியா உடலானார்.

வாழ்வின் ஒளியொன்று வந்து பிறந்ததென்றால்
ஆழிவாய் மூட அலையடிப்பார் இங்குமக்கள்
வாழி! என்றுசொல்லி வாழ்த்துரைகள் கூறிடுவார்
*கேள்வி இல்லை ஏனோ? கீழ்த்திசையின் செஞ்சுடரே!

ஆழிவாய்: சமுத்திரத்தின் வாய் அது மூடக் கூடியதாக மக்கள் இங்கு வந்து கூடிச் சத்தமிடுவர். கேள்வி இல்லை: எவரும் கேள்விப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. நீலவானில் காலக்குரல்

*சொல்லரிய மாரி*

பனிமூடிக் குளிர்கூடி மந்தைகளும் கொடுகிப்
பல்லுகளும் கிடுகிடுக்கும் சொல்லரிய மாரி
நுனியிலையில் கிடந்துருளும் பனிமணிகள் உதிர
நெஞ்சினிலே பூனைவந்து துஞ்சுகின்ற மாரி.

*இடையர்*

வாயூறும் உணவுவகை உண்டறியா இடையர்
வண்ண வண்ணப் புத்தாடை கண்டறியா இடையர்
காய்கனிகள் பால்தயிர்கள் உண்டுறங்கும் இடையர்
கருத்தறியா நாடோடிப் பாடல்களின் மன்னர்.

*பட்டியிலே ஆடுகளைப் பார்த்திருந்த வேளை*

சூதினையும் வாதினையும் வஞ்சனையும் அறியர்
சுடுசொல்லும் படுபொய்யும் கொடும்பழியும் அறியார்
பாதிஇராச் சென்றாலும் கதைகள் பல சொல்லிப்
பட்டியிலே ஆடுகளைப் பார்த்திருந்த வேளை

*பொன்னுலகின் அன்னம்*

கைநீட்டக் கைதெரியாக் காரிருள்சேர் இரவில்
கனல்மூட்டிக் குளிர்காயும் நினைவிழந்த வேளை
பொய்யாட்டும் உலகினிலோர் மெய்தோன்றல் போல
பொன்னுலகின் அன்னமொன்றை மின்னலிலே கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லமனம் உள்ளவரே

சொல்லரிய வானமிசை நின்றுதித்த தூதன்
சுடரெனவே இடையர்களின் வாசலிலே நின்று
"நல்லமனம் உள்ளவரே! நீர் அஞ்ச வேண்டாம்
நாம் உமக்கோர் நற்செய்தி நவின்றிடவே வந்தோம்".

### ஆவியிலும் இனியவனார்

ஆவியிலும் இனியவனார் இறைமகனார் இயேசு
அன்பரசன் கொட்டிலிலே பிறந்தகதை கூறி
நீவிர் அங்கு போய்ப்பாரும் என்றுசொலக் கேட்டு
நேயமுள ஆயர்களும் குறிப்பறிந்து சென்றார்.

### மண்ணுலகை மீட்கவந்த கண்மணி

மண்ணுலகை மீட்கவந்த கண்மணியை உலகில்
மனம்மகிழ முதற்காணும் பேறுபெற்றார் இடையர்
விண்ணரசே என்றுசொல்லி வீழ்ந்தவரை வணங்கி
விரித்தகையின் சிரித்தமுக வெண்மதியை வாழ்த்தி

### இடையரின் காணிக்கை

கையினிலே கொண்டுவந்த பால்தயிரை நெய்யைக்
காலடியில் காணிக்கை எனவைத்தார் அந்த
ஐயனுமே இடையர்களின் மாசறியா அன்பில்
அகமகிழ்ந்து முகமலர்ந்தான் சகம்மகிழும் மைந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# 19. முடிவேந்தர் மூவர்

### புறப்படல்

வானத்தின் மீது வால்வெள்ளி யொன்று
மறையாது தோன்றி விரிய
ஏனென்று கேட்டுக் கீழ்நாட்டில் ஆய்ந்து
ஏடெல்லாம் எடுத்துப் புரட்டிக்
கோனென்று சொல்லி நாடெல்லாம் போற்றும்
குழந்தையின் பிறப்பை அறிந்து
ஞானத்தின் வேந்தர் மூவர்கள் சேர்ந்து
நாடெல்லாம் கடந்து பறந்தார்.

### எருசலேம் நாடு சென்றார்

பாய்கின்ற குதிரை முன்சென்ற வெள்ளி
பாலைப் பொழியும் நிலவில்
தோய்கின்ற போதும் சுடர்வந்த போதும்
தூரத்தில் நின்று துலங்க
ஓய்வின்றிக் காடு உயர்குன்று மலைகள்
உலாச்செல்லும் நதிகள் வயல்கள்
காய்கின்ற பாலை வெளியெல்லாம் கடந்து
காலத்தில் அரசை அடைந்தார்.

### இறைவன் பிறந்த இடம் எங்கே?

மதுமாது என்ற இருவேறு சேற்றில்
மனமாயை புதைத்த அரசன்
புதிதாக மூவர் மதியூக மன்னர்
புவனத்தின் கிழக்கில் இருந்து
எதிராக வந்து இறைவன் பிறந்த
இடமெங்கேஎன்று வினவிப்
புதிரான கேள்வி தொடுத்தார்கள் விபரம்
போர்வேந்தன் அறிய விரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மறை நூலோர்*

ஓயாது பண்டை மறைநூல்கள் ஆயும்
உரவோர்கள் தம்மை அழைத்துச்
சேயான செல்வன் எங்கே பிறப்பான்
தெரிவீர்கள் என்று புகலக்
காயாத கானம் எனும்பெத்த லேகம்
கடவுள் பிறக்கும் இடமே
மாயாத நூல்கள் வரைந்துள்ள உண்மை
மன்னா அறிவீர் எனவே

***கண்டதும் திரும்பி வருவீர***

என்னும் சொல் அண்ணல் செவியேற நெஞ்சம்
எரிஏற ஆங்கு மொழிவார்
"உண்ணும்சோற் றூரில் நீர்தேடி வந்த
உலகாள்வோன் வந்து பிறந்தான்
முன்நின்று கண்டு வருவீர்கள் யானும்
முடிமன்னன் அவரை வணங்கி
பின்நின்று செல்ல நினைத்தேன் யாவும்
பெரியோரே வந்து உரைமின்".

***மன்னர்கள் "திருநாமம் போற்றிச் சிறுகாலைத் தொட்டுவருவோம்"***

"இரு நாளில் மீண்டும் வருவோம் இவ்வழியே
இணையாரும் இல்லா அரசன்
திரு நாமம் போற்றிச் செயல்வீரன் அவனின்
சிறுகாலைத் தொட்டுத் தடவி
குரு நாதன் என்று மரியாதை செய்து
குன்றேறி வந்து குழுமி
பெரு நாள் இருந்து பிரியாத நட்பில்
பிறவூர்கள் செல்வம் இனிதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூவேந்தர் குழந்தையைக் கண்டு வணங்குதல்



ஏரோதன் மாடிப் படியால் இறங்க
    இருள்மாலை வான முகட்டில்
காரோடு மேகம் தென்திக்கில் வெள்ளி
    கரையோடக் கண்டு மகிழ்ந்து
தேரோடும் மன்னர் திசைநோக்கிச் சென்று
    திருமங்கை மடியின் மலராய்
நீரோடு மண்ணின் நிறமாய்க் கலந்த
    நெடியோனை முடிகள் வணங்கி

### எருசலேம் நீ இமயம் ஆனாய்

(வேறு) மூவோந்தர் கூறுவது

மதியினால் சிறந்தோன் ஞான
    வரத்தினால் நிறைந்தோர் தெய்வத்
துதியினால் உயர்ந்தோர் வாழும்
    தொல்பதி எருச லேமே!
விதியினால் இன்றே ஞான
    வெளிச்சத்தைப் பெற்றாய் இந்தப்
பதியினால் இமயம் ஆனாய்
    பாரெலாம் உன்னைப் போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எருசலேம்! ஈசன் கருணையில் குளித்தாய்

அரசனார் சலமோன் ஞான
அரங்கென அமைத்த கோவில்
முரசறை கீர்த்தி பெற்று
முழங்கிட ஒளியில் தோய்ந்தாய்
கரங்களால் போற்றும் ஈசன்
கருணையில் குளித்தாய் மன்னர்
சிரங்களைத் தாழ்த்தி வந்து
தேடுவர் ஒளியே என்றார்.

### காணிக்கை வைத்தனர்

தங்கத்தை எடுத்தே அந்தத்
தாமரை அடியில் வைத்தார்
குங்குமம், குளிரும் வாசச்
சந்தனம், தூபம் சேர்ந்த
மங்கலச் சிமிழை வைத்தார்
மனிதனின் உடலைப் பேணும்
வெங்கல மீறை வைத்தார்
"வேந்தனே ஏற்பீர்" என்றார்.

### புது உலகம் கண்டார்

உருகினார் நெஞ்சம் கண்ணீர் ஊற்றினார் இறைவன் அன்பில்
பெருகினார் காலைத் தொட்டுப் பெற்றவள் முகத்தைப் பார்த்தார்
திருமதி கண்ணில் ஞானத் தென்றலின் அமைதி கண்டார்
ஒருபுது உலகம் கண்டார் உள்ளமே தெளிந்தார் அன்றோ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேந்தர்களின் சிந்தனை

அந்தியில் உலகம் காண
அலைகடல் அடியில் தோன்றும்
சந்திரன் நீயோ அன்றி
முக்கனி பிழிந்த சாறோ
சுந்தர மலரோ தூய
அன்னமோ மணியோ முத்தோ
சிந்தனை தீட்டு வோரின்
சித்திரம் இதுவோ என்றார்.

பொன்பொருள் மண்ணில் பெண்ணில்
புதையல்கள் கண்டு வாழ்ந்தோம்
அன்பினை இன்று கண்டோம்
அறக்கடல் கண்டோம் ஐயா
வன்பசி வறியார் போல
வந்தனை வானில் நின்று
இன்பத்தின் துறைகள் நீத்தாய்
எளிமையோ வாழ்வின் கீதம்.

### வேந்தர்கள் வேறு வழி சென்றார்

எழுந்தனர் வேந்தர் காலை;
இயம்பினர் கனாக்கள் பற்றிச்
செழுந்தமிழ் மொழியில் நல்லோன்
திருவடி வாழ்த்திப் பின்னர்
விழுந்தனர் செம்மல் பாதம்
விரைந்தனர் வேறு பாதை
இளந்தலை அனைத்தும் வெட்ட
ஏரோதன் எண்ணம் கொண்டான்.

விளக்கம்: மன்னர் மூவரும் ஒரே மாதிரிக் கனாக் கண்டனர். விடிந்து ஒவ்வொருவரும் கனாக்கள் பற்றித் தமக்குள் பேசினர். பாலனைப் போற்றியபின் கனாவின் கருத்துப்படி ஏரோதனிடம் செல்லாமல் வேறு வழியாய் திரும்பினர். ஏரோதன் இளங்குழந்தைகளை வெட்டுமாறு கட்டளையிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. நூல் வணங்கினோர் கால் வணங்கினர்

### எருசேலம் கோயில்

தொல்லை அழகின் திலதமெல்லாம்
சுமக்கும் அந்தப் பொருங்கோயில்
கல்லில் கடைந்த காவியமே
கருத்தின் சலமோன் மாமன்னன்
அல்லும் பகலும் அதைப்புனைந்தான்
அறத்தின் அரங்கம்; அறிஞர்களின்
சொல்லின் சுரங்கம்; ஐந்தடக்கும்
தூயோர் வாழும் துறையதுவே.

### பெயர் இட்டனர்

சிரிக்கும் ஒலியின் சித்திரத்தைச்
சிந்தை களிக்கும் திருமலரை
விரிக்கும் கையில் அணைத்தபடி
மேகம் தடவும் பெருங்கோயில்
உரித்தாய்க் கொண்ட இறைவனுக்கு
ஒப்புக் கொடுத்து மீட்பரெனும்
கருத்தைக் கொண்ட இயேசுபெயர்
காதல் கொண்டே வைத்தனரே.

### காணிக்கை

அறையும் சட்டம் எழுதிவைத்த
அருமைப் பேழை மறைந்துவிட
இறைவன் சாயல் குடிபோன
இடத்தில் இயேசு பிரான்சென்றார்
சிறகை விரிக்க அழகுசிந்தும்
சின்னப் புறாக்கள் இரண்டையங்கு
முறைமைப் படியே அர்ப்பணித்து
முத்தைப் பெற்றே முகம்மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிமியோன்

ஆன்றோர் வழக்கப் படியந்த
　　அரசைக் கொடுத்து இரண்டுபுறா
சான்றோர் சட்டப் படியீந்து
　　தவத்தைப் பெற்றுத் திரும்புகையில்
மூன்றாம் பிறைபோல் நெற்றியுடன்
　　முல்லை மலரின் மணத்தானை
வான்தோய் கோயில் வாசலிலே
　　சிமியோன் வாங்கி மனம்மகிழ்ந்தான்.

### கண்டேன் ஞானக் களஞ்சியத்தை

"கண்டேன் ஞானக் களஞ்சியத்தை
　　கருணைக் கடலைக் கைகளிலே
கொண்டேன் இனிஎன் மனம்அமைதி
　　கொள்ளும் கண்ணை மூடிடுவேன்
பண்டே உலகம் காத்திருந்த
　　ஞானப் பரிதி பலநாடும்
ஒன்றாய் வாழ வழிவகுக்கும்
　　உண்மை அன்பின் அரசனன்றோ!"

### உள்ளத்தில் வாள் ஊடுருவும்

மரிய மலராள் சிமியோனின்
　　வாழ்த்தைக் கேட்டு மயங்குகையில்
பெரியார் அவளைப் "பெண்ணரசே
　　பேறும் தாழ்வும் இவராலே
உரியார் நமது குலமக்கள்
　　உமது உள்ளம் வாளாலே
அரியப் பட்டு ஊடுருவும்
　　அதையும் கேளும்" இன்றென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆனாள் வாழ்த்து

ஆனாள் என்னும் பெண்ணொருத்தி
அல்லும் பகலும் ஆலயத்தில்
தேனாய்ப் பணிகள் செபதங்கள்
செய்வாள் வயதும் எண்பதின்பேல்
கோனே என்று குழந்தையினைக்
குளிர்ந்தே வாழ்த்தி எருசலேம்
காணாது இழந்த விடுதலையைக்
காணும் காலம் வந்ததென்றாள்

### எகிப்து நோக்கிப் புறப்படல்

நஞ்சினை அனையான் சட்டம்
நாட்டினில் நீட்டு முன்னர்
வஞ்சனை இரவில் ஞான
வாடையால் வளன் அறிந்தார்
செஞ்சொல்லின் அன்னத் தாளைச்
சேயினை மன்னர் போற்றும்
பொன்சொத்தை அணைத்துக் கொண்டு
புறப்பட்டார் எகிப்து நாடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. எகிப்து நாட்டில் இளங்குருத்து

***மரியாயி மனம் வெந்தாள்***

மற்றைநாள் போகும் போது
வழியிலே நடந்து சென்றோர்
அற்றைநாள் பெத்தலேமின்
அழுகையை எடுத்துச் சொன்னார்
கொற்றவன் ஆணையிட்டுக்
குழந்தைகள் கொலையைக் கேட்டு
உற்றவோர் துயரத் தாலே
உள்ளமே உருக லானாள்.

கொற்றவன்: ஏரோதுமன்னன்

***நைநயில் நதிக் கரையில்***

அந்தரம் வந்த போது
ஆவன செய்தற் கெண்ணி
சிந்தையில் தெளிந்து பின்னர்
செய்கையில் இறங்கும் நெஞ்சன்
சுந்தர நதியின் பக்கல்
சுதந்திரச் சூழல் ஒன்றில்
விந்தைசேர் தச்சு வேலை
வித்தையில் விளங்கினானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிழப்புலி*

கேட்டிலே குளித்து வந்த
கிழப்புலி இறந்தானென்று
நாட்டினில் அறிய வந்தார்
நலம்பெறும் யோசேப்பு என்பார்
ஏட்டிலே சொன்ன வாறு
இயேசுவை எகிப்தில் நின்று
கூட்டியே சென்றார் அந்தக்
குறிப்பினை அறிவோம் நன்றே.

எழுத்தினை அறிந்த நாடு
இலக்கமே தெரிந்த நாடு
பழுத்திடும் வரலாறு எண்ணிப்
பாரினர் புகழும் நாடு
செழித்திடும் எகிப்தில் வாழ்ந்து
திரும்பினர் நசரேத் தென்னும்
களித்திடும் சொந்த நாட்டில்
கண்மணி வாழ வென்றே.

---

தேவகுமாரனை நசரேயன் என்று நாட்டினர் அழைப்பார் என்பது தீர்க்கதரிசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. புன்னகை மன்னன்

நெஞ்சினிலே கிடத்திவந்த நேசமகன்
தவழ்ந்தான்
பிஞ்சுக்கை சிறுதேரில் பிடித்தபடி
நடந்தான்
அஞ்சாமை அறிவூக்கம் அடக்கத்தில்
வளர்ந்தான்
கொஞ்சிடவே குழிவிழுந்த முகம்மலர்ந்து
சிரித்தான்.

சொல்லினிலே கருத்தினிலே தூய்மையிலே
வளர்ந்தான்
எல்லார்க்கும் துணைசெய்யும் இயல்பினிலே
சிறந்தான்
புன்னகையின் மன்னரென்று இயேசுவையே
சொன்னார்
அன்னைமரி ஊர்போற்றும் அம்மாவாய்
ஆனாள்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

அன்னையவள் காலடிகள் வணங்கிடுவான்
செல்வன்
உண்மையொளி நூல்களிலே படித்தறிவு
கொள்வான்
எண்ணுகின்ற பணிபுரிந்து தந்தையிடம்
வாழ்வான்
மண்ணுலகம் மகிழ்ந்திடவே பொன்னுரைகள்
சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமுள மரியாயி பணியனைத்தும்
செய்தாள்
வேந்தனுக்கு அணிந்திடவே ஆடைகளும்
நெய்தாள்
ஏந்துகின்ற நற்குணங்கள் மறையறிவு
கொடுத்தாள்
வாய்த்தநல்ல வாழ்வுக்கு வளமனைத்தும்
அளித்தாள்.

வரிவரியாய் மறைநூலில் வாசகங்கள்
கற்றார்
திருவுடைய மாதவனின் செயலனைத்தும்
கற்றார்
கருதரிய செபக்கூடம் இறையருளைப்
பெற்றார்
அருகிலுள்ள தோட்டத்தில் அரும்பயிர்கள்
நட்டார்.

மூதறிஞர் உரைகேட்டுத் தெளிந்திடுவார்
உள்ளம்
ஓதுகின்ற நண்பருக்கு உதவுகின்ற
இல்லம்
சீதமதி முகத்தினிலே சிந்தனைகள்
நூறு
பேதமின்றி ஊரினிலே பழகிவரும்
போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பாகம்
# நெஞ்சும் நினைவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. காணவில்லைக் கண்மணியை

குருநாடு என்று பிறநாடு போற்றக்
கொடியேறும் எருச லேமில்
பெருநாளாய் மக்கள் சிறைமீட்ட நினைவைப்
பேறாகக் கூடி மகிழ்வார்
திருநாளாய்க் கண்டு ஆண்பெண்கள் வேறு
திசையாகச் சென்று திரும்பி
வருநாளில் செல்வன் வரக்காணோம் என்று
வருவோரைத் தடுத்து வினவி

சிறைமீட்ட நினைவு: எகிப்து நாட்டில் இருந்து மோசேசு என்பவரால் மீட்கப்பட்டனர் என்பது வரலாறு

***சனவெள்ளத்தைக் கேட்கிறார்***

ஈராறு ஆண்டு நிரம்பாத மைந்தன்
இளமானைப் போலே மறைய
நீராறு பாய நெஞ்சத்தில் நோக
நிலைமாறி நின்று தடவி
பேரான இயேசுப் பிள்ளையாய்நீ எங்கே
பிரிந்தாயோ என்று பதறி
தேரோடும் வீதிச் சனவெள்ளம் கேட்டுத்
திரிந்தாளே மரிய மலராள்.

***உம்மைக் கடத்தினவர் யார்?***

சுற்றத்தா ரோடு வருவாய்நீ என்று
தொடர்ந்தேனே எந்தன் பயணம்
பற்றற்றார் போலப் பறந்தாயே நீயும்
பழந்தேடும் வவ்வால் எனவே
வற்றற்ற வாவி வளமாக்கும் இந்த
மண்ணெல்லாம் தேடி அலைந்தேன்
மற்றென்ன செய்வேன் மகனாரே உம்மை
வழிமாறிக் கடத்தினவரார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு )

**இயற்கையிடம் இயேசுவைக் கேட்டல்**

வண்ண நறுந்தா மரை மலரே
வாசக் குவளை நாண்மலரே
கண்ணுக் கினிய மடவனமே
களிக்கும் மயிலே குயிலினமே
எண்ணும் மருந்தே அனையானை
எந்தன் ஆவிக் கினியானைப்
புண்ணாய் எரியும் அன்னையெற்கு
போன வழியைக் காட்டீரோ?

தாவித் திரியும் இளமான்காள்!
சக்கரவாகப் புள்ளினங்காள்
மேவும் மலரில் ஆடிநின்று
விரும்பும் தமிழ்ப்பாட் டிசைத்தபடி
காவில் திரியும் வண்டினங்காள்
கருடன் நாரைப் பறவைகளே
நாவிற் கினியான் திருமகனார்
நடந்த வழியைக் காட்டீரோ.

திருவாய் அனைய சேதாம்பல்
சேலே கயலே வராலினமே
வெருவா நின்ற நண்டுகளே
மெல்லத் துள்ளும் குருகினமே
கருவாய் உருவாய் நான்வளர்த்த
கருணைக் கண்ணன் சென்றவழி
ஒருவாய் திறந்து கூறீரோ
உலைந்தேன் அலைந்தேன் உறங்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பறக்கும் ஊர்க்குருவி
உன்னைப் பார்த்துக் கேட்கிறேன்
வயலில் காட்டில் மலைவழியில்
மண்டுந்திடரில் ஆற்றோரம்
துயரில் அலைந்து என்னருமைச்
சுதனார் திரியக் கண்டீரோ
அயலில் கிளிகள் புறாக்களைநீர்
அழைத்துக் கேட்டுச் சொல்லீரோ?

என்றே அலைந்து துயர்முழுகி
இயேசு என்ற இளமதியைக்
கன்றாய்ப் பிரிந்து கதறிவிட்டுக்
கடுகி நடந்தார் பெருங்கோவில்
மன்றல் நிறைந்த அறிஞர்களுக்கு
வள்ளல் இளைஞன் உரைவழங்க
நின்றார் கேட்டார் நெஞ்சினிலே
நெருப்பே நீராய் நிறைந்ததுவே.

---

இவ்வாறு கேட்டல் வழுமைதியின் பாற்படும் தொல்காப்பியம் பொருளியலில்
"சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யாமாபிற் றொழில்படுத்தடக்கியும்" என்றதும்

செய்யுள் இயலில்
"ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையில் பிறவும் நுவலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார்புலவர் " என்றதுங் காண்க.

156901



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

**தேடிக்களைத்தோம்**

காணாது தேடிக் களைத்தோமே தம்பி
கருத்தாக மூன்று தினங்கள்
கோணாத நீதி வழிந்தெங்கும் ஓடும்
கோமானின் வாயில் அரங்கில்
நாணாது நின்று நயமான உரைகள்
நடமாடக் கேட்டு வியந்தோம்
வீணாகப் பெற்றோர் துயராலே வாட
விளையாட்டோ இந்த வினையே?

**துறை இருக்கும், தோணிபோகும்**

உறவோரை நீக்கும் அறவேந்தன் தோழன்
"உணர்வீர்கள் என்னை ஒருநாள்
மறவாமல் தந்தை இல்லத்தில் யானும்
வாராமல் செல்லல் முறையோ
துறையங்கு நிற்கும் தோணியே செல்லும்
சொல்வார்கள் உலக வழக்கு"
நிறைவான சொற்கள் கருத்தாழம் காணார்
நேராக ஊரை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. பதினாறு வயதில்

மரத்துண்டை எடுத்தந்த வாளாலே அறுத்தார்
　　மடங்கி அது உடைந்தது ஒரு கணத்தினிலே அறிந்தார்
கரத்தினிலே விரல்கள்சில காயத்தி னாலே
　　கடுகிவரும் இரத்தம் தெறித்தெங்கும்பரவ

வாயடைத்த குரலினிலே தாயழவே கண்டு
　　மாதாவைப் பார்த்தபடி புன்சிரிப்பை அழைத்துக்
காயத்தால் வடிகின்ற கையொன்றை மறைத்துக்
　　கண்டீரோ சுரைக்கொடியில் காயென்று கேட்க

அன்பொழுகும் தாயாரின் கன்னமெல்லாம் கண்ணீர்
　　அவலத்தைத் தாங்காத அவள்முகத்தைப் பார்த்துத்
தன்னுடைய துன்பத்தின் சாயல்களை மறைத்துத்
　　தாயாரே ஏனழுதீர் சஞ்சலத்தைச் சொல்லும்

கை வாளின் கூர்ப்பற்கள் கைவிரலைச் சுவைக்கக்
　　கண்ணீரை வடிக்கின்றீர்! காலமொன்று காண்பீர்
மெய்யாக அந்நோரம் விழிகருக அழுவீர்
　　வீரமங்கை! வாள்உம்மை ஊடுருவும் என்றார்.

Blad has grazed my firigers - Arther Rimband



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. மாதவன் மறைவு

***யோசேப்புவின் கடைசிநேரம்***

பொன் மனத்தின் புகலிடத்தான்
பொய், வறுமை கவலைத்தீ
போக்கும் சீலன்
என்பினையும் பிறர்பணிக்கு
அன்புடனே அளித்திடுவான்
எளிமை வாழ்வில்
கண்ணெனவே திருக்குடும்பம்
காத்துவந்தோன்; சிரித்தமுகம்
கனவின் பூங்கா
பண்பினிலே திருக்கோயில்
பாலைவன நீரோடை
பாயில் வீழ்ந்தான்.

***பிரிவு***

நீதிமான் எனவுரைத்து
நெஞ்சினிலே அஞ்சலிக்கும்
நேசத் தந்தை
வேதியன்போல் இல்வாழ்க்கை
விந்தைத்தேர் இழுத்துவந்த
வீரத் தென்றல்
தீதில்லா மரியமலர்
தேசுற்ற இயேசு என்பார்
சிந்தை நோக
வேதனையின் பிரிவென்னும்
விரிந்ததுயர்க் கடலினிலே
வீழ்ந்தார் மன்னோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாதவன் மறைவு

வானிருக்கை விட்டுவந்த
மனிதகுலத் தெய்வத்தை
வளர்த்த தந்தை
தேனிருக்கும் கமலத்தாள்
சிந்தனையில் தேர்ந்தெடுத்த
ஞானச் சிற்பி
தானிருக்கும் இடந்தேடிச்
சஞ்சலத்தில் மகனாரும்
தாயும் ஏங்கக்
கோனிருக்கும் பண்ணையிலோர்
குணநிதிக்கு இடமொன்றைக்
குறி வைத்தானே.

### துயரம்

வெய்யோனும் சோகமுற்று
மேற்கட லிற் போய்க்குளி த்தான்
வேகமாக
வையகத்தில் தந்தையென
மாதவனைத் தன்மடியில்
வளர்த்திக் கொண்டார்
பொய்யறியாத் திருச்சுதனார்
பொன்மரியாள் அவர் அருகில்
புலம்பி நின்றாள்
தூய்யமனச் சுந்தரனார்
துயரமுடன் கண்மூடச்
சுற்றம் சூழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. நதிக்கரையில் ஞானநிலா

***குரலொலி கேட்கக் கூட்டம்***

மரவுரி அணிந்து யோர்தான்
மாநதிக் கரையில் நின்று
கருதரும் தவத்தைச் செய்து
காய்கனி கிழங்கை உண்டு
இரவினில் நீரில் நின்று
இறைவனைத் தியானம் செய்யும்
அருளப்பர் உரைகள் கேட்க
அலையென மக்கள் சென்றார்.

***கனிகொடா மரங்கள்***

நாடியே இறைவன் பாதம்
நண்ணுவீர் மரத்தின் வேரில்
கோடரி வைக்கப் பெற்ற
குறிப்பினை உணர்வீர்; எங்கும்
தேடருங் கனிகள் ஈயா
மரங்களை வெட்டித் தீயில்
போடிடும் காலம் காண்பீர்
புனிதமாய் மனித னாவீர்.

***விரியன் பாம்பின் குட்டிகள்***

"ஆண்டவன் சினத்தால் நீங்கள்
அழிவது திண்ணம் உம்மை
வேண்டினேன் உளத்தை மாற்றும்
விரியனாம் பாம்புக் குட்டிக்
கூண்டுகள் நீங்கள் தேவ
கோபத்தைத் தாங்க மாட்டீர்
தூண்டினேன் பிறரில் அன்பு
தொடங்குவீர் இன்றே" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரண்டு ஆடைகள் இருந்தால்

"ஆடைகள் இரண்டு உண்டேல்
அதில்ஒன்றை இல்லார்க் கீயும்
வாடியே பசித்தோர் வந்தால்
வாழ்ந்திட உணவில் ஈயும்
தேடிடும் பணத்துக் காக
நீதியைத் திரித்தல் பாவம்
கூடிய குற்றஞ் சாட்டிக்
குடிகளை ஒறுத்தல் கேடாம்"

### இவர்தான் மீட்பாரா?

முனிவரைத் தேடி வந்தோர்
மொழிந்திடும் உரைகள் கேட்டுக்
கனிவுடன் "இவர்தான் நாங்கள்
காத்திடும் மீட்பர்" என்றோர்
அனைவரும் கேட்க, "அந்த
ஆதவன் வருவார் ஆனால்
புனிதரின் செருப்பின் பூட்டை
அவிழ்க்கவும் தகுதி யில்லேன்"

"ஈசனின் சக்தி உம்மேல்
இறங்கிட முழுக வார்ப்பார்
தூசியை வீசித் தள்ளும்
சுழகினைக் கையில் கொள்வார்
பேசிடும் மணியைக் கூட்டித்
தானியக் களத்தில் சேர்ப்பார்
நீசராம் பதரைத் தள்ளி
நெருப்பிலே எரிப்பார்" என்றார்.

71830



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே மன்னன் செங்கோல்
நழுவிட மங்கை யோடு
கேட்டினில் வாழக் கேட்டுக்
கிழித்தனர் கேவ லத்தை
ஏட்டிலே அடங்காவாறு
எங்குமே அநீதி ஆளத்
தீட்டிய சொல்லால் எல்லாத்
திசைகளும் எறிந்தார் ஈட்டி.

ஏரோது மன்னனின் வாழ்க்கையைக் கண்டித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. காலடியில் கண்ணீர்

***விண்ணிலே இருந்து நண்ணிய எண்ணம்***

மண்ணில் முப்பது ஆண்டு மறைந்தவோர்
எண்ணிடும் வாழ்வினை இனிது நீத்தவன்
விண்ணிலே இருந்ததொரு அழைப்பு மேவிட
கண்ணெனும் அன்னையைக் கடிதில் கூவினான்.

***அயலவன் கூறிய அரியசேதி***

அண்ணலும் அழைத்திட அன்னை வந்தனள்
கண்ணொடு கண்களும் கனிந்து நோக்கையில்
துண்ணென அயிலில்வாழ் நண்பன் தோன்றியே
எண்ணரும் சேதியொன்று இயம்ப லாயினான்.

***நண்பன் கூறிய செய்தி***

மாசகல் அருளப்பு என்னும் மாமுனி
பேசிடும் கருத்தையும் பிணிப்பில் ஊறினோர்
தேசிகன் அவரெனச் சென்று நீரினால்
ஆசிகள் பெறுவதும் அறைய லாயினன்.

***கட்டியங்காரன்***

வந்தவர் ''அவர்இறை வாக்கினர்'' என்றிட
நொந்தவர் மறுத்து யான் கட்டியங் காரனே
சிந்தையில் தேர்ந்திடும் தெய்வ மீட்பனார்
வெந்திறல் வேந்தனாய் வெளிச்சம் போடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்பின் அரசை ஏற்றுவார்

"புலம்பிடும் மக்களின் கண்ணீர் போக்குவார்
குலம் பழு துற்றதால் குறைகள் மாற்றுவார்
நலம்பயில் அன்பினால் நாட்டை ஏற்றுவார்
வலம்புரி முத்தென மனிதர் போற்றுவார்

### ஒன்றே உலகம் ஆக்குவார்

"ஒன்றெனும் உலகினை உருவம் ஆக்கிட
நின்றிடும் இருளெனும் துயிலை நீக்கிடக்
குன்றினில் தோன்றுமோர் உதய சூரியன்
நன்றவர் நவைகளைத் தீர்க்கும் நாயகம்.

### மீட்பர் தோன்றுவார்

வந்திடக் காணுவீர்" என்று சொல்கிறார்
மைந்தரும் அவருரை மனதில் கொண்டனர்
சுந்தர மீட்பனார் தோன்று வாரென
எந்தையும் கூறினார் என்றி யம்பினார்.

### பழைய நினைவு

அன்னையும் இம்மொழி அரிதில் கேட்டனள்
மின்னிடும் பழையவோர் நினைவில் மிதந்தனள்
தன்அரும் கையிலே தூக்கித் தந்தையார்
சொன்னதை நினைத்ததும் துயரம் ஆயினாள்.

தந்தையார்: அருளப்பரின் தந்தையாகிய சக்கரியாசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. பரிவும் பிரிவும்

### கன்னத்தில் வழிந்த கண்ணீர்

அன்னையின் பக்கம் ஓடி
அருகினில் முழங்கால் நின்று
கன்னத்தில் அவள்வடித்த
கண்ணீரைக் கையால் நீக்கி
வண்ணத்தோள் தலையைச் சாய்த்து
மாதாவின் கூந்தல் நீவி
எண்ணத்தால் நினைவால் ஒன்றி
இதயத்தின் ஓசை கேட்டார்.

### அனைத்தையும் சுமப்போம்

வாயிலே பேச்சும் இல்லை
மவுனமாய் நேரம் போக
ஈயிலை யானும் ஆடா
இடத்திலே இயேசு சொல்வார்
நேயத்தின் சிகரத்தாயே
நின்னைநான் பிரியும் காலம்
ஆயது; இன்ப துன்பம்
அனைத்தையும் சுமப்போம் என்றார்.

### வழியும் சீவியமும் நானே

அம்மையைத் தொழுதார் பொன்னின்
அடிகளில் விடியல் வீழ்ந்தார்
தம்மையே நமக்காய்த் தந்த
தருமத்தின் வடிவம் அன்னான்
இம்மையில் சிலுவை தூக்கி
எம்மையே மீட்பான் வந்த
செம்மைசேர் செல்வன் துன்பச்
சிலுவையைத் தெரிவான் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. சிந்தனை அலைகள்

***இரண்டுநாள்***

மண்ணிலே உவமை கூற
மாதர்கள் எவரும் இல்லை
பண்ணலம் கடந்த மென்சொல்
பாவையோ இரண்டு நாளாய்
உண்ணவோ பாலோ தண்ணீர்
உறிஞ்சவோ நினையா வாறு
விண்ணிலே இருந்து ஏதோ
விடைவரும் என்றே பார்த்தாள்.

***சிந்தனை அலைகள்***

(வேறு)

பிறப்பும் மானமும் இடையரின் அன்பும்
பெருமையும் அரசர்கள் மதிப்பும்
சிறப்பும் ஆண்மையும் ஒழுக்கமும் ஞானம்
திகழ்ந்திடும் வண்மையும் தேசும்
பொறுக்கும் நெஞ்சமும் இரக்கமும் அருளும்
புகழும், வெற்றுரை பேசின்
மறுக்கும் நீதியும் மாசறு அன்பும்
மனதிலே திரைவிட அழிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. ஆற்றில் திருமுழுக்கு

அறந்தவழும் அருளப்ப முனிகையால் நதிக்கரையில்
அருளில்மூழ்கித்
திறந்தவெளி வானிருந்து ஆவியொரு புறாவடிவில்
திருவில் தங்க
"மறந்துவிடாப் பிரியமுள்ள அரியமகன் நீரென்று"
வசனம் வானில்
இருந்துவர ஆங்குநின்றார் அனைவருமே ஏங்கினார்
இயேசு என்றார்.

இறைவாக்கை எளியோர்க்கு உரைத்திடவும் நல்லுலகில்
இன்னல் கூடும்
சிறைவாழ்வில் இருப்போரை மீட்டிடவும் உரிமைகளைச்
சிதைத்து விட்டு
முறையற்ற அரசொடுக்க வாழ்வோரை மீட்டிடவும்
முன்னே வந்தோன்
கறையற்ற தொண்டர்களைத் தெரிந்தெடுத்து நாடெல்லாம்
கவலை தீர்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. தண்ணீரில் தங்கச்சாறு

***ஊரின் இயல்பு***

பாலோடு தேனாறு பாய்ந்துவரும் ஊராம்
பண்டிருந்தே பண்பாடு வளர்ந்துவரும் ஊராம்
சேலோடு கயல்பாயும் சேதாம்பல் பூக்கும்
திருவாரூர் கானாவில் திருமணத்தின் போது

***இயேசுவுக்கு மரியாதை***

மதிப்புடனே மாதரசி மாமரியாள் வந்தாள்
மகனாரும் சீடருடன் எங்கிருந்தோ வந்தார்
துதித்தார்கள் தொழுதார்கள் மணமக்கள் சூழ்ந்து
தோத்திரங்கள் சொன்னார்கள் ஆர்த்தசபை நடுவில்

***ஒருபுறத்தில் ஒதுங்கினார்***

தாயாரின் இனசனரே சதிபதிகள்; ஆங்கு
தாளங்கள் மேளங்கள்; சந்தையெனச் சத்தம்
ஓயாத பாடல்களும் இன்னிசையும் அலுத்து
ஒருபுறத்தில் ஒதுங்கிவிட்டார் உத்தமனார் இயேசு

***இரசம் இல்லை***

பந்தலிலே வந்திருந்த பலநூறு பேர்க்கு
பாங்காகப் பழச்சாறு பங்கிட்ட போது
முந்திரிகை இரசமது முடியுதென அறிந்து
மூலையிலே இருந்தமகன் முன்னர்விழுந் தோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாய், "இரசம் இல்லை" மகனார், "என்நேரம் வரவில்லை"

"மணவீட்டில் இரசமில்லை வருந்துகின்றார் அவர்க்கு
வழிசெய்ய வேண்டு"மென மாதரசி கேட்க
"எனக்கிதனைச் சொல்லுவதால் என்னபயன் அம்மா?
என்நேரம் வரவில்லை" என்றிட்டார் இயேசு.

### தாய் "சொன்னதைச் செய்யுங்கள்"

எடுபிடியாய் அங்குநின்ற ஏவலரை அழைத்து
"இயேசு என்ன சொல்வாரோ அதைச்செய்வீர்" என்றார்
நெடுத்திருந்த ஆறுபெரும் சாடிகளை நீரால்
நிரப்பிவிடும் என்றவரும் நீட்டிவிரல் காட்ட

### ஆறுசாடிகள் இரசமாய் மாறுதல்

நீர்நிறைந்த ஆறுபெரும் சாடிகளும் சாற்றின்
நிறமாக மாறிடவே பணியாளர் ஏங்கி
ஊர்அறியப் பந்தியினை நடத்துபவன் குடித்தான்
உருசியிலே அதிசிறந்த இரசமெனப் படித்தான்

### சிறந்த இரசத்தைக் கடைசியில் கொடுப்பார்களா?

எல்லாரும் முதலில்தான் நல்லிரசம் கொடுப்பார்
இனந்தெரிந்து திறம்இரசம் முடிந்து வந்தவேளை
மெல்லமெல்லத் தரம்குறைந்த இரசத்தைக் கொடுப்பார்
மிக்கசுவைப் பானமிதை இறுதியில் ஏன்கொடுத்தீர்.

### தாயார்க்குச் செய்த தனிப் பெருமை

அங்குவந்த சீடர்களும் விருந்தினரும் பிறகும்
ஆண்டவனார் இயேசுசெய்த அற்புதத்தைக் கண்டார்
தங்கநிற இரசமதின் மணங்குணத்தை அறிந்தோர்
தாயார்க்கு மனசாலே மலர்மாலை அணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடல் ஏன் கத்துகிறது

கவிக்கூற்று

அன்றைக்கே முதற்புதுமை அன்பரசன் செய்தான்
அலைகடலும் உப்புநீர் மாற்றிவிடக் கேட்டால்
பெண்ணரசோ செய்திருப்பாள் எனப்புலம்பி அழுது
பேசுகின்ற ஒலியன்றோ பெருங்கடலின் ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. அன்றும் அன்னை இன்றும் அன்னை

**அன்று**

ஆண்டவன் உதயம் செய்ய
　　ஆம்என்று சொன்ன கன்னி
ஈண்டவர் நேரம் இன்னும்
　　வரவில்லை என்று சொல்லத்
தூண்டினாள் அவளின் மோனம்
　　துயர்தரும் பார்வை கண்டார்
தீண்டிய நீரும் மேலோன்
　　திருவுளம் அறிந்த தன்றோ?

**இன்று**

வானிலே இருக்கும் அன்னை
　　"வல்லபம் உடைய மைந்தா!
தேனெனும் இரசம் கேட்டே
　　தேசத்தில் அழுதார் இங்கே
நானுனைக் கேட்டேன் மண்ணை
　　விண்ணுடன் இணைப்போன் நீயே
பால்நினைந் தூட்டி னேனே
　　பாசத்தை நினைந்து கேட்பாய்.

**நான் சொல்வது**

எனது சொல் கேட்டே அன்று
　　இரசத்தை அளித்தீர் காத்தீர்
மனதெலாம் உருகி அக்கல்–
　　வாரியில் அழுத வேளை
உன தன்பால் உலகத் தாயாய்
　　உயர்த்தினீர் எனவே இன்று
கனிவுடன் அமைதி தந்து
　　கவலைகள் போக்க வாராய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. அன்னையே அறிவாள்

கானாவூர் கண்ட கலியாண வீட்டின்பின்
ஏனோ தெரியவில்லை இயேசுவர லாற்றினிலே
கோனாரின் தாயார் குறிப்பாகப் பின்னணியில்
தானாய் மறைந்துவிட்டார் தன்னடக்கம் காரணமோ?

பன்னிருவர் சீடருடன் பலநாடும் கால்நடந்தார்
தன்னரிய சேவையினால் சஞ்சீவி யாயிருந்தார்
அன்னையெனும் தாய்க்குலத்தில் அன்பிரக்கம் காட்டிநின்றார்
கன்னித்தாய் தன்னூரில் கடும்தவத்தைச் செய்துவந்தாள்

பிரிவோ இருவருக்கும் பெருந்துயரம் தந்திருக்கும்
அரிய மகனாரை அன்னையன்றோ நன்கறிவாள்
தெரிய அவளிடமே திறப்பார் அவர்இதயம்
பிரியமுள சீடர்களோ பெருமானை நன்கறியார்

காதோடு கண்கள் செயலிழந்து போயினவோ?
ஏதுங்கள் சிந்தனையும் இயங்காது நின்றதுவோ?
ஓதுங்கள் என்றொருநாள் சீடர்களில் உறுமிவிட்டார்
தீதறியா இராயப்பர் செயலை அறிபீரோ?

மாதரசி தங்கையெனும் சலோமையாள் இயேசுவிடம்
பாதங்கள் போற்றிப் பதவிகளைக் கேட்கலையோ?
பூதலத்தில் இயேசுவெனும் பொற்பதத்தை நன்கறிந்தோர்
மாதவத்தாள் தாயே! மற்றெவரும் கற்றதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

### சொந்த ஊரில் நிந்தை

கானாவில் தோன்றியபின் கலிலேயா நாடுசென்றார்
தேனாகப் போதித்தார் செய்தார் பலபுதுமை
கோணாத அன்புடனே குணமகளார் தொழும்தலத்தில்
நாணாத நாயகனார் நற்செய்தி வாசித்தார்.

இசையாசு சுருளேட்டை இயேசு விரித்துவிட்டார்
திசையெல்லாம் போற்றுகின்ற சேதிகளை அங்குசொன்னார்
ஈசன் அருள்பொழிந்தார் என்மேல் அவர்ஆவி
தேசத்தில் ஏழைகட்கு தெரிவிப்பேன் நற்செய்தி.

வேதனையின் சிறையினிலே வெந்து துயருறுவார்
பாதை விடுதலையைப் பக்கத்தில் கண்டிடுவார்.
சோதனையில் அடிமைச் சுமையினையே தூக்கிடுவார்
நீதியின் வாசலிலே நீண்ட சுகம் பெறுவார்.

ஆண்டவனார் அருள்பொழியும் ஆண்டை முழக்கமிட
வேண்டிஇங்கே என்னை விரும்பி அனுப்பிவிட்டார்
இன்றிந்த வாசகம் ஈடேறும் நாளென்றார்
மன்றினிலே இருந்தோர் மருண்டார் வியப்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. திருவாசகம்

***இயேசுவின் உரையும் கேட்டோர் சிலர் அவரை நிந்தித்தலும்***

கங்கை நதிபோலே கருணை மடைதிறந்து
எங்குமே கேட்க இயேசு உரை கூறுகையில்
பொங்கும் பொறாமையிலே போலிக் கௌரவத்தை
அங்கண் வெளிக்காட்ட அரவுபோல் புற்றிருந்தார்.

***போதகருக்குப் புன்னுரைகள்***

கண்கள் அவர்முகத்தைக் கவ்வி இருக்கையிலே
கருத்தில் பலர் இசைந்து கனிவு சிறக்கையிலே
புண்கள் முகத்தினிலே பொருந்தும் செருக்காளர்
போதனைகள் செய்தவரைப் புன்னுரையால் பூசலிட்டார்.

***இறையரசில் பிறநாட்டாருக்கு முன்இடம்***

"இறைவாக்குச் சொல்பவரை ஏற்றதில்லைச் சொந்தஇடம்
எச்சரிக்கை உங்களுக்கு இத்தால் இடுகின்றேன்
பிறநாட்டார் பேரிறைவன் பந்தியிலே முந்திடுவார்
பின்னுக்கு நீர்வருந்திப் பேறில்லை" என்றிட்டார்.

'நில்லென்றார் அங்குசிலர் நிறுத்தென்றார் உன்பேச்சை
கொல்லென்றார் ஆளைக் கொழுத்தென்றார்' வேறுசிலர்
கல்லென்றார் கூட்டத்தில் கடலாய்ச் சனம்திரண்டு
தள்ளி மலைஉச்சி தடம்புரண்ட வேளையிலே

***தள்ளிவிட்டோர் பின்புறமாய் வீழ்தல்***

மாதரசி மாமரியாள் வருந்திக்கண் நீர்வடிய
தீயினிலே கைவிரித்த சித்திரம்போல் கைவிரிக்கப்
போதகரைத் தள்ளிவிட்டோர் பின்புறமாய் வீழ்ந்தார்கள்
புண்ணியனார் பள்ளத்தில் புன்னகையாய்ப் போனாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலமகளைக்கண்டு கொலைப்பார்வை

விழுந்தோர் எழுந்தார்கள் மீசைகளில் மண்தட்டி
வீரமெல்லாம் போன விதமென்ன என்றார்கள்
கொழுந்துக் கொடிபோல் குலமகளைக் கண்டவுடன்
கொள்ளிக் கண்ணாலே கொலைப்பார்வை பார்த்தார்கள்.

வெய்யோன் கதிரலைகள் மேற்கடலில் நீராட
வீரத்தாய் சோராமல் வீடுசென்ற போதினிலே
தையல் உறவினர்கள் தண்ணளியாய் அங்குவந்து
தனித்திருக்க ஒட்டாமல் தக்கதுணை செய்தார்கள்.

கண்ணிமைகள் முடவில்லை கன்னிமேரி அவ்விரவில்
சிமியோன் குழந்தைக்குச் செப்பியதை ஒப்புவித்தாள்
எண்ணில்லா வேதனைகள் எழுந்துவர இயேசுமகன்
ஏனிந்த வாழ்வுக்கு இசைந்தார் எனநினைந்தாள்.

மக்கள் குலம்மீட்க மனுஉருவைத் தானெடுத்தோர்
தக்க இடத்தினிலே தான்பிறத்தல் சாலாதோ?
அக்காலம் தானோ குழந்தைகளைக் கொல்லுவது?
அநியாயம் அன்றோ? அதைத்தடுத்தல் ஆகாதோ?

வளர்ந்தாரே என்வீட்டில் மற்றோரைப் போலவரும்
வாசித்தார் வேலைசெய்தார் மகனாய்ப் பணிபுரிந்தார்
இளந்திரி யானபின்பும் இளங்குழந்தை போலிருந்தார்
எனக்கோ இவர்வாழ்வு எழுதாப் புதிராகும்.

வானவனார் வந்துநின்று மகனாரின் ஆட்சிக்கு
மண்ணுலகில் ஓர்முடிவு வாராது என்றுரைத்தார்
ஏனோஇவ் வூரார் இன்றவரைக் கொல்லுதற்கு
முன்னுக்கு நின்றார் முற்றும் உணரேன்நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபல எண்ணியெண்ணி ஏங்கிநின்றாள் மாமலரால்
குன்றினிலே தன்சிலுவைக் கொடியை உயர்த்தியவன்
துன்றும் துயர்நீக்க துணைபுரிந்தால் ஆகாதோ
தென்றல்தீ யாகிவிட்டால் சிந்தை தளராதோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. என்தாயும் என் சகோதரரும்

எருசலேம் ஆலயத்தில் இயேசுபிரான் வந்துநின்றார்
திருத்தலத்தில் நின்றழுதான் சின்னக்கை ஒன்றுடையோன்

சூம்பிய கையுடையோன் துயர்தீர்க்க முன்வந்தார்
கூம்பி முகம்வெளுத்த குருக்கள் பகைத்தார்கள்

ஓய்வுநாள் பற்றி உரைத்த மறைநூலோர்
ஆய்ந்(து) அறிய அறிவுரைகள் அவ்விடத்தே சொல்லிவைத்தார்

நொண்டி சப்பாணிகளும் நோயால் பிணித்தவரும்
அண்டிவந்து தொட்டு அவரால் சுகமடைந்தார்

சீடர்களைத் தேர்ந்தெடுத்தார் திக்கெட்டும் மக்கள்அலை
மூட அறிஞருக்கு முறையாகப் புத்திசொன்னார்

கூட்டமாய் மக்களங்கு கூடியஓர் வேளையிலே
வீட்டில் இருந்து வெகுதூரம் கால்நடந்து

தாயாரும் வேறு சோதரரும் காணவந்து
ஆளை அனுப்பி அவர்வரவைக் காத்திருந்தார்

அன்னையும் சோதரரும் ஆளனுப்பி னார்களென்று
முன்னாலே நின்று மறைநூல் அறிஞர்சிலர்
சொன்ன மொழி கேட்டுத் தூயவனார் சொல்லுகின்றார்

ஈசன்சொல் கேட்டு இதமாய் நடப்பவரே
பேசு மெனக்குப் பிரியமுள்ள சோதரரும்

தாயாரும் அன்றிச் சுற்றத்தில் வேறெனக்குத்
தாயார்யார் அந்தச் சோதரர் யார் என்றிட்டார்

ஞானத் தொடர்பு என் உடலோடு ஒன்றியது
ஊனத் தொடர்பிந்த உலகோடு நின்றவிடும்

என்றார் இருந்தோர் இமையாது ஏங்கிடவே
சென்றார் இறைவன் சிந்தனையின் தேன்சுரந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பாகம்
# மாமரி மடியில் பூமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. எருசலேம் ஆலயம் இறைவன் இல்லம்

***நெருப்பு விழியால் பார்த்தார்***

நஞ்சினையும் அமுதாக்கும் நல்லோன், இந்த
நானிலத்தின் கண்கஎனும் எருச லேமின்
மஞ்சினையே தடவுகின்ற மன்னன் கோவில்-
வாசலிலே சென்றுநின்று உள்ளே பார்த்தார்
விஞ்சுகின்ற வணிகதலம் ஆயிற் றஃது!
விலைகூறி மாடாடு புறாக்கள் விற்பார்
நெஞ்சுசுட நாணயங்கள் மாற்றுவோரை
நெருப்புவிழி யால் பார்த்தார் கரும்பின் நல்லோன்.

***ஈசனின் இல்லம்***

அஞ்சிடவே சாட்டையொன்றைத் திரித்தார் அங்கே
அடித்தவரைக் கலைத்திட்டார் ஆடு மாடு
வெஞ்சினத்தால் பாய்ந்திடவே மேசை மீது
விளையாடும் நாணயங்கள் கவிழ்த்துக் கொட்டி
எஞ்சியஅப் புறாக்களையும் கலைத்துச் சீறி
எந்தையின் இவ் இல்லத்தை இழிவு செய்தீர்
பஞ்சின்மெல் அடியாளும் பார்க்க அந்தப்
பாதகரைக் கலைத்திட்டார் பறந்தார் மற்றோர்.

***இடித்தகோவிலை மூன்று நாளில் கட்டுவேன்***

பூவினிலே அதிகாரம் உடையார் போலப்
பொதுமன்றில் நடந்திட்டீர் அதற்கு ஏதும்
மேவுகின்ற அறிகுறியும் உண்டோ என்று
வினவுகின்ற கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்
காவியம்போல் கலைசிறந்த ஆல யத்தைக்
கடிதினிலே இடித்துஅழிப்பீர் மூன்று நாளில்
ஓவியம்போல் உயர்த்திடுவேன் காண்பீர் என்றார்
உண்மையினை ஓராதார் உணர்ச்சி பொங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நம்பிவிட்டோம்

"வருந்தியிதை நாற்பத்தா றாண்டு காலம்
மாமன்னன் சலமோனார் உலகத் திக்கில்
பொருந்துகின்ற செல்வமெலாம் கொண்டு வந்து
புகழ்வடியும் ஆலயத்தைக் கட்டிக் காத்தார்
பரந் தெழுந்த கலைக்கோவில் இடித்து விட்டால்
பார்த்திருக்க மூன்றேநாள் முடிப்பேன் என்று
நரம்பில்லா நாக்காலே சொன்னால் நாங்கள்
நம்பிவிடோம் என்றார்கள்" நகைத்தார் நாதன்.

### போற்றினார்கள் தூற்றினார்கள்

தோற்றமதில் அருஞ்செயலில் அஞ்சா நெஞ்சில்
தூய்மையிலே இவர்தான்எம் மீட்பர் என்று
போற்றிஅவர் பின்சென்றார் எண்ணில் லாதோர்
போதனையை ஏற்காது குற்றம் கண்டு
கூற்றுவன்போல் எதிர்த்தார்கள் பலபேர் அந்தக்
கூட்டத்தில் அவரையே கொல்ல எண்ணி
ஆற்றலுடன் திட்டங்கள் போட்டார் வல்லோர்
அறியாதார் போலிவற்றை அறிந்தாள் அன்னை.

### கடைசி விருந்து

இன்னமுதம் உண்ணுதற்கு வாரீர் என்று
ஈராறு சீடர்களை அழைத்துக் கொண்டு
தன்னருமைக் கையாலே அவர்கள் காலைத்
தாழ்மையுடன் கழுவியபின் அமுதை ஏந்திப்
பொன்னுருவை மண்ணுலகில் நினைக்கு மாறு!
புகழ்பெற்ற திருவிருந்தைப் பங்கிட் டீந்து
என்னுடனே உணவருந்தும் ஒருவன் நண்பன்
இன்றைக்கே எனைக்காட்டிக் கொடுப்பான் என்றார்.

---

இன்னமுதம் இனிய அமுதம் (தேவர் உணவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரவு

அருளில் இதயமும் அகந்தைச் சரிதமும்
அழிவின் நியதியும் அதிர்ந் திடும்
பொருளில் உரைகளும் புகழில் விருப்பமும்
பொய்யின் உருவமும் காட்டிலே
திரியும் நரியினை எதிரில் வென்றிடும்
தீய தந்திரச் சேர்க்கையும்
இருளில் கரடிகள் தழுவும் கரமென
எழுந்து வந்தது இரவுதான்.

(அருள் இல்லாத இதயங்களும் அகங்காரத்தின் ஆதிக்கமும் அதனால் வந்த அழிவின் தொடர்புகளும், சத்தமிடுகின்ற கருத்தில்லாத பேச்சுகளும், புகழில் விருப்பமும் பொய்யும், தந்திரமும் ஒன்று சேர்ந்து கட்டித் தழுவ, அன்று இரவு வந்து சேர்ந்தது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. துயரம் தொடங்கிற்று

### இருளின் நேரம்

ஆற்றினுக்கு அப்பாலோர் அமைதித் தோட்டம்
ஆங்கிருந்து ஆண்டவனார் செபித்த வேளை
கூற்றுவனின் கூட்டமெனக் குருக்கள் தொண்டர்
கூர் ஈட்டி வாள் கத்தி கொண்டு வந்தார்
சாற்றுகின்ற யூதாசும் அங்கே நின்றான்
தண்ணளியின் வேந்தனார் "நான்தான் இயேசு
ஆற்றலுடன் இருளாட்சி புரியும் நேரம்
ஆகையினால் எனைப்பிடிக்க வந்தீர்" என்றார்.

### வேதனையின் ஈட்டி

எண்ணில்லா உவகையுடன் அவரைக் கட்டி
இடர்புரியும் திருடனைப்போல் இழுத்துக் கொண்டு
கண்ணில்லாப் பெரியகுரு வாசல் சென்றார்
கபடநரி மூப்பர்களும் கூடி நின்றார்
மண்ணினிலே என்னகுற்றம் செய்தான் என்று
மதகுருமார் தலைஉடைத்தார் குற்றம் காண
வெண்ணிறத்து மதியமெனும் தாயா ருக்கு
வேதனையின் ஈட்டியொன்று பாய்ந்த தம்மா!

### யாரை விடுதலை செய்ய?

"சதிகாரன்! தான், கடவுள் மகனார் என்றான்!
சண்டாளன்! துரோகி!" என அறைந்து துப்பி
அதிகாரி பிலாத்துவிடம் அழைத்துச் செல்ல
அவனவரில் குற்றமொன்றும் அறியான் ஆகி
மதி கலங்கி மதகுருமார் மனதைத் தேற்ற
"வன்கொலைஞன் பரபாசை அன்றேல் உங்கள்
பதி அரசன் இயேசு இதில் யாரை நீங்கள்
பரிந்திடுவீர் விடுதலைக்கு?" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

### எழுதாத ஓவியம் அழுதாள்!

பழுதான நெஞ்சுடையோர் முன்னணியில் நின்றோரைப்
பாங்காய் ஏவி
முழுதாக ஒருகுரலில் "பரபாசை விடுதலைசெய்!"
முதல்வா என்று
கழுதைகளாய்க் கத்திடவே குடிப்பிறந்த மாதர்சிலர்
கண்ணீர் வார்க்க
எழுதாத ஓவியமாய் ஒதுங்கிநின்ற மரியமலர்
இதயம் நொந்தாள்!

### மாதா இரத்தம் தோய்ந்த மகனைக் காண்கிறாள்

கற்றூணில் கட்டி அவர் கன்னத்தில் துப்பி வல்ல
கசை நார் கொண்டு
சற்றேனும் இடமின்றி உடல் முழுவதும் படுகாயம்
சாறாய் ஊற்ற
முற்றாக வளைந்தஒரு முள்முடியும் தலைமீது
மூங்கில் கையில்
நற்றாயார் கண்டமகன் அரண்மனைக்கு வந்திடவே
நயனம் சோர்ந்தாள்.

### மண்கலங்க விண்கலங்கும்

மண் கலங்க விண்கலங்க பிலாத்தனுமே மனங்கலங்கி
"மனிதனைப் பார்!
கண் கலங்க வில்லையோ?" என்றிரக்கம் எதிர்பார்த்துக்
கைகள் தூக்க
எண் கலங்கும் மக்களிலே இதயமுள்ளோர் தலைமீது
இருகை ஏந்தப்
பண் கலங்கும் மொழியரசி வளர்த்தஉடல் சொரிகுருதி
பார்த்தாள் அந்தோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T182C

### சிலுவையில் அறையும்

பூமடந்தை நீர்சொரியப் புகழ்மடந்தை நீர்சொரியப்
பொய் சொல் லாத
நாமடந்தை நீர்சொரிய வான்மடந்தை நீர்சொரிய
நாதன் தாயாம்
மாமடந்தை நீர்சொரியச் சிலுவையிலே அறையுமென
மதிகெட்டோர்கள்
கோ மடந்தை நீதிஎன்பாள் மாரடித்துப் புலம்பிடவே
குறிப்பாய்க் கேட்டார்.

### சிலுவை சுமந்தபோது

நோக்கியகண் இமையாமல் தூக்கியதோள் சோராமல்
நொந்து நொந்து
தேக்கியசெஞ் சிலுவையினை எம்பெருமான் சுமந்திடவே
"தேசம் எல்லாம்
காக்கவந்த கடவுளையே கைவிடுவார்" என்ற உரை
கணத்தில் ஓர்ந்து
நீக்கமறப் பாலினிலே நெய்போன்றான் திருவடியை
நினைந்தாள் மாதோ!

### பால்தந்த நெஞ்சில் துயர்வந்து விஞ்சல்

பால்வென்ற திருநிறமும் பனிவென்ற வெண்நகையும்,
பார்க்கும் போது
சேல்வென்ற கண்விழியும், அமுதூறு திருமொழியும்,
சிந்தை யூர
மால்கொண்ட மாதரசி மகன்சிலுவை தூக்கிவந்து
வழியில் வீழ
பால் தந்த நெஞ்சினிலே துயர்வந்து விஞ்சிடவே
பரிவாய்ப் பார்த்தாள்.

---

சேல்: கயல்மீன், ஊர: மனதில் திரைபோல் ஓட, மால்: மயக்கம், லூக்காஸ் 2-35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துயரத்தின் இமயமலை இரண்டு

குன்றினிலே விழுந்து எழும்பக் கண்ணீரைச் செந்நீரின்
குமிழி மூட
அன்றலர்ந்த தாமரைபோல் அன்னைமுகம் தனைநோக்கி
அழுத கண்ணீர்
ஒன்றொன்றாய் முத்துருளத் தாயாரின் துயர்க்கண்ணீர்
உடைத்துப் பாய
இன்று இந்த உலகினிலே துயரத்தின் இமயமலை
இரண்டைக் கண்டோம்.

### உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்

நச்சரவு போன்றவர்கள் அச்சுதனைச் சாட்டைகளால்
நலியத் தாக்க
அச்சமயம் அங்கழுத அரிவையரை அரைக்கண்ணால்
அன்பில் நோக்கி
"பச்சைமரம் இப்படியே பாடுபட்டால் பட்டமரம்
பஞ்சாய்ப் போகும்
இச்சகத்தில் எனக்காக அழவேண்டாம் அழுவீர் உம்
இனத்தை எண்ணி".

### சிலுவையில் அறைதல்

வெய்ய பகல் கண்மூட விழிசோர மொழிசோர
மெய்யும் சோர
ஐயனையே சிலுவையிலே கிடத்தியந்த வேளையிலே
ஆணி கொண்டு
கையினிலே அடித்திடவே தசை கிழித்து என்புகளைத்
தகர்த்த வாறு
செய்யமலர்க் கரங்களிலே ஊடுருவக் கண்டதாய்
சிலையாய்ப் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏன் மூன்று ஆணி

கறை கொண்ட மனிதர்களின் வரலாற்றுக் கோர் ஆணி
கருணை சிந்தும்
நிறை கொண்ட அன்புமொழி கேளாதோர் பிறர்மேலே
நேசம் இல்லார்
குறை கொண்ட முறையற்ற வாழ்வுக்கு ஓர் ஆணி
குடி யிருந்த
பிறை நுதலாள் இதயத்தில் ஓர்ஆணி குருதிவெள்ளம்
பெருகிற்றம்மா!

### தாயில் பாயாமல் ஆணி மகனிற் பாயுமா?

பொன்னுருவைச் சிலுவையிலே கிடத்தியந்தப் பூங்கரத்தில்
பொழிந்த ஆணி
மின்உருவ நுண்இடையாள் கைகளிலும் கால்களிலும்
வீறாய் ஏறி
பின்னர் அன்றோ பெற்றமகன் உடல்பாய்ந்த தென்றறிவீர்
பெரியோர் சொல்வார்
பன்னிரண்டு மணிபகலில் வெய்யோனும் கார்இருளைப்
பருகினானே!

### கல்வாரியில் மாதாவின் பலி

புத்திரன்ஒன் றில்லையெனப் புரிவரிய தவம் புரிந்து
பூமி தேவி
இத்தலத்தில் கண்டெடுத்த இயேசுவெனும் இளஞ்சுடர்போய்
மறையும்போது
சித்திரம்போல் திருமகளார் அருகிலொரு குருமகனாய்ச்
சிந்தைகூர்ந்து
நித்தியத்தின் திருப்பலியை விண்ணரசன் ஏற்கவென
வேண்டினாளே.

---

புரிவரிய: செய்ய அரிதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இதோ உங்கள் தாய்*

கள்வர்களின் நடுவினிலே கைவிரித்து இரத்தத்தில்
கண்கள் தோய்ந்தோன்
வெள்ளமெனும் மக்களிடை வியாகுலத்தின் மாதாவும்
வெதும்பும் பெண்கள்,
உள்ளத்தில் துயர்நிறைந்த சீடர்களும் கூடிநிற்க
உருகு வோரை
வள்ளலார் தேற்றுதற்கு நினைத்திட்டார் உரைத்தாரே
வசனம் இரண்டு.

*இதோ உன்தாய், இதோ உமதுமகன்*

விண்ணினையும் மண்ணினையும் இனிதுணர்ந்தோன் மனிதகுலம்
விரும்பிக் கேட்க
எண்ணியங்கே அருளப்பர் சீடனையே கடைக்கண்ணால்
இனிது பார்த்து
''உன்னுடைய அன்னையிதோ'' என்றந்த அன்னையரை
ஒப்படைத்தார்
பொன்னிதயத் தாயார்க்கு ''இதோஉன் புதல்வனெ''னப்
புகன்றார் அம்மா!

வேறு

*எல்லோர்க்கும் தாய்*

சொந்தத் தந்தை இறைவனையே
சொல்லும் எங்கள் செபங்களிலே
நிந்தம் கொண்டு எங்கள்அன்பு
நேசத் தந்தாய் எனஉரைக்க
சிந்தை கூர்ந்து உறவளித்த
செல்வச் சீமான் தன்தாயை
இந்த உலகில் எல்லோர்க்கும்
இரங்கும் தாயாய் கொடையளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சின் அடியாள் பிஞ்சினிலே
    பரிவாய்க் காத்தாள்; மகனாரை
தஞ்சம் அளிக்கும் தவஉடலம்
    தரணி அனைத்தும் ஆல்போலே
விஞ்சிப் பரந்து செழித்தாலும்
    மேலும் அவளே பொறுப்பன்றோ?
நெஞ்சார் அன்பின் நிலையினிலே
    நேசம் கொண்டே காத்திடுவாள்.

இறைவன் இயேசுவின் உடல் இன்று உலகம் முழுவதும் பரந்துள்ளது. அதைக் காக்கும் பொறுப்பும் தாய்க்கு உள்ளது.

வேறு

## *தாயே*

நாட்டில் மக்கள் துயரந் துடைத்தாயே
    நாவில் உன்பேரைச் சொல்ல இனித்தாயே
பாட்டின் இன்னிசை கேட்டு மகிழ்ந்தாயே
    பாயில் சாவிலே பக்கம் இருந்தாயே
வீட்டில் கவலைக் கடலிற் கலந்தாயே
    வெந்து கலங்கிட வந்து அணைத்தாயே
காட்டில் உன்னருள் கொட்டிக் குவித்தாயே
    கனிவின் உன்முகம் காட்டிச் சுவைத்தாயே.

மருத மடுவினில் வாழ்ந்திடும் எந்தாயே
    மனித நோய்க்கு மருந்திட வந்தாயே
கருணைக் கண்ணில் இரக்கம் நிறைந்தாயே
    கப்பல் தாழக் கரையினில் சேர்த்தாயே
சொரியும் கண்ணீர்த் துயரிலே காத்தாயே
    தூய மாலையைச் சொல்ல ஒலித்தாயே
விரியும் அகதிகள் வெந்துயர் தீர்த்தாயே
    வேரை வெட்டினும் முளைவிடச் செய்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. பிரிந்தார்

*மரம் செடிகள் உற்றுநோக்கல்*

எந்தையே எந்தையே ஏன்என்னைக் கைவிட்டீர்
என்றந்த இயேசு கேட்க
விந்தையாய் மரஞ்செடிகள் காற்றுமலை ஒளிசோர்ந்து
விறைத்தபடி உற்றுநோக்க
நொந்தவரின் காலடியில் நின்றந்த மரியாளும்
நோக்கினாள் கடைசி மூச்சை
அந்தரத்தில் கைவிரித்த அமலனவன் அனைத்துமே
ஆனதென மோனமானான்.

*வந்தவழிசென்றார்!*

பழியெலாம் திரண்டதெனப் பாரெலாம் கறுத்திருளப்
பானு பகல் ஓடிமறைய
விழியெல்லாம் நீர்நிறைய வீரமகள் இவ்வுலகின்
வெறுமையைக் கண்டு நோக
அழிவிலா உடலமதை அன்னைமடி மீதிலே
அணைத்தவர்கள் ஆவிசோர
வழியோடு கதியும்யான் என்றவன் வானரசில்
வந்தவழி சென்றனரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. மாமரி மடியில் பூமகன்

### அன்னையின் தோற்றம்

எழுதியவோர் படிவமென ஆங்கே நின்றாள்
இதயத்தில் இமயமலைக் கவலை தூக்கி
அழுதழுது அழித்தகண்ணாள் அவலம் தன்னை
அளந்திடுமோர் கருவியெனத் தோன்று கின்றாள்
தொழுதுவரும் இறைவனுக்கே துயரம் சொன்னாள்
சொல்லரிய எருசலேம் மகளே! உந்தன்
முழுதுதுயர் துடைப்பவர்யார் ஆற்றித் தோற்றும்
மொழிகள்சில உரைப்பவர்யார் முன்னால் நின்றே.

### மைந்தனை நோக்கினாள்

இன்றுலகில் துயரத்தின் எல்லைகாணும்
ஏந்திழையை மாந்தருக்குள் காண வேண்டின்
சென்றிடுவீர் சிலுவையடி தனிலே! ஆங்கு
திருமகனின் முகம்பார்த்துக் கண்ணீர் வார்த்து
பொன்றியவன் திருத்தலைமுள் முடியைப் பார்த்து
பூமிக்கு நீதிசொன்ன நெஞ்சைப் பார்த்துக்
கொன்றஉடல் கைகாலின் காயம் பார்த்துக்
"குறையென்ன கண்மணியே! செய்தாய்" என்றாள்.

### மாமரிபுலம்பல்

"சூரியனே! சந்திரனே! வான மீது
தோன்றுகின்ற விண்மீன்காள்! மலையே! காற்றே!
சீரியவோர் ஞானியெனும் சலமோன் செய்த
திருக்கோயில் தலமே! நல் நீரைக் கொண்டு
ஊரினிலே வளஞ்சுரக்கும் யோர்தான் ஆறே!
உயர்நிலமே! மரம்செடியே! கொடியே! இந்தப்
பாரினிலே இவ்வாறோர் கொலையைக் கண்டு
கேட்டிருந்தால் வாய்திறந்து பகலும்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### என்னகுற்றம் புரிந்தீர்?

"என்னருமை மகனாரே என்ன குற்றம்
இவ்வுலகில் நீர்புரிந்தீர் மாசில் லாத
பொன்னிதயம் திறந்தெவர்க்கும் நன்மைசெய்தீர்
போற்றிடவே உயிரளித்தீர் உடையில் தொட்டே
பெண்ணொருத்தி பெரும்பயனை அடைந்தா ளன்றோ
பிறர்பணியில் அன்பரசை நாட்ட வந்தீர்
கண்ணற்றோர் சிலுவையிலே அறைந்தார் ஐயா
கண்டவர்க்கும் கேட்டவர்க்கும் கரும்பாய் வாழ்ந்தீர்

### பழங்கிணற்றடியில்

பாக்கோடு பழமரங்கள் சோலை சூழ்ந்து
பழனமெனும் சமாரியா நாட்டின் ஓர்பால்
யாக்கோப்பின் கிணற்றடியில் மத்தி யானம்
சாக்கோலத் தோடுவந்த பெண்ணைக் கண்டு
பூக்கோலம் ஆக்கிடவே தண்ணீர் கேட்டுப்
பொற்கோலச் சீவசலம் தருவேன் என்று
வாக்கோடு ஊரையங்கு வரவே கூட்டி
வாழ்வளித்த வள்ளலுக்கு முடியில் முள்ளோ?

### சிலுவையின் வழி இதுவா?

திங்களெனக் கையினிலே கிடந்த ஞான்று
தேடிவந்தார் இடையர் உமைத் தெய்வம் என்றார்
எங்கள்அரசே! என்று மூன்று வேந்தர்
இணையடியில் முடிதாழ்த்தி வணங்கி நின்றார்
மங்களமாய் உமைப்புகழ்ந்தார் கோயில் மன்றில்
வாழ்ந்த இரு தூயோர்கள், கொடிகள் தூக்கிப்
பொங்குசனக் கூட்டத்தில் அரசே என்று
போற்றிநின்றார் சிலுவைவழி இவைகள் தானோ?

---

' பழனம்: பொய்கை நீர்நிலை, யாக்கோப்பின் கிணறு: ஆதி காலத்தில் வாழ்ந்த மூதையரில் ஒருவர் கட்டியகிணறு. சாக்கோலம்: பாவத்தின் சாயல். சீவசலம்: தண்ணீர்த் தாகம் உண்டாகாத அமுதநீர். இருதூயோர்: சிமியோன் ஆனாள் என்போன்.

### இயேசுவைப் போல் கண்டதுண்டோ?

''திருமகனை முதற்கண்ட பெத்த லேமே
சீராட்டி நான்வளர்த்த நசரேத் தூரே
அரும்உரைகள் செவிகேட்ட யெருச லேமே
அற்புதஞ்சேர் பணியறிந்த மக்காள்! ஞானம்
பெருகிவரும் கலிலேயா கானா ஊரே!
பிரியாத கப்பர்நாம் சமாரி யாவே!
ஒருமகனை இயேசுவைப்போல் கண்ட துண்டோ!
உண்மையினை ஓதிடுவீர் உலகம் கேட்க.

### உத்தமன் போல் ஒருவருண்டோ

பொங்குகின்ற கலிலேயாக் கடலே! அமுதம்
பொழிகின்ற மேகங்காள்! குருவி! கோட்டான்
மங்கையெந்தன் மனம்போலும் நெருப்பே! மைந்தன்
வழிநடந்த வீதிகளே! ஊரே! நாடே!
செங்கதிரோன் சொற்கேட்ட திக்கே! தங்கிச்
சேவைசெய்த திருத்தலங்காள்! வீடே! காடே!
உங்களிடம் கேட்கிறேன் அடியாள் இந்த
உத்தமனைப் போலுலகில் ஒருவன் உண்டோ?

### பசுங்கிளிக்கு என்னபெயர்?

பன்னிரண்டு வயதினிலே ஒருநாள் சின்னப்
பசுங்கிளியைக் கொண்டுவந்து கூட்டில் வைத்து
அன்னமுடன் பால்கொடுத்து வளர்க்கக் கண்டு
அந்தஇளங் கிளிக்கென்ன பெயரோ?'' என்றேன்
''என்னரிய அன்னையரே! 'மரியாய் மாதா'
என்றுபெயர் அளித்திட்டேன்'' என்றீர் அந்த
இன்னமுத மானகிளி அழைக்கும் ஓசை
இயேசுவெனும் பெயரினிலும் இனிய தாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தீர் சிலுவை

"முன்னொருநாள் கதவுநிலை செய்ய வென்று
முற்றத்தில் கிடந்தமரத் துண்டு இரண்டை
நன்னயமாய்ப் பொருத்தியொரு சிலுவை செய்தீர்
நானதனைக் கண்டவுடன் மகனே ஈது
இந்நிலத்தில் கயவர்களைக் கொல்லுதற்கு
இயங்குமொரு கருவியெனச் சிரித்தீர் "அம்மா
பின்னொருகால் வெற்றிக்கோர் சின்னம்" என்றீர்
பிள்ளைமொழி எனநினைந்தேன் பொருளைக் கண்டேன்.

## விழுந்தது கூராணி

கூரையொன்றை உமைவளர்த்த தந்தை செய்தார்
கூராணி, மூலக்கை பொருத்தும் போது
நேராக விழுந்ததுமது காலைத் தாக்க
நெஞ்சினிலே நான்வளர்த்திக் கதறக்கேட்டு
ஊராரே வந்துவிட்டார் சிரித்தீர் பார்த்து
'ஓராணி பட்டவுடன் ஓலம் இட்டீர்
வாறாகக் கைகாலில் ஆணி தைத்தால்
மாதாவே என்செய்வீர்?' என்றீர் அன்றே.

## இரசம் இல்லை

"கானாவூர்க் கலியாண வீட்டில் அன்று
கண்மணியே இரசமில்லை என்று சொன்னேன்
தேனான தீமிரசம் ஆக்கித் தந்தீர்
தேவையெனத் தாய்கேட்கப் புதுமை செய்தீர்
போனாரைப் பந்தியிலே இருத்தி ஐந்து
ஆயிரம்பேர் புத்துணவை அருந்தச் செய்தீர்
வானாடு போகுமுன்னர் தண்ணீர் கேட்டீர்
வாயினிலே வேப்பெண்ணைய்க் காடி வார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12 வயதில்

''பன்னிரண்டு வயதினிலே உம்மைத் தேடிப்
பரிதவித்து அடியாளும் வழிகள் நீளம்
கண்மணியைக் கண்டீரோ என்று கேட்டுக்
கவலையிலே அலைந்துலைந்து கோயில் மன்றில்
பொன்னுரைகள் புகலுவதைக் கண்டு கேட்கப்
'புதல்வன்யான் என்தந்தை இல்லந் தன்னில்
என்னுடைய பணிகளையான் செய்ய வேண்டும்'
என்றிட்டீர் பணிபுரிய இன்றோ சென்றீர்.

### கன்னத்தில் அடித்தவர்க்கு

''கன்னத்தில் அடித்தவர்க்கு மறுகன் னத்தைக்
காட்டுங்கள்'' என்றுசொன்னீர் மலையில் நின்று
''வன்னெஞ்சுப் பகைவர்க்கு அன்பு செய்யும்
மனம்மொழியால் சபிப்போர்க்கு ஆசி கூறும்
முன்னின்று தூற்றிடினும் மன்னிப்பீந்து
முற்றாக வெறுப்போரை நேசி'' என்று
கன்னல்மொழி சொல்லிவிட்டுச் சிலுவை ஏறிக்
''கடிந்தவரை மன்னியுங்கள்'' என்றாய் சான்றோய்.

கடிந்தவர்களை மன்னியுங்கள்: சிலுவையில் நின்று இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் பிதாவே இவர்களை மன்னியுங்கள் என்றார்.

### கால்களைக் கண்ணீரால் கழுவினாள் ஒருத்தி

மண்ணினிலே பாவியென்று பேர்ப டைத்த
மாதொருத்தி காலடியில் வந்து வீழ்ந்து
புண்ணியனே உன்காலை முத்த மிட்டுப்
பொழுதெல்லாம் கண்ணீரால் கழுவிப் பின்னர்
எண்ணையினால் பூசியபின் கூந்த லாலே
இணையடிகள் துடைத்திட்டாள் சீமோன் வீட்டில்
அன்னவளின் இதயத்தில் கருணை வார்த்த
அருளிதயம் ஈட்டியினால் பிளக்கலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சிலுவை பூமாலையோ*

கண்ணொளியை இழந்தவர்க்குப் பார்வை ஈந்தீர்
கடும்நோயில் வீழ்ந்தவர்க்குக் கருணை செய்தீர்
எண்ணி வந்த திமிர்வாதக் காரன் தேற
ஏற்றிவந்த கட்டிலையும் எடுக்கச் சொன்னீர்
மண்ணிலரும் அன்புகொண்ட இலாசர் வாழ
மரணத்தின் கல்லறையில் நின்று மீட்டீர்
எண்ணரிய புதுமைகளைச் செய்த மைந்தா
இச்சிலுவை பூமாலை எனவோ ஏற்றாய்.

### இடர் தீர்க்கும் வழி

வானமுடன் ஆழ்கடலும் துளங்கி னாலும்
மதியுடனே சூரியனும் துளங்கி னாலும்
நானிலமும் மலை நதியுந் துளங்கி னாலும்
ஞானமுதல் மறைதானும் துளங்கி னாலும்
தேனமுத மானஉந்தன் சொல்லில் ஒன்று
தினையளவுந் துளங்கிடுமோ இல்லை அன்றோ
ஏனரசே! வாய்மூடி மவுனி யானாய்
இடர்துடைக்கும் வழியிதுவே அறியேன் கண்டாய்.

---

துளங்குதல்: நிலை கலங்குதல், அசைதல். மறை துளங்குதல்–உறுதிப்பொருளை உணர்த்தும் மறைகள் நல்வழி தீவழி தெரிவிப்பதில் தடுமாறுதல், மதி: சூரியன், துளங்குதல்: உரியகாலத்தில் உதித்து அஸ்தமிக்கும் முறைமையில் தவறுதல்.
பஞ்சபூதங்கள் முதற் காரணமாகிய வானத்தையும் காரியமாய் ஈற்றதாகிய நானிலத்தையும் கூறவே இடைப்பட்டனவான காற்று, நீர், தீ முதலிய மூன்று பூதங்களையும் குறித்தவாறாயிற்று.
வேலை கரை இழந்தால் வேத நெறி இழந்தால் ஞாலமுழுது நடுவிழந்தால்
சீலம், ஒழிவாரோ செம்மை உரைதிறம்பாய்ச் செய்கை அழிவரோ செங்கோலவர் என்றாற் போல் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயும் இனிக்கும் தாயே!

### *வெள்ளம் என்பார் வெறும் பொய்யோ?*

கண்ணும் கருத்தும் நீயன்றோ
 கசிந்து கசிந்து நானுருகிப்
பண்ணும் செபங்கள் தபங்களெலாம்
 பாலை வனத்து நீராமோ?
எண்ணும் சிந்தை உனக்கிலையோ?
 இடரில் உதவிக் களைத்தாயோ?
விண்ணும் கண்ணும் புகழ்கருணை
 வெள்ளம் என்பார் வெறும் பொய்யோ?

### *விரும்பி அழைத்தேன் கரும்பே*

உள்ளம் என்ற இருள் திரையில்
 உடனே ஞானச் சூரியனை
மெள்ள ஏற்றி விடுமாறு
 விரும்பி அழைத்தேன் கரும்பே நீ
எள்ளத் தனையும் இரங்காயோ
 எங்கே போவேன் உன் அன்பில்
அள்ளி முழுகி அடி தொட்டால்
 அங்கம் தங்கம் ஆகுமன்றோ?

### *மனதில் மருதமடு என்றால்*

மனதில் மருத மடு வென்றால்
 வாயும் இனிக்கும் தாயே! நீ
எனது குடும்ப விளக்கன்றோ
 இன்னல் தீர்த்த மருந்தன்றோ
கனியே தேனே கற்கண்டே
 கண்ணே கண்ணுள் கருமணியே
இனிய ஞான நிலவே! என்
 இதயம் தந்தேன் இதழ் திறவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. கண்ணீரில் மிதந்த கல்வாரி

***கவலைக்கண்ணீர்***

அண்ணலை மடியில் வைத்து
அன்னையர் அழுத போது
விண்ணவர் அழுதார் வான
விளக்குகள் அழுதது அம்மா
பெண்ணினம் கதற நேசப்
பிள்ளைகள் அழுதார் இயேசு
அண்ணலார் நடந்த மண்ணும்
ஐயோ என்(று) அழுத(து) அம்மா

வானவிளக்கு: சூரியன், சந்திரன், விண்மீன்கள்.

திக் கெலாம் அழவே வானம்
சிந்தியே கண்ணீர் வார்க்க
பக்கத்தில் மரங்கள் பூக்கள்
பறவைகள் பசுக்கள் கன்று
துக்கத்தின் மலைகள் ஆறு
தூரத்துக் கடல்கள் மேகம்
விக்கியே அழுத கோலம்
விரிக்கிலோ பெருகும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. பாசமும் பந்தமும்

## *அம்மா என்றார் அரியமைந்தன்*

நேயத் தாய் மகனை எண்ணி
        நெஞ்சினைத் துவைத்த வேளை
தூயவன் சொற்கள் அந்தத்
        துயரத்தைத் துடைத்து நிற்க
ஞாயிறு விடியல் இயேசு
        நாயகன் அங்கே நின்றார்
வாயிலே அம்மா என்றோர்
        வார்த்தையே மவுனம் ஆனார்.

தூயவன் சொற்கள்-இயேசு முன்பு சொன்ன வார்த்தைகள்

## *அன்பு கொட்டியது*

"கண்ணினில் இனிய தாயே
        கற்கண்டே அம்மா! இங்கே
உன்னரும் மைந்தன்" என்று
        உரைத்ததும் அதிர்ந்தாள் அன்னை
என்மணி இயேசு என்றாள்
        இருகையை நீட்டிச் சென்று
தன்னுயிர் தேயு மாறு
        தழுவினாள் அன்பைக் கொட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

### புதிய உலகம்

உயிரே இனிய மகனே
    உயிர்த்தீர் உலகு களிக்க
துயரால் நனைந்து துடித்தேன்
    துன்பச் சிலுவை சுமந்தீர்
அயராப் பணிகள் புரிந்தீர்
    அன்பின் பயிர்கள் நட்டீர்
புயலாய் ஆண்டு மூன்றாய்ப்
    புதிய உலகம் படைத்தீர்.

### பாசம் தளம்புமோ?

நிலம் தளம்பினும் நெஞ்சமே
    தளம்பினும் நிகரில்
குலம் தளம்பினும் கொள்கைகள்
    தளம்பினும் தவத்தின்
நலம் தளம்பினும் நன்னெறி
    தளம்பினும் உடலின்
பலம் தளம்பினும் பாசமோ
    தளம்புமோ மகனே!

156901

விவிலிய நூலில் உயிர்த்த இயேசுபிரான் தாயாரைச் சந்தித்ததாகச் செய்தி இல்லை. ஆனால் பாரம்பரியத்தைக் கொண்டு பல வேதநூல் அறிஞர் இதை ஏற்றுக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42. அன்னையின் கடைசிப்படிகள்

**தூயஆவி பெறக் காத்திருத்தல்**

கண்ணீரால் கால்கழுவித் துயரம் தீர்த்த
காரிகைக்கு அன்பரசன் காட்சி தந்தார்
பெண்ணவளின் வாயாலே உயிர்த்த சேதி
பிறரறிந்தார் சீடர்களும் நேரில் கண்டார்
விண்ணகமே செல்லுமுன்னர் கருத்து முற்றும்
விரித்திட்டார் சீடருக்கு, வழியைக் காட்டும்
பெண்ணரசி யுடனவர்கள் தூய ஆவி
பெற்றிடவே காத்திருந்து செபத்தில் தோய்ந்தார்.

**அன்னையின் அருகில்**

ஆறுதலைத் தேடிவந்தோர், அன்னாய் என்றார்
அமைதி நிழல் தேடிவந்தோர் அதனைக் கண்டார்
கூறுகின்ற சோழகமே அடிக்கும் போது
சுழலுகின்ற சருகுகள்போல் இருந்தோர் தானும்
வேறுபட்ட அருள்வளத்தை அங்கு பெற்றார்
வீரமொடு தூய்மை அருள் அன்பு இரக்கம்
ஊறிவரும் பனிமலையாள் செபத்தில் ஆழ்ந்து
உறுதிபெறும் ஆவிபெற இருந்த வேளை

**அக்கினி நாக்கு**

வானத்தின் முகட்டினிலே கொடிய காற்று
வல்லமைசேர் ஒலியோடு சேர்ந்து வீசி
ஞானத்தின் முற்றத்தில் நிரம்பக் கண்டார்
நாக்குவடி வாயிருந்த நெருப்புக் கீறு
மோனத்தின் தொண்டர்களில் இறங்கிற் றந்த
முத்தொலியால் பலவேறு மொழிகள் பேசி
மானிடர்க்கு நற்செய்தி உலகம் எங்கும்
வளங்கிடவே உறுதிகொண்டார் வழியும் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையும் ஆவியால் நிரம்பினாள்

அன்றொருநாள் ஆண்டவனின் அடியாள் என்று
அருந்**தூய ஆவி**யினால் நிறைந்த மாது
இன்றந்த இறைமகனார் விண்ணுக் கேக
ஈண்டுவந்த ஆவியினால் நிரம்ப லானாள்
குன்றாத திருச்சபையின் தாயார், மக்கள்
குலத்துக்கே அன்னையெனும் பொறுப்பை ஏற்றாள்
இன்றைக்கோ விண்ணுலகில் முடியும் சூடி
இல்லையென்ற சொல்லறியாச் செல்வி யானாள்.

## தினம்தோறும் பலி ஒப்புக் கொடுத்தாள்

சிலுவையுடன் பாதையிலே சென்ற அன்னை
திருக்கூட்டம் பின்தொடரக் கோயில் சென்று
பலியான திருச்சுதனை நினைவு கூர்ந்து
பங்கிடுவாள் அப்பத்தை வீட்டில் சேர்ந்து
நலியாது வந்தோர்க்கும் சீவ அப்பம்
நல்விருந்தாய் அமைந்திடுமே, கருவில் அன்று
ஒலியாது தன்னிரத்தம் பாலாயீந்தாள்
உத்தமனின் பலியையின்று உயர்த்தினாளே!

## மைந்தனோடு வாசம்

பொன்னிதயப் புதல்வனவன் பிரிந்த பின்னர்
பூவுலகில் பன்னிரண்டு ஆண்டு காலம்
அன்னையவள் வாழ்ந்துவந்தாள் மகனாய்ச் சேவை
அருளப்பர் செய்துவந்தார் எபேசு ஊரில்
பின்னவளைப் பெருமானார் அழைத்தார் அந்தப்
பேரின்ப வீட்டினிலே மகனா ரோடு
பெண்ணிலவள் அரசியென முடியும் சூடிப்
பேணிஎமைத் தூக்குமொரு ஏணி யானாள்.

---

கருவாய் இருக்கும்போது தன் இரத்தத்தை உணவாய்க் கொடுத்தாள். இயேசு மனிதவாழ்வை அவளிடம் பெற்றார். இப்போது அப்பத்தைத் தெய்வமாக மாற்றுகிறார். அன்னை தெய்வீக வாழ்வையும் அன்பையும் அவரிடம் பெற்றுக்கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சத்தியத்தின் பேழை

பூவினிலே குற்றமற்ற புனித மாது
பொன்மொழியின் அன்புமகன் போற்றும் மாது
சாவினையே வென்றிட்டாள் புனிதம் பூத்த
தந்தநிறக் கல்லறையைத் திறந்த போது
ஆவலுடன் நறுமணமே கமழக் கண்டார்
அன்னையவள் விண்ணகமே எழுந்து சென்றாள்
தேவுலகின் சுவர்க்கத்தின் இராணி என்று
திருப்பெயரைப் பெற்றிட்டாள் தெய்வப் பொன்னி.

### மண்ணை முத்தமிடுவர்

எண்ணரிய எழில் ஞானச் சுரங்கம் என்னும்
ஏழைகளின் திருமகளார் வாழ்ந்து வந்த
கண்ணினிய மலையினிலே கோயில் ஒன்று
கண்டிடலாம் அதன்பெயரோ மரியாய் வீடு
இன்றுமந்த இடத்துக்கு மக்கள் செல்வார்
இவ்வுலகின் றோசாப்பூ மலராய் வாழ்ந்த
புண்ணியத்தின் பூவையினை நினைவு கூர்ந்து
பூமுடிகள் வைத்துமண்ணை முத்தம் செய்வார்.

### சீமாட்டி

வீசுகின்ற கதிரவனின் ஒளியும் மங்கும்
வெண்பனியின் அழகுசிந்தும் ஆடை கட்டி
தேசுலவும் சந்திரனைப் பாதம் தாங்கத்
திருமுடியில் பன்னிரண்டு விண்மீன் சூழக்
காசினியில் காட்சிதந்த கற்பின் தெய்வம்
கலை கடந்த பொற்கோயில் ஞான பீடம்
நீசருக்கும் கால்மாட்டில் வந்து சேர்ந்தால்
நெஞ்சுருகும் சீமாட்டி நேசத் தாயே!

இடத்தின் பெயர் Ephesus Nthapy; Meryem Ana (Mary's House) Pobe John Paul 11 went there t. pray in 1979.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அதிகாரம்
# ஈழத்து இராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# 43. ஈழ நாடு

அன்பு பொழியும் அமுத மொழி
அலைகள் தடவும் புனித நிலம்
இன்பம் குலவும் இனிய முகம்
எங்கும் கல்விப் பணித்தலங்கள்
பொன்னின் நன்னீர்க் கமநிலங்கள்
போற்றும் பண்பின் புகலிடங்கள்
கண்ணின் இனிய யாழ்ப்பாணம்
கனவில் வந்து முத்தமிடும்.

கப்பல் துயிலும், கண்விழிக்கும்
கண்ணுக் கினிய துறைமுகங்கள்
செப்பும் கோயில் திருத்தலங்கள்
தென்றல் உறங்காக் கீரிமலை
ஒப்பில் லாத முக்கனிகள்
உயர்ந்து வளரும் புகையிலைகள்
அப்பால் காட்டின் வளம் பறித்து
• ஆடை யணிந்த திருநாடு.

அன்னை என்பாள் அரியதெய்வம்
அப்பன் முயற்சி அவதாரம்
தென்னை பனைகள் நம்சுரங்கம்
தெய்வம் நமக்குத் தேன்கூடு
மன்னும் கடலோ வளம் சுரக்கும்
மண்ணைக் காப்பார் இளைஞர்களே
என்றும் அவர்கள் வரலாறு
இசைக்கும் தென்றல் ஈழத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வளம்

தென்னை மரத்தினில் முற்றிப் பழுத்திடும்
தேங்காய்வீழ்ந்து
வண்ணக் கமுகின் குலையைச் சிதறி,
வருக்கைகளை
நண்ணிக் குடைந்துகீழ் மாங்கனி சிந்தி,
நலஞ்சிறந்த
மண்ணில் சுவைதரும் வாழைக் கனியை
மயக்கிடுமே.

வருக்கை: பலா

### மொழி இவர்கள் விழி

மொழியெனும் தெய்வத் தமிழெனும் தாயை
முழுவுலகில்
விழியினில் பாவை எனநினைந் தேற்றியே
வீடுகளில்
அழிவிலாத் தூய தனித்தமிழ் பேசி
அரங்குகளில்
பழியிலா முத்தமிழ்ப் பூக்களை வைத்துப்
படைப்பரன்றே.

பாவை-கண்ணின் கருமணி

### குயில் இன்னிசை

தேமாங் கிளையினில் பூங்குயில் பாடிடத்
தீங்குரலில்
சீமானைப் போற்றி இளம்பெண்கள் கோயிலில்
செப்புமிசை
பூமாங் குயிலின் இசையென எண்ணியப்
பெண்குயிலும்
கோமனே வாவென சோலைகள் சுற்றியே
கூப்பிடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புட்கள்

தேனில் குளித்ததும் சேக்கையை விட்டுச்
சிறகடித்து
வானிற் பறந்து சிறகை உலர்த்தி
வரும்புட்களோ
வேனிலில் ஆண்பனைக் கள்ளைக் குடித்து
மிகவெறியால்
கானமும் பாடிடக் காகங்கள் கேட்டுக்
கரையுமன்றே.

### தமிழுக்குத் தீங்குவந்தால்

பண்ணுக் குருகும் விலங்காம் அசுணம்
பறைகேட்டதும்
மண்ணில் இருக்கும் இடத்தே இறக்குமாம்
மற்றது போல்
எண்ணுந் தமிழுக்குத் தீங்கெனும் போதில்
எதுவரினும்
கண்ணுக் கிமையெனக் காப்பர் இலையெனில்
களம்புகவே.

காய்மாண்ட தெங்கு.... சீவகசிந்தாமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. மலைநாடு

இரங்காத மலைக்குலங்கள் இராணுவத்தின் இழிசெயல்கள்
எல்லாம் கண்டு
கருங்காட்டால் தலைமூடிக் கடுந்தவத்தைச் செய்திடவே
கண்ணீர் ஓடிப்
பெரும்புனலாய் நதிகளென நாலூரும் பெருக்கெடுக்கும்
கரும்பும் நெல்லும்
வரம்பெற்றோம் என்றுயரும் நிலமடந்தை கொடிசெடியால்
வதனம் மூடும்.

***மாவலி கங்கை***

முத்தினொடு பொன்திரட்டி மணியுருட்டிக் கல்லுருட்டி
முகடு பாய்ந்து
நித்தநித்தம் புதுப்புனலை நெஞ்சுருட்டிக் காடுவயல்
நிறைய வார்த்து
தத்திவரும் மரமிழுத்து மண்ணிழுத்து மலர்க்கையால்
தவழ்ந்து வந்து
முத்திதரும் கடவுளடி சேர்வார்போல் மாவலியும்
முடுகும் அம்மா!

மலைக் குலத்தில் நீ பிறந்தாய் தமிழ்ஈழம் காணவென
வளைந்து வந்தாய்
குலக் கொழுந்தே யாழிசையும் நடனமொடு நாட்டியமும்
குழலும் கற்றாய்
நிலத் தொடரை அலங்கரித்தாய் நீநடந்த வழியெல்லாம்
நிறைந்த செல்வம்
கலைக்குயர்ந்த தமிழ்நாட்டுப் பெண்ணாகக் கம்பனவன்
கவிபோல் வந்தாய்.

---

கருங்கற்பாறைகளால் அமைந்தமையால் இரங்காத மலைக்குலங்கள் என்றார். இலங்கை நாட்டின் மத்தியில் உள்ளது மலைநாடு. அங்கிருந்து நான்கு திசையும் பார்க்கமுடியும். எனவே இலங்கை இராணுவம் செய்த இழி செயல்களை மலைக்குலங்கள் கண்டு கண்ணீர்விட அக்கண்ணீர் அருவிகளாய் ஊறி ஆறுகளாய் நாலூரும் செல்லும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. திருமலை மட்டுநகர்

காலைக் கதிரவனார் கடலலையில் முகம்கழுவ
நீலக் கடலலைகள் நிலமகளை முத்தமிடும்

வண்ண முலாம் பூசியவர் வானவெளி வீதிவர
தென்னைகளும் புன்னைகளும் தீங்காற்றில் சாய்ந்தாடும்

மாபலா வாழை மதுரக் கனி சிதறும்
பூ விலே வண்டினங்கள் புதுப்பண்ணில் யாழ்பாடும்

வாவிகளில் நீருயரும் வயல்மணிகள் நெல்லுயரும்
ஆவின்பால் தேனோடு ஆங்கமுதம் தேங்கிடுமே.

தேன்நாடு மீன்நாடு சோறுடைய பால்நாடு
வான்நாட்டார் நாவூறும் மட்டுநகர்க் கோன்நாடு

கடலரசன் எனச்சொல்லும் வெடியரசன் ஆண்டுவந்த
இடரறியா முற்குகரின் இனிய மருதநிலம்

புலியன் குகச்சந்திரன் போற்றுலக நாச்சியார்
நலியா இளஞ்சிங்கம் நலன்காத்த மட்டுநகர்

கப்பல்களைத் தாலாட்டிக் கண்அயர வைக்கின்ற
செப்புந் திருமலைக்கு ஒப்புண்டோ கீழ்நாட்டில்

ஆறு வளம்பெருக்க அமுதவயல் நெல்சொரிய
சோறு கொடுத்த சோணாடு மட்டுநகர்

மாநிலத்தில் கீழ்திசையின் வரலாற்றைச் சொன்னவர்கள்
*தானியத்தின் கூடையெனச் சாற்றியதை மாற்றுவரோ?

*Granary of the East



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றார்க்குப் பாரி அருங்கொடைகள் அன்றீந்தான்
வற்றா மகாவலியும் வளங்கொடுக்கும் வள்ளலன்றோ?

மண்ணை இழந்திருப்போம் மடியில் பிடி குறைவோம்
கண்ணில் இனிய திருமலையைக் கைவிடவோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. வன்னி நாடு

***குறுநிலமன்னர் ஆண்டனர்***

குளங்களை அமைத்துக், கண்போல்
குடிகளைக் காத்துச் சொல்லும்
வளங்களைப் பெருக்கி, நெல்லு
வரகொடு சாமை செய்து,
களங்களைக் கண்டு, மாற்றார்
கழுத்தினைக் கொய்து, வீரம்
முழங்கிடும் வன்னி நாட்டை
முறைப்படி மன்னர் ஆண்டார்.

***வன்னிநாட்டின் எல்லை***

சொல்லரும் முல்லைத் தீவு
தொடக்கமாய் மன்னார் மட்டும்
தொல்லையில் வன்னி நாடாய்ச்
சொல்லுவார் வரலா றெல்லாம்
வில்லினால் வீரம் காத்த
வேந்தர்கள் சாய்ந்த போது
அல்லியைப் போலே பெண்கள்
அரசினை ஆண்டார் என்பார்.

***குளங்கள்***

பளிங்கெனும் குளங்கள் தோறும்
பட்டொளி அல்லி பூத்துத்
துளங்கிடச், செங்கால் அன்னம்
சுற்றுதல்; மீன்கள் சூழ
விளங்கிடு வானம் கீழே
வீழ்ந்தது திங்களோடு
பழங்கதை யன்று இன்று
பாரும்என் றுரைத்தல் சாலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீரமன்னர்

வானரம் உச்சி காணா
மரங்கள்சூழ் வன்னி நாட்டின்
கோனென வாழ்ந்தோர் எல்லாம்
கொடுந்திறல் கொண்டவீரர்
ஈனமார் துவக்கை நீட்டி
இடங்களைப் பிடிக்க வந்தோர்
நாணிட அரசு செய்தார்
நடுங்கினர் மாற்றார் கண்டே.

### நெல்வயல் நிறைந்த நாடு

வினைப் பெரும் சூழ்ச்சி மிக்க
வேந்தர்கள் வாழ்ந்த நாடு
நினைப்பினில் நெஞ்சம் வாழ்த்தும்
நெல்வயல் நிறைந்த நாடு
தினைத்திடர் காவல் செய்யும்
செல்வியர், பகைவர் வந்தால்
கனைத்திடும் குதிரை அஞ்சக்
களிற்றினை உதைத்த நாடே

### வெள்ளையர் வன்னியர் துணையை வேண்டினர்

வெள்ளையர் வந்து நாட்டை
விருந்தெனக் கவர்ந்த போது
புள்ளிமான் திரியும் வன்னி
புகுந்திலர், பயந்தே நின்றார்
கொள்ளியாய் நினைந்தார் அந்தக்
குறுநில மன்னர் கூட்டம்
வள்ளல்கள் என்று வாழ்த்தி
வாசலில் பணிந்து நின்றார்.

குறுநில மன்னர் கூட்டத்தாரை கொடைவள்ளல்கள் என வெள்ளையர் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தினில் திறம்பா மன்னர்
ஆற்றலில் சிறந்தோர் ஆனால்
மறத்துறை வந்த போது
வாளொடு மூளை மின்ன
திறத்துறை அனைத்தும் ஆய்ந்து
செய்வன ஓர்ந்து செய்து
புறத்தினில் இருந்து வந்தோர்
பொசுங்கிடத் தடயம் செய்வார்.

வீரம் காட்டவேண்டிய ஒரு தருணம் வந்தால் வாளோடு உபாயமான மூளையும் பயன்படுத்தி எதிரிகளை மாய்ப்பர்.

### வன்னிநாட்டில் அடங்கிய இடங்கள்

தொல்லைகள் அகற்றிடும் **முல்லைத்தீவு**
திருவிற் சிறந்த **கரிக்கட்டு மூலை**
அரசின் தலைநகர் **பனங்கா மத்துடன்**
**தென்னை மரவடி** சிறந்தமேற் பற்று
செந்நெல் விளைவயல் **முள்ளிய வளையும்**
நச்சினார் கினிய **பச்சிலைப் பள்ளியும்**
இச்சகம் போற்றும் **புதுக்குடி யிருப்பு**
யானைகள் பிளிறும் **பூநக ரியுடன்**
தேனிறால் துளிர்க்கும் **ஓமந்தை** யெனச்
சேர்ந்தநா டனைத்தும் வன்னியர் நாடென
ஆய்ந்தவர் கூறினர் அறிந்திட வென்றே.

### வன்னிநாட்டின் விருந்து

அமிழ்தெனும் சோற்றில் கட்டித்
தயிரினைக் கிடத்தி ஆங்கு
தமிழ்எனும் தேனை ஊற்றி
தாளித்து இலைகள் இட்டு
இமிழ்கனி பலவுந் தந்து
இன்சுவை அடிசில் ஈவார்
கமழ்ந்திடும் கையைத் தொட்டால்
கவிதையே பாடச் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாட்டுவளம்

கரும்பொடு செந்நெற் காடும்
 கவினுறு கமலம் பூத்த
பெரும்புனல் குளங்கள் ஆம்பல்
 பிரிந்திட உழக்கும் மேதி
சுரும்புகள் பாட, நாரை
 துரத்திடும் மீன்கள், தென்னம்
குரும்பைகள் அமுத நீரைக்
 குலைகளாய்ச் சுமக்கும் கண்டீர்.

பேதி–எருமைகள். இமிழ்கனிப்பிறக்கம் – கம்பராமாயணம், பிலம்புநீங்கு படலம்–893

## வன்னிநாட்டின் கடைசி மன்னன்

### பண்டாரவன்னியன்

கண்டவர் வணங்க முல்லைத்
 தீவினில் காவல் செய்தோன்
பண்டார வன்னி யன்பேர்
 பாரத ஐவர் தம்பி
மண்டலம் முழுதும் ஆள
 வழிகண்ட ஆங்கி லேயர்
தொண்டையில் தூண்டில் போலத்
 தொங்கினான் சரிதம் சொல்லும்.

தொங்கினான்: வீரத்தில் பாரதவீரருக்கு அடுத்தவன் என்பது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்ற இயலாமை

கண்டியைப் பிடிக்கச் சென்று
கரையிலாச் சேதம், அச்சம்
கொண்டனர் ஆங்கிலேயர்
கொற்றவன் கண்ணுச் சாமி
அண்டையில் வன்னி நாட்டின்
அதிரடிப் படையைக் கேட்டான்
விண்டலம் தன்னில் நின்று
மீன்விழுந் தென்ன வந்தார்.

### ஆங்கிலேயர் வன்னியைத்தாக்கல்

தோற்றவர் பலநாள் ஆய்ந்து
துயர்தரும் தூண்டல் போக்க
ஆற்றல்சேர் வன்னி நாட்டின்
அரசனைத் தாக்க எண்ணிக்
கூற்றமாம் துவக்கை ஏந்திக்
கூலியாய்ப் படைகள் சேர்த்தார்
சீற்றமாய் எழுந்த வன்னி
சிதைந்திட நடந்த போரில்

### மன்னன் சிக்கினான்

கற்சிலை மடுவில் மன்னன்
கண்டவோர் இராம தூதன்
பொற்சிலை கொண்டு வந்து
போர்செய்ய நின்றாற் போன்று
அற்புத சூழ்ச்சி செய்து
அன்னியர் தலைகள் கொய்தான்
கற்பகம் சரிந்து மாற்றார்
கைகளில் சிக்க லானான்.

இராமதூதன்: அனுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *வெற்றிவிழா*

வெற்றியில் களிப்பு மிக்கோர்
விழாவினை எடுத்த வேளை
கொற்றவன் நழுவி விட்டான்
குண்டொடு துவக்கு முண்டேல்
நற்றவம் புரியா நாடு
நாய்களின் கையில் போமோ
அற்றவ ரானோம் வன்னி
ஆணவம் அழிந்த தன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. மன்னார்

*நாட்டுச் சிறப்பு*

மலைகளில்லை என்றகுறை மன்னாரில் இல்லை
வளம் பெருக்கும் குளங்கள்வெட்டி வாழவைத்தார் மன்னர்
இலைமறைந்த காய்களென எங்கெங்கும் குளங்கள்
ஏரியிலே நீர் நிறைந்தால் ஈழம்எங்கும் நெல்லே
குலைகுலையாய் நெற்கதிர்கள் வாடை அசைந்தாடும்
கூட்டமென யானைவந்து கும்மாளம் போடும்
உலகமென்ற மேடையிலே ஆடுதற்கு வந்த
உயிரினங்கள் குளக்கரையில் ஒலிபெருக்கும் காண்பீர்!

ஏர்முனையில் பாடுபடும் உழவனெங்கள் தஞ்சம்
இளம்மனைவி எடுத்துவந்த பழங்கஞ்சி அமுதம்
நேர்வழியில் மண்திருத்தி உடல்பிழிந்து வாழ்வான்
நெஞ்சமதில் கஞ்சல்குப்பை கொஞ்சமேனும் இல்லை
ஊரினிலே வேலையில்லை என்றுசொல்லிப் பிறவூர்
உழைப்பதற்கு ஓடுகின்ற இளந்தமிழர் ஆங்கே
வேரறுந்த கொடிபோல வாடுகின்றார் பணத்தின்
வீக்கமொன்றே ஆக்கமெலாம் தூக்கிவிடுமாமோ?

காடுகளை வெட்டியவர் கழனிகளைச் செய்தார்
கனிமரங்கள் நட்டவர்கள் இனியபயன் கண்டார்
வீடுகளைக் கட்டியிங்கு மந்தையினம் வளர்த்தார்
வேந்தர்களாய் வாழுகின்றார் வெங்காயம் நட்டு
தேடியதே தேட்டம்இதைத் திரிபவர்கள் கேளும்
சீரழிந்த பேராசை மதுமயக்கம் வேண்டாம்
நாடிருக்கு நிலமிருக்கு நமதுசனம் இங்கே
நல்லதுணை யாயிருக்க நாம்பறக்க லாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதி வருணனை

### அருவி ஆறு

மலைகளைப் பிழிந்து ஊறுநீர் எடுத்து
வழியிலே சோதரர் பலரை
நலமுடன் சேர்த்து நடையினைப் பயின்று
நாட்டியம் வழியிலே கற்றுக்
குலவுதோள் முழுதும் பூமலர் சுமந்து
குபுகுபு தாளமும் பயின்று
நிலவிலே நின்று உலகிலே குதித்த
நேயமார் செல்வியும் நீயோ?

மாணிக்கத் தீவாள் இலங்கையாம் மாது
மாங்கனி வடிவமாய் அமைந்தாள்
கூனியே போனாள் மடுவினை வணங்கிக்
குறையிலாப் பதியெனும் மன்னார்
வாணியாய் விளங்கும் மாதர்கள் அரசி
மடுவிலே வாழ்ந்திடும் செல்வி
காணவே என்றுநீ கடிதினில் வந்தாய்
கையினில் மாலைகள் கொணர்ந்தாய்.

தமிழ்நிலம் குளிரச் சந்தனம் பூசித்
தளிர்க்கையால் *நெற்றியைத் தடவி
அமிழ்தெனும் நன்னீர்ச் சுனைகளை நிரப்பி
ஆடியே வளைந்துநீ நெளிந்து
கமழ்ந்திடும் பொழில்கள் வயல்களை அமைத்துக்
களித்திடும் யாழிசை மீட்டு
உமிழ்திரைக் கடலாம் தலைவனைச் சேர
உவப்புடன் ஓடிடும் பெண்ணே!

*நெற்றி யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் வருணனை

கங்கையாம் ஆறு இமயத்தை வாரிக்
கடைந்திடும் மணிகளை ஒதுக்க
வங்கத்துக் கடலில் வந்தவை குவிந்து
வரிசையாய்த் தலைமன்னார் வருமே
இங்குள களனி ஆறொடு வளவ
கங்கையும் இரத்தினம் கொணர்ந்து
சங்கின்முத் தோடு நவநிதி சேர்க்கும்
தவக்கடல் திருமன்னார்த் தலமே.

சங்கிலி மன்னன் காலத்தில் இங்கே
சாவினைத் தழுவினார் மக்கள்
தங்களின் இரத்தம் தாரையாய் வார்த்தார்
சமயமாம் பயிர்தழைத் திடவே
மங்கிடா வேத சாட்சிகள் வாழ்ந்த
மாதோட்டம் எனும்நிலம் போற்றப்
பொங்கிடும் கடலும் அலைகளை உயர்த்திப்
புகழ்ந்திடும் உரைகளே இரைச்சல்.

கானகச் செல்வி காப்பெனச் சொல்லிக்
கைகளால் அவள்திசை கூப்பி
மீனவர் கடலில் படகினைச் செலுத்தி
வியப்புறு பெருங்கடல் புகுந்து
யானையும் பிடிக்கும் வலைகளை விரித்து
இயந்திரம் பாரத்தால் அனுங்க
மீனினம் கொண்டு கரையினை அடைய
விரிந்திடும் நெய்தலின் விளைவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

புன்னைமரப் பூங்கொத்தின் தாதுவீழ்ந்து
புதுமணலில் மணம்பரப்பும்; இளையோர் ஆடும்
சின்னஇல்லைச் சிதைத்துவிட்டு அலைகள் ஓடும்;
செந்தாழை தழைஅவிழ்ந்து காற்றில் ஆடும்;
தென்னையிலே செவ்விளநீர்க் குலைகள் மீது
தீதறியாக் காதலினால் அன்றில் ஏங்கித்
தன்துணையைத் தேடியங்கு அழைக்கும்; முள்ளி
தலைஅசைக்கப் பேரலைகள் ஓலம் கேட்கும்.

## கோடைகாலம்

### *சோழக்காற்று*

கடலலை மெழுகக் கரையிலே தெரியும்
கலக்கிய நுரைகளின் திரளாய்
நெடிதுயர் முருங்கை சோழகம் தாக்க
நிலத்திலே மலர்களை உதிர்க்கும்
மடலுள கங்குல், பனைகளின் ஏவு
கணையென அயல்களில் பாயும்
இடைநிலம் பரந்த நிழல்தரும் மரங்கள்
இழந்தவோ தாலியை என்பர்.

கங்குல்மடல் ஏவுகணை போன்றது

### *பனைகள்*

வற்றிய ஓலை கலகலத்திடவே
மற்றுள ஓலைகள் பார்த்து
கற்றவர் ஞானம் பெற்றவர் வீணாய்க்
கத்துதல் இல்லையென் றுரைக்கப்
பற்றிளங் குருத்து கிழவியைப் பார்த்துப்
பருவமும் போனதோ என்ன
சுற்றமும் பகைத்து வெறுத்திட ஓலை
சுழன்றுமே விழுந்தழும் கோடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரங்கள்

வாகைகள் கீழே அசோகுகள் அதன்கீழ்
வீரைகள் மருதுகள் நாவல்
கூகைகள் காணாக் குளிர்தரும் மரஞ்சூழ்
குகைகளை காணவே அச்சம்
மேகமே உரஞ்சும் மரங்கள் தங்கீழே
விளங்கிடும் மரங்செடி காக்கும்
யாகமே செய்யும் மனிதன்தன் நிழலில்
யாரையும் அணைத்திலன் அன்றோ?

(வேறு)

### மாரி காலம்

கருங்கடலில் நீர்முகந்து கறுத்து வானில்
காரானை எனக்கூடி வலமாய்வந்து
முரசெறிந்து இடிஇடித்துக் கோல்கோ ணாத
முன்னாளில் சோழமன்னர் வாள்போல் மின்னி
இருள்மேகம் சொரிமழையில் பருகி ஆங்கு
இடர்தீர்ந்த மரஞ்செடிகள் கொடிகள் மீண்டும்
அருள்கூர்ந்த செல்வியிடம் வரம்பெற்றார்போல்
ஆனந்தம் கொண்டங்கே ஆடுந்தானே!

### நாவற்பழமென வண்டைப் பொறுக்குவார்

முல்லைநிலம் எங்கணுமே தழைத்த தாலே
மூழ்கியது அழகினிலே மாலைக் காலம்
முல்லைமலர் மொய்த்திருந்த வண்டுக் கூட்டம்
முசுட்டையிலே வானத்தின் மீன்கள் தூங்க
நல்லிரவாய் விட்டதென்று பறந்து சென்று
நடுவழியில் குடிவெறியில் வீழ்ந்த போது
நெல்வயலால் வந்தபெண்கள் நாவல் என்று
நிலங்குனிந்து பொறுக்கிடவே பறக்கும் வண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *வானத்தில் செபமாலை*

அந்தியிலே செவ்வானம் நோக்கிச் செல்லும்
 அழகுவெண்மைச் சிறகுடைய பைங்காற் கொக்கின்
விந்தைபெறு கூட்டமொன்று வான வீதி
 வெளியினிலே வளைந்துகொண்டு வரிசையாகத்
சுந்தரமாய்ச் செல்லுவதைப் பார்த்தோர் வானம்
 சொல்லுசெப மாலையென நினைப்பார் ஆங்கே
அந்தரத்தில் மணிகோத்த வாறு தோன்றும்
 அழகினிலே மணிமாலை விரித்தாய் அம்மா.

(வேறு)

### *மாதோட்ட வயல்கள்*

குளக்கரை அருகிற் பசுங்கடல் என்பர்
 குனிந்திடா நெற்பயிர் கோடி
செழிப்புற ஆடித் தென்றலிற் பாடிச்
 சிறுசிறு குடலைகள் கட்டக்
களிப்புறக் கண்ட யானைகள் வந்து
 கவ்விய நெற்கதி ரோடு
பழிப்புற நின்ற நிலையிலே துயிலும்
 பாடுவார் குறிஞ்சியைக் கேட்டே.

குறிஞ்சிப்பண்பாடக்கேட்ட யானைகள் கண்துயிலும்

வளர்த்திடும் இளமான் மருதடி வீட்டு
 வாசலில் வளமைபோல் வந்து
அழைத்திடும் தலைவன் இல்லையோ என்று
 அடிகளை வைத்துமுன் சென்று
களைப்பினால் அவனோர் வரிப்புலித் தோலில்
 கண்துயில் கொண்டிட, வாலைச்
சுழற்றியே பாய்ந்து சுரைக்கொடிக் கொம்பில்
 சுற்றிடத் துள்ளிடும் பதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வர்த்தகப் பழம்

அதிமதுர மாயினிக்கும் அருங்கோடைக் கேற்ற
அழகான பழங்களவை மத்தளங்கள் போலப்
பதியினிலே படர்கொடியில் இலைதெரியாக் காய்கள்
பச்சைநிறம் வெட்டிவிட்டால் பவளநிறம் அம்மா
குதிரைமுட்டை என்றுசொல்லி பரமார்த்த குருவின்
கொள்ளிவைத்த சீடனவன் கொண்டுவந்த காயே
மிதிலையிலே சனகன்மகள் சீதைமுகம் போலே
வெளிவயலில் வர்த்தகக்காய் விளைந்திருக்கும் பாரீர்.

### கத்தரி வெருளி

காடுகளை நீக்கிவிட்டுக் கழனிகளை ஆக்கிக்
கத்தரியை வைத்துவிட்டார் கண்ணிரண்டும் ஏங்கத்
தேடிஎந்த நாவல்களில் நிறமெடுத்தார் பூச
சிந்தனையே கிறுங்குதடி திருவருளை நினைத்தால்
மேடுகட்டி, காற்சட்டை மேற்சட்டை போட்டு
மீசைவைத்த வெருளியொன்றைத் தோட்டத்தில் வைத்தார்
சூடுகண்ட பூனையென ஓடுதடா எருமை
சுப்பர்கண்டு சிரிக்கின்றார் அப்பர்செய்த கூத்தை.

## நல்லதண்ணீர் இறக்கம்

### குரங்குகள் நீர்பருகுதல்

வேறொரு கனியும் விரும்பிடோம் என்னும்
விருப்புறு பலாச்சுளைச் சாறும்
கூறிடும் வாழைக் குலைகளின் சாறும்
கொப்புதிர் மாங்கனிச் சாறும்
ஆறெனும் அருவி தலையிலே கொணர்ந்த
அமுதெனும் அரியநீர் கலந்து
தேறலை யாக்கச் சிறந்தநீர் என்று
சிந்தையில் எண்ணியே குடித்து

தேறல்: தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்குகள் கரம் கூப்புதல்

பாலையில் ஏறிப் பலமுறை வீழ்ந்து
பக்கலில் கொன்றைகள் உதிர்த்த
கோலமார் பொன்னின் மணமலர்ப் படுக்கை
கூனியே கண்துயில் கொள்ள
ஆலயம் செல்லும் அடியவர் ஆங்கு
ஆயிரக் கணக்கினில் கூடி
மாலைகள் ஓதக் கடுவனும் கண்டு
மகிழ்ந்துமே கரங்களைக் கூப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp, illegible]

# 48. மருதமடு

### தாமரை அல்லி ஆராதனை

மலர்களின் அரசி தாமரை என்பாள்
மங்கல விளக்குகள் கொழுத்தி
இலைகளை நீர்மேல் கைகளாய் விரித்து
இன்னிசை வண்டினால் எழுப்பிக்
குலமகள் வசிக்கும் கோயிலைப் பார்த்துக்
குறிப்பொடு பிரார்த்தனை செய்து
நிலமகள் துயில அல்லியை அழைத்து
நீயினி இதழ்விரி என்பாள்.

### மரங்கள் தலைவணங்குதல்

கொன்றைகள் குலுங்கிப் பொன்மலர் சொரியும்
குளிர்தரு வாகைகள், கொண்டல்
அன்றுதாம் அவிழ்க்கும் பூக்களை உயர்த்தி
ஆரத்தி அங்கையால் எடுக்கும்
தென்றலை ஊதும் மாபெரும் மருது
செழித்த தன் சென்னியைத் தாழ்த்தி
மன்றிலே வாழும் மடுப்பதித் தாயை
வணங்கிட மாமயில் ஆடும்.

### அற்புத பொற்பதி

முல்லைகள் தங்கள் முத்துகள் தெரிய
மோனத்தின் கீதங்கள் பாடும்
அல்லிகள் எழுந்து கூப்பிய கையால்
அம்மையே என்றுகை விரிக்கும்
புல்லுகள் கூட மெல்லிதழ் விரிக்கும்
பொலுபொலு பழம்உதிர் சோலை
அல்லொடு பகலும் உன்புகழ் படிக்கும்
அற்புத பொற்பதி மடுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்னையின் குளிர்ந்த இடம்

அறநெறி வழுவாப் பாண்டிய மன்னர்
ஆண்டவோர் செழிப்புள காலம்
திறம்படு *கொற்கைத் துறையிலே குளிக்கும்
தூயவெண் முத்தெனும் முறுவல்
*பரம்பரை பாடும் குவளையாம் மலரைப்
பழித்திடு கண்களும் கொண்டு
மரநிழல் சூழ்ந்த குளிர்சுனை மாடம்
வந்தனை எந்தனின் அன்னாய்!

### மாலையில் உன்மாலை

கையினால் தடவும் காரிருள், காட்டுப்
பூனையின் கண்களைப் போலே
தையலே முத்து மாலைஉன் மார்பில்
தண்ணொளி பளிச்சிடக் காலும்
ஐயனைத் தாங்கும் பங்கயக் கையில்
அழகிய குடையினைப் பிடித்தாய்
வெய்யிலில் உள்ளம் வெதும்பினோம், நீழல்
விரும்பினோம் திரும்பியே பாராய்.

### முல்லையும் கற்பும்

கொய்தொறும் தோறும் அரும்பிடும் முல்லை
கொடுத்திடும் நறுமணம் காற்றால்
துய்யவோர் கானம் பரவுதல்போலச்
சோலைகள் எங்கணும் பரவும்
மெய்யினில் சுகந்த நறுமணம் வீசும்
மெல்லஉன் கற்பினைப் பேசும்
வையகம் கண்ட மாசிலாக் கற்பை
வாழ்த்திட மரங்கள் பூச்சொரியும்.

---

*பரம்பரை: இலக்கியப் பரம்பரை *கொற்கை : பாண்டியன் கடல் பட்டினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தில் யானை விளையாடும்

மன்னாரின் பெருங்கடலை உறிஞ்சியதால் கருக்கொண்ட
மலைபோல் மேகம்
மின்னாமல் இடிஇடித்து மண்குளிர மனங்குளிர
மழையைக் கொட்டத்
தன்னாசைக் களிற்றுடனே தலைக்குமேல் கையுயர்த்தி
ஆழம் காணாப்
பெண்யானை விளையாடும் பெரியமடு மாமதியே
பிரிய தாயே!

## முயற்செவி குத்தும்

இரும்பினைத் திரித்து இயற்றிய கொம்பின்
இரலைகள் கூட்டமாய் வந்து
சுரும்புகள் ஆடும் கொன்றையின் கட்டில்
துயில்கொளும் மாலையின் போதில்
குறுவிழி – நெல்லிக் காயினைப் போலக்
குண்டுருள் குறுமுயல் பாய
உறுதுயர் கொண்டு முயற்செவி குத்தும் என்(று)
ஓடுமே காடுசூழ் மடுவில்.

இரலைகள்: மான்கூட்டம்

## வெள்ளத்தில் தேரைகள்

முல்லைநிலம் பெருமழையால் தோய்ந்து வெள்ளம்
மூலைமுடக் கெல்லாமே பரந்து பாயப்
பள்ளநிலம் நீராலே நிரம்ப ஆங்கே
பாய்ந்துவந்த அகன்றவாய்த் தேரை கோடி
நல்லமுறை இசைபயிலார் ஒன்றாய்க் கூடி
நாகசின்னம் வீணை குழல் அனைத்தும் சேர்த்துக்
கொல்லும்இசை ஒலித்திடல்போல் கத்தும் போது
குரலறுந்து நின்றனவோ என்ன சேதி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலாட்டு

மருதமடு மாதாவே என்று சொல்லி
மனமுருக மண்ணுருகப் பக்தர் வெள்ளம்
கருணைபெறக் கனிவுடனே பாடக் கேட்டுக்
கத்துகின்ற தேரைகளார் வாயை மூடி
இருளினிலே கண்பிதுங்க எழுந்து துள்ளி
என்றுமிலாக் குயில்கூட்டம் பாடு தென்று
குரலினிமை பழகிடவே வந்து கோயிற்
குளக்கரையில் தாலாட்டுப் பாடு மன்றோ?

மடுவிலே வாழும் மங்கையர் மணியை
மனதிலே நினைந்தழும் வேளை
திடுமென வானம் திறந்தது போலத்
திக்கெலாம் பெருமழை கொட்டி
அடவியின் மரங்கள் மழையிலே முழுக
ஆறுகள் குளங்களும் பெருகக்
கொடையிலே சிறந்த குமணனும் ஏங்கும்
கோமகள் வாசலில் வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. அன்னை நிலா

ஈழத்தில் மடுவை அடைந்ததுன் பாதம்
ஏழையில் சென்றதுன் பாசம்
காலையில் மலர்கள் வாயில் உன் நாமம்
கன்னியர் நினைவிலுன் கற்பு
சோலைக்கும் நிழலைக் கொடுக்குமுன் கருணை
துயரினில் தொட்டதுன் விரல்கள்
மாலையின் மதியைத் துடைத்ததுன் வதனம்
வரங்களால் தேய்ந்ததுன் கையே!

பாலையில் மணலில் பனித்துளி நீரே
பாலுக்கும் சுவைதரும் பேரே
மாலையை எடுக்க மனதினில் இனிப்பாய்
மைந்தனின் வழிகளை விரிப்பாய்
ஆலையில் கரும்பாய் நசிந்திடும் தமிழர்
அமைதிக்கு நீயன்றோ அமுதம்
மூலையில் கல்லாய் அமைந்திடு ஈழம்
முல்லையாய் மணந்தரும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிரக்கமுள்ள பிரிய தாயே

பேரிரக்கம் மிகவுமுள்ள பிரிய தாயே!
பிள்ளைகளின் தெள்ளமுதே! ஓடி வந்தோம்
ஊரினிலே உம்மிடத்தில் உதவி கேட்டே
ஒருவனைநீர் கைவிட்டீர் என்ற சேதி
பாரினிலே எத்திசையும் கேட்ட தில்லை!
பரிசுத்த கன்னிகையே! தயவின் தாயே!
நீர் சொரிந்தோம் மூச்செறிந்தோம் திருமுன் நின்றோம்
நேயமுடன் நாம்கேட்கும் வரம் தாராயோ?

## திருமகளே

சீர் மகளே! திருமகளே!
திருத்தூதன் புகழ் மகளே!
தேடு வோர்க்கு
ஓர் மகளே! உயர் மகளே!
ஒப்பற்ற பெண் மகளே!
உலக மாதா!
பேர் மகளே! பிறை மகளே!
பெருங்கோயில் உறை மகளே!
பேணும் கற்பில்
பார் மகளே! பழம் உதிரும்
பசுங்காட்டில் பக்தர்களின்
பாசத் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணுக்கு வளமீந்த தாயே

***மருதமடு***

அலைமெழுகும் கடற்கரைகள் நினைந்தா யில்லை
அயலினிலே தென்னைமரச் சோலை நீக்கி
மலைமுகடு, மணியுருட்டும் நதிகள் பக்கம்,
வயல்வாவி, பூஞ்சோலை, வெளிகள் நீத்தாய்
கலைக்கூடம், கோபுரங்கள் கழித்து விட்டாய்
கானகத்தில் **மருதமடு** என்று சொல்லும்
இலைக்கடலோ ஈழத்து இராணி உந்தன்
இதயத்தை கவர்ந்திட்ட இல்லம் அம்மா!

***லூர்து பதி***

புண்ணியத்தில் சிறந்தவர்கள் பொருளில் பொன்னில்
புகழினிலே மிதந்தவர்கள் பணத்தைக் கொட்டி
விண்ணகத்தை என்றாலும் விலைக்கு வாங்கும்
விருப்பமுள்ள தனவந்தர் வாழும் நாடு
மண்ணினிலே பெயர்பெற்ற பிர்ரான்சு தேச
மலைக்குகையில் **லூர்பதி** தோன்றி நின்றீர்
பெண்மணியாள் பெர்னதேத் ஆடு மேய்த்தாள்
பேரிரக்க மழைஎங்கும் பெருகிற் றம்மா!

***பத்திமா பதி***

உள்ளத்தில் தெய்வமணம் உடைய மக்கள்
உலகெங்கும் அதைக்கொண்டு திரிந்து ஞான
வெள்ளத்தில் மிதந்தவர்கள் போர்த்துக் கேயர்
வீரத்தில் சிறந்தவர்கள் கடல்கள் ஓடி
அள்ளிவந்த செல்வத்தில் ஆடும் போது
ஆடுகளை மேய்த்திட்ட மூவ ருக்கு
வெள்ளையணி யோடுவந்து **பத்தி மா**வில்
விரித்தனையே செபமாலை விளக்கின் தீபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. திருக்கோயில் தேன் விளக்கு

மருதமர நிழல் உடையாள்
மலர் விரியும் பொழில் உடையாள்
கருதரிய மரக் குடையால்
களையாற்றும் நினைவுடையாள்
சிரசினிலே விண் மீன்கள்
சிரிக்கின்ற சிறப்புடையாள்
மரம் பிடுங்கும் யானைகளும்
மலர் பிடுங்கும் மதிப்புடையாள்

கற்பு நெறிக் காப்புடையாள்
கண்மணியைக் கரம் உடையாள்
நற்கலையின் மதிய மென்னும்
நலஞ்சிறந்த முகமுடையாள்
பொற்பதியில் அரசுடையாள்
புண்ணியத்தின் புகழுடையாள்
கற்கண்டின் கனிவுடையாள்
கைகுவித்தால் மனம் கசிவாள்.

நெஞ்சிரக்கம் மிகவுடையாள்
நீசர்களில் தயவுடையாள்
தஞ்சமெனக் கால் பிடித்தால்
தன்மகனைக் கூப்பிடுவாள்
துஞ்சலின்றிக் கண் இமைகள்
துளைத்தமைதி தேடுகையில்
'அஞ்சல்' என அணைத்திடுவாள்
அடியவரில் அன்புடையாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியப் பந்தல்

அன்னை நீ அருளும் நீயே
ஆறுதல் அளிப்பாய் நீயே
பொன்னும் நீ புகழும் நீயே
புண்ணிய வரம்பு நீயே
பண்ணரும் மதுரத் தாயே
பாவியின் தஞ்சம் நீயே
என்னை நீ இகழ்ந்து விட்டால்
எவ்விடம் செல்வேன் அம்மா.

## பிரிவிலும் பரிவு

ஆயிரம் நாமம் கொண்டாய்
அழைத்திட அன்பு கொண்டாய்
தாயினும் பாசம் கொண்டாய்
தாமரை வதனம் கொண்டாய்
நோயிலே உறவு கொண்டாய்
நொடியிலே பரிவு கொண்டாய்
ஆயினும் பிரிந்தேன் கண்டாய்
அதனையும் பொறுத்துக் கொண்டாய்.

## அமைதி

செல்வத்தால் அமைதி உண்டோ?
தேட்டத்தால் புகழால் உண்டோ?
கல்வியால் பணத்தால் உண்டோ?
கலைகளால் பெண்ணால் பொன்னால்
எல்லையில் வயலால் காணி
இடம்படம் வீட்டால் உண்டோ?
தொல்லையில் மடுத்தாய் பாதம்
தொட்டிடில் அமைதி உண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவமலர்

அம்மையே! உலகுக் கெல்லாம்
அமுதமே! அமைதி தேடி
உம்மையே நம்பி வந்தோம்
உரிமையை நினைந்தோம்; முற்றும்
வெம்மைசேர் நெஞ்சை மாற்றி
விரும்பிடும் அன்பை ஊற்றி
செம்மைசேர் தேனாய்ப் பாலாய்ச்
சீவிக்க அருள்தா ராயோ?

## பெய்யெனப் பெய்யும் மழை

தையலைத் தருமம் வாழும்
தவத்தினை, அமரர் ஏத்தும்
தெய்வத்தைக், கவலை நெஞ்சின்
தீபத்தை, வறியோர் வாழ்வை,
பெய்யென மாரி பெய்து
பெருகிடும் தூய கற்பை,
வையத்தில் பெண்கள் போற்றும்
மகுடத்தை மறக்கப் போமோ?

## உரிமை

மக்களின் தாயார் என்னும்
மகிமைக்கும், பிரிய மைந்தன்
அக்களித் தம்மா என்னும்
உரிமைக்கும், அகிலம் போற்றத்
திக்கெலாம் அரசி என்னும்
சிறப்புக்கும் வரண்டு வந்தோர்
முக்கனிச் சாறே என்று
மொழிதற்கும் உரியாய் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சிறகுகட்டிவிட்டதார்?*

பிறந்தபயன் பெற்றுவிட்டோம் என்றார் கண்டோம்
பேரருளின் மடைதிறந்த(து) என்றார் கண்டோம்
மறந்தவர்க்குப் புத்துணர்வு என்றார் கண்டோம்
மாரிமழை கோடையிலே என்றார் கண்டோம்
இறந்தஉயிர் வந்ததிங்கு என்றார் கண்டோம்
ஏழைகளின் சுரங்கமிது என்றார் கண்டோம்
சிறந்த உந்தன் மலரடியைத் தொட்ட போதே
சிந்தையிலே சிறகுகட்டி விட்டதாரோ?

### *எந்தத் துரோகிக்கும் ஈடேற்றம்*

கற்பழித்து மானபங்கம் செய்தா லென்ன
காடையனாய்ப் பேர்கேட்டுத் திரிந்தாலென்ன
சொற்கேளாக் கயவனென அறிந்தா லென்ன
தொடர்பாக மறியலிலே வாழ்ந்தா லென்ன
பற்பலநாள் குடிபோதை வீழ்ந்தா லென்ன
பஞ்சமா பாதகங்கள் செய்தா லென்ன
அற்புதமாய் அம்மாஎன்(று) அழைத்து வந்தால்
அந்தரத்தில் வந்துதவி புரிவாய் அன்றோ?

### *தேன் கிண்ணம்*

செல்லிவரும் செபத்தினால் உணவுகளை ஒறுக்கின்ற
தூய்மை நிறை விரதங்களால்
வல்லமை பெறுகின்ற இதயமென்ற செம்மண்ணில்
மாசற்றோன் விதையை நடுவான்
இல்லமென்ற வான்வீட்டை நோக்கியது வளர்ந்துவரும்
எளிமையொடு பணிவு சேர்ந்த
நல்லபுது வாழ்விலே மனிதநே யத்தினொடு
நாம்இனிது வாழலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. அன்னையின் குரல்

நேசத்தின் கரங்கள் நீட்டி
நினைந்துமை அழைத்தேன் வாரும்
ஈசனின் அன்பில் வாழ
இன்றைக்கே தொடங்கும்; நானோ
பேசிடும் உங்கள் தாயார்
பிள்ளைகள் புனித வாழ்வில்
ஆசிலா வளர்ச்சி பெற்று
நிறைவினை அடையச் செய்வேன்.

வையகம் மீது நீங்கள்
மகிழ்ச்சியாய் வாழ்ந்து பின்னர்
துய்யபேர் இன்பவாழ்வைச்
சுகித்திடும் என்னோ டங்கு
மெய்யதாய் இதுவே ஆசை
விரும்பியே இங்கே வந்தேன்
உய்யவே வழிகள் சொன்னேன்
உணருவீர் அன்பு மக்காள்!

மன்னிப்பின் பிள்ளை என்பார்
மதிப்பரும் அமைதி; அஃது
பொன்மய அன்பின் பிள்ளை
போற்றிடும் செபத்தின் தோழன்
நன்னயச் செபங்கள், நோன்பு
நாட்டுக்குக் கனிகள் ஈயும்
அன்னதே அமைதி என்று
அறிந்திடும் அன்பு மக்காள்.

25.05.1987இல் மாதா மெட்யூகோறி என்னும் இடத்தில் இளைஞருக்குக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

இறைவனில் ஒப்பற்ற நம்பிக்கை கொள்ளுவீர்
உத்தமர் ஆக வாழ்வீர்
நிறைவுதரும் செபங்களை உருக்கமாய் ஓதுவீர்
நேசத்தின் பீடம் ஆவீர்
கறையற்ற விரதங்கள் ஆன்மீக வாழ்வென்ற
கப்பலில் ஏற்றி வைக்கும்
உறவாகி இறைவனொடு கசடுகளை நீக்கியே
உள்ளத்தில் மாற்ற மடைவீர்.

**கால்இருக்க இடம்**

பால் இருக்கும் பழம் இருக்கும்
பசித்துவந்தால் உணவிருக்கும்
படிக்க நல்ல
நூல் இருக்கும் ஒலி பெருக்கும்
நுண்ணறிவின் திறமிருக்கும்
நோக்கு வோர்க்கு
சேல் இருக்கும் வயலிருக்கும்
தேடிவரும் புகழ் இருக்கும்
தேவ தாயின்
கால் இருக்க இடமில்லை
கல்லான நெஞ்சென்றால்
கவலை யன்றோ?

சேல்: கயல்மீன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52. தயவின் தடாகம்

மாசற்றோன் வாழ்ந்துவந்த மாணிக்க ஆலயமே
தேசத்தின் சித்திரமே தேவுலகின் பூங்காவே.

உண்மை வழிகாட்டும் உத்தமியே மாசற்ற
பெண்மை இலக்கணங்கள் பேசுகின்ற புத்தகமே.

நீர் நிலைகள் அத்தனையும் நெடுங்கடலிற் சேர்த்த பிரான்
சீர் சிறந்த உம்மிடமே திரு அருளைக் கொட்டிவிட்டான்.

இறை ஒளியை அள்ளி இறைக்கும் குளிர்நிலவு
துறைகாட்டும் விண்மீன் சுகமளிக்கம் சஞ்சீவி.

தந்தை தாய் என்பவர்க்குத் தவறாத கை காட்டி
சிந்தையிலே நொந்தவர்கள் தேடுகின்ற தென் தென்றல்.

மைம் பெண்கள் ஆதரவே கதியற்றோர் பெரு நிதியே
ஐம் புலன்கள் ஆள்பவரின் அடைக்கலமே ஆறுதலே.

நோயாளர் துன்ப நுகத்தைச் சுமப்பவளே!
தாயாய் மனக்காயம் தடவும் தளிர்க்கரமே!

தடம்புரண்டு சேற்றில் சறுக்கி விழுந்தவரைத்
திடம் பெறவே தூக்கித் திருஅருள்நீர் வார்ப்பவரே!

எல்லையற்ற பேரழகே இறையருளின் நிறைகுடமே
அல்லலுற்றோர் வேண்டுதலை அணிமுடியில் மணியாக்கும்.

மங்கல மாக மாங்கலியம் காத்துவரும்
தங்கத்தின் தாமரையே தயவின் பெருங்கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நூலகம் ...
... நூலக சேவை
யாழ்ப்பாணம்

மாதர்களின் மாணிககம் வரலாற்றில் பேறு பெற்றாய்
நாதனவன் ஞானமழை நனைகின்ற வண்ணமயில்

உன்னைத் தொழுதுகொண்டே உள்ளம் அழுததம்மா
கண்ணீர்த் திவலையிலே கண்டேன் நிலவு முகம்.

ஐயோ எம்வாழ்க்கை அருந்தீபம் மங்கிவிட
நெய்யாக வந்தாய் நேசத் திரிதூண்டி

மரணப் படுக்கையிலே மாதாஉன் காலடிகள்
சரணமாய் மெல்லவந்து சஞ்சலத்தைச் சுண்டிவிடும்.

கடைவிழியில் நீரொழுகக் கால்நடையில் வந்தவர்கள்
நடைமெலிந்து உனைஅடைந்து குடைநிழலில் விடையறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணின் மைந்தர்

சிந்தினார் இரத்தம் வஞ்சச்
சிறையிலே துடித்தார் மண்ணின்
மைந்தர்கள் வீர வேங்கை
மரபினர் நாட்டைக் காக்கச்
செந்தழல் மிதிக்கும் நெஞ்சர்
திசையெலாம் பகைவர் ஓட
நொந்திடும் அடிமை வாழ்வின்
நுகத்தினைக் கழற்ற வந்தார்.

### சந்தண மரங்கள்

பொங்கியே களத்தில் வந்து
புகழ்பெறும் பூமிக் காகத்
தங்களைத் தியாகம் செய்த
சந்தன மரங்கள் அங்கே
மங்கல வான வீட்டில்
மகிழ்ந்திளைப் பாறு மாறு
திங்களின் பாதம் தொட்டுச்
செல்வியே இரந்து கேட்டோம்.

### அமைதியின் கேணி

நாட்டினைப் பிரிந்தோர் போரின்
நடுவிலே கொதித்து வெந்தோர்
தேட்டத்தை இழந்தோர் சின்னஞ்
சிறுவர்கள் துடித்துச் சாக
வீட்டிலே குண்டு வீழ
வீரிட்டு அலறி வந்தோர்
கேட்டிடும் அமைதி ஊற்றின்
கேணியைக் காட்டு வீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம்

### அமைதி என்ற திருப்பால்

சிரித்திடும் நிலவுப் பூவில்
திருவடி வைத்த தாயே!
விரிந்திடும் துயரம் என்னும்
விரிகடல் நீந்தி வந்தோம்;
எரிந்திடும் ஈழ நாட்டை
இயேசுவின் கண்ணில் காட்டி,
பரிந்திடும் அமைதி என்ற
பாலை நீ வார்ப்பாய் அம்மா!

### ஈழம் நனைந்தது

கண்ணீரின் துளிக ளாலே
காலமாய்த் தமிழர் சிந்தும்
எண்ணரும் இரத்தத் தாலே
ஈழமும் நனைந்த தம்மா!
உண்மையில் உள்ளம் வெந்து
உடலமும் விறகாய்ப் போனோம்
நண்ணினோம் இரக்கம் என்ற
நதியினில் முழுக வந்தோம்

### ஆறுதல் அருள்வாய்

துன்பத்தைச் சுமந்து, கோடி
துயரத்தில் அமிழ்ந்தி ஓடி
இன்பத்தின் வீடு வாசல்
இனசனர் ஆடு மாடு
பொன்பொருள் எல்லாம் விட்டுப்
புயலினில் சருகாய் வந்தோம்
அன்பினால் கருணை காட்டி
ஆறுதல் அளிப்பாய் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

வல்லமை இல்லாக் கைகள்
மாதாவே! உயர்த்தி வந்தோம்
சொல்லரும் பழிகள் பாவம்
சூதுகள் குறைகள் செய்தோம்
நல்லவன் ஈசன் எம்மை
நஞ்சிலா இரச மாக
மெல்லவே மாற்று மாறு
வேண்டுவாய் தூண்டு வாயே.

Mary.
I beg of you calm repose
for those who laid down
their lives for their native land.
I ask of you lasting peace
for my dear country and
for the entire exhausted world.
-Mary Saveus

1953இல் சோவியத் நாட்டில் சைபீரியாச் சிறையில் இருந்த லிதுவேனிய நாட்டு இளம் பெண்கள் நால்வர் கையால் எழுதிய செபங்களில் இருந்து இந்த வேண்டுகோள் இணைக்கப் பெற்றுள்ளது.

துன்பங்களின் சுமையிலும், இடர்ப்பாடுகளிலும், இழப்பிலும் அவமதிப்பிலும் மனித அனுபவங்கள் மரியாயியுடன் கூடி நடப்பதை இங்கே காணலாம் என்கிறார் இங்கிலாந்தின் கருதினாய் பசில் கியூம் அவர்கள் Basil Hume 21. 01. 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ மழை

காப்பியத் தேரில்வந்த தாமரைப் பூவே
கானகச் செல்வியெனக் கண்ட பூங்காவே
கூப்பும் கரத்தில் வரும் வெள்ளைப் புறாவே
குற்றம் பொறுத்தருளும் தங்க நிலாவே

பண்ணில் இசைவரம்பில் உன்பெயர் கேட்டோம்
பாடல் செபங்களிலே உன்பெயர் கேட்டோம்
கண்ணின் மணியே!மடு மண்ணில் உன்பெயர்
கருத்தாய் எழுதியதார்? கானாச் செல்வனா?

கானா ஊரில் தண்ணீரை இரசமாக்கிய உமதுமகனா என்பது கருத்து

மரணம் கதவினிலே வந்து தட்டினால்
மாதாவே உன்பெயரே வாயினில் முட்டும்
சரணம் எமக்களித்து இயேசுவின் தட்டில்
சாகா வரங்கள் பெற்ற பூக்கள் ஆக்குவாய்

வானத்து மீன்கள் மின்னும் மணிமுடி மீது –மடு
மாதாவின் காவியமும் மின்னிட வேண்டும்
ஞானத்துப் பூங்குளத்தில் புதுமலர் தோய்ந்த –தென்றல்
நறுமணத்தைக் காவியத்தில் நயந்திடவேண்டும்

காலையில் கோயில்மணி உன்பெயர் பாடும்
கடும்பகலில் இலைக்கடலின் தென்றல் வந்தாடும்
மாலையிலே அந்திவானம் வண்ணங்கள் போடும்
மாதாவே என்றகுரல் கோயிலை மூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கல வாழ்த்து

மனிதர்கள் தெய்வம் ஆகில்
　　மாதாவின் அடியார் ஆவோம்
இனியொரு குறையும் இன்றி
　　ஈழத்தை அவளே காப்பாள்
தனியொரு நாடே எங்கள்
　　தாயகம் என்று வாழ்வோம்
கனியுதிர் சோலை வாழும்
　　கண்மணி கருணை செய்வாய்!

புண்ணியம் செழித்து வாழ்க
　　பொழுதெலாம் உண்மை வாழ்க
மண்ணிலே அன்பு வாழ்க
　　மனிதரில் நேயம் வாழ்க
விண்ணிலே வெள்ளிக் கூட்டம்
　　விளக்குகள் கொழுத்தி வாழ்த்த
எண்ணரும் அமைதி தந்து
　　ஈழத்து இராணி வாழ்க

**அன்னை என்னை**

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே -திருமூலர்

அன்னை என்னைக் கவிஞனாய் ஆக்கினாள்
பொன்னின் தமிழிலே பொட்டிடு மாறே

-அமுது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியமடு மாதாவே

பெரிய மடு மாதாவே
பிரிய பரன் தாயாரே
கருணையுள்ள உன் இதயம்
கடன் தருவாய் கண்மணியே

திரு மலரின் அழகுள்ளது
சிறுமாசும் அணுகாதது
பெருந் தூய்மைப் பொன் நிலவு
பிறர் துயரம் நீக்குவது

அப்பத்தில் குடியிருக்கும்
ஆண்டவனை யான் பெற்று
இப்புவியில் உம்மைப்போல்
இயேசுவை நான் நேசிப்பேன்

வறியவரில் வறியவராய்
மறுவேடம் கொண்டவர்க்கு
துயர் துடைக்கும் பணியினிலே
தொண்டு செய்வேன் ஆண்டவளே.

Mary, mother of Jesus, give me your heart, so beautiful,
so pure, so immaculate, so full of love and humility that I may be able to receive. Jesus in the bread of life, love Him as you loved him and serve Him in the distressing disguise of the poorest of the poor.

Mother Teresa





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர்மணியும் கவிமணியும்

156901



718CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# இந் நூலாசிரியர் எழுதிய நூல்கள்

- மாதா அஞ்சலி
- நெஞ்சே நினை
- காக்கும் கைகள்
- இவ்வழிச் சென்ற இனிய மனிதன்
- அமுதுவின் கவிதைகள்
- அன்பின் கங்கை அன்னை திரேசா

KOHA
JPL

தொடர்பு:

87 Hazelmere Walk
Northolt
Middlesex
UB5 6UR
UK
0181 845 0887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேட்ட வரம் அளிக்கும்
   கீர்த்தி பெற்ற சீமாட்டி!
காட்டில் குடியிருக்கும்
   கருணை யுள்ள என்தாயே!
பாட்டில் மலர் தொடுத்தேன்
   பாலோடு தேன் எடுத்தேன்
நாட்டில் அமைதி என்ற
   நதியைத் திருப்பிவிடு.

-அமுது-
ஆக்கியோன்

தூய பால் நிறத்தில் ஆடை
   சுந்தரச் சிரிப்பின் ஓடை
ஆயநற் றமிழின் வாடை
   அமுதெனும் புலவர் வேந்தன்
தாயெனும் மடுமாதாவைத்
   தமிழ்க்குலம் தலையிற் போற்ற
நேயமார் காவியத்தை
   நெஞ்சினில் மணக்கச் செய்தான்.

ஈ. கே. இராஜகோபால்
ஈழநாடு புதினம் ஆசிரியர்,
லண்டன்.

கடலளவு கற்பனைகள்
   காடளவு சொற் பெருக்கு
மடல் விரிந்த பூக்கூடை
   மடுமாதா காவியமே

-சம்பந்தன்-

பாட்டுக்கு ஒரு பொற்தேங்காய் உருட்டிய சடையப்பவள்ளல் இன்றில்லை. அந்த மரபு இன்றிருந்தால் மடுமாதா காவியப் பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பொற்தேங்காய் உருளும்.

இரா. ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org